janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 செப்டம்பர் 18 - 24 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 24




**வன்முறைக்கு இடமில்லை**

தமிழ்நாடு, அரசியலில் முதிர்ச்சி பெற்ற மாநிலம்! அனல் பறக்க அரசியல் விவாதம் நடைபெற்ற காலங்களிலும் >>> ப 02



**உதவாது இனி தாமதம்**

தமிழ்நாட்டில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் கட்டணம் மாற்றி அமைக்கப்படுவதாக அரசு >>> ப 03



**தரமான பயிற்சிகளை வழங்கிடுக!**

அரசுப் பள்ளி மாணாக்கர்கள் நீட் தேர்வில் 80 விழுக்காட்டினருக்கும் மேல் தோல்வியுற்று இருப்பதாக வரும் புள்ளிவிவரம் வருத்தத்தை >>> ப 07






## தமிழ்நாட்டில் குறைந்தபட்ச மாத ஊதியம்

# ரூ.21 ஆயிரம்

## சட்டப்படி அறிவிக்க கோரி தமிழகமெங்கும் செப். 13ல் ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்

**கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு ஆதரவான கொள்கைகளை ஒன்றிய அரசு கையாள்கிறது. இதற்காக விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் மீது தாக்குதலைத் தொடுத்து வருகிறது. இதனால், ஒன்றிய அரசை நடத்திவரும் பாஜகவையும் அதன் கூட்டணி கட்சிகளையும் நாடாளுமன்ற, சட்டப்பேரவை தேர்தல்களில் தமிழ்நாட்டு மக்கள் தோற்கடித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைகளுக்கு மாறாக, தமிழ்நாடு அரசு தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் செயல்பட வேண்டும்.**

தமிழ்நாடு அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து, 2022 செப்டம்பர் 13ஆம் தேதி அன்று மாவட்டத் தலைநகரங்களிலும், தொழில் மையங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**கோரிக்கைகள்:**

தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ரூ.21,000 என சட்டப்படி அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் உள்ளாட்சி, மருத்துவத்துறை, ஆஷா, கூட்டுறவு, டாஸ்மாக், பொதுத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பணிபுரியும் நிரந்தரமற்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதம் ரூ.21,000 ஊதியமாக வழங்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு மற்றும் தனி யார் துறைகளில், தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில்நிரந்தர தன்மை கொண்ட பணியிடங்களில் கேஷுவல், காண்ட்ராக்ட், அவுட் சோர்ஸிங் உள்ளிட்ட பெயர்களில் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் ஊதியத்தையும் சமூக பாதுகாப்பையும் இடைத்தரகர்கள் சுரண்டிக் கொழுக்கவுமே இந்த ஒப்பந்த முறை வழி வகுக்கிறது. எனவே, ஒப்பந்த முறைமையை ஒழிக்க வேண்டும். 240 நாள் பணிபுரிந்த தொழிலாளர்கள் அனைவரையும் உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும்.

மின் கட்டணம், வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர் வரி ஆகியவற்றை செங்குத்தாக உயர்த்தியுள்ளதைக் கைவிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், நுகர்பொருள் வாணிப கழகம், மின் வாரியம், ஆவின் உள்ளிட்ட அரசு பொது நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் முயற்சிகளைக் கைவிட வேண்டும்.

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள தொழிலாளர்களுக்கு எதிரான நான்கு சட்ட தொகுப்புகளை எதிர்த்து, ரத்து செய்ய வேண்டும் எனக்கோரி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

கட்டுமான, உடல் உழைப்பு நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் மற்றும் டாஸ்மாக் பணியாளர்களுக்கும் இஎஸ்ஐ மருத்துவவசதி வழங்க வேண்டும். நலவாரியத்தில் இருந்து மாதம் ரூ.6,000 ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.



**வடசென்னை :** வடசென்னை, மத்திய சென்னை மாவட்ட ஏ.ஐ.டி.யு.சி. குழுக்கள் சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு வடசென்னை மாவட்ட தலைவர் எஸ்.குப்பன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி பங்கேற்று, ஒன்றிய அரசு 44 தொழிலாளர் சட்டங்களைநான்கு சட்டங்கள் ஆக்கி தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கிறது. தமிழ்நாடு அரசு அனைத்து தொழிலாளர்களுக்கும் 21,000 குறைந்தபட்ச சம்பளம் உத்தரவாதப்படுத்த வேண்டும். அனைவருக்கும் குறைந்தபட்ச பென்ஷன் 6000 வழங்க வேண்டும். சொத்து வரி, மின் கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும். ஆட்டோ கட்டுமானம் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களை முறையாக செயல்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார். மத்திய சென்னை மாவட்ட பொதுச் செயலாளர் மு.சம்பத், மாவட்டத் துணைத் தலைவர் பா.கருணாநிதி, வடசென்னை மாவட்ட பொதுச் செயலாளர் ஏ.அருள், கட்டட சங்க மாநிலச் செயலாளர் இரா.துரைசாமி, ஆட்டோ சம்மேளன மாநில பொதுச் செயலாளர் ப.மாரியப்பன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்ட செயலாளர் வெங்கடேஷ், முன்னாள் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி மற்றும் ஆட்டோ கட்டிடம் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் பெருமளவில் பங்கேற்றனர். ஹார்பர் சங்க லோகநாதன் நன்றி கூறினார்.

**தென் சென்னை:** சென்னை, சைதாப்பேட்டையில் ஏஐடியுசி தென்சென்னை மாவட்டம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதில் பைக் டாக்ஸிகளுக்கு தடை விதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது. இதில் ஏஐடியூசி தேசிய செயலாளர் வஹிதா நிஜாம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**ஒசூர் :** கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகரில் இணை இயக்குனர் அலுவலகம் எதிரில் ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் எம்.கே. மாதையன் தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.லகுமைய்யா மற்றும் ஏஐடியூசி தோழர்கள் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**கோவை:** கோவை மாவட்ட ஏஐடியூசி கவுன்சிலின் சார்பில் கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு

தொடர்ச்சி 16ம் பக்கம் >>

## 18ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.10.1938

மறைவு 17.09.2004

**J.H.பிரடெரிக் அஜ்**

முன்னாள் பொதுச் செயலாளர், சென்னை துறைமுக ஐக்கிய தொழிலாளர் சங்கம்
முன்னாள் மாவட்டக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி


என்றும் உங்கள் நினைவில் வாழும்

அன்பு மனைவி கிரேஸ் பிரடெரிக் அஜ்
மற்றும் குடும்பத்தினர்

## கட்சிக் கடிதம்



# வன்முறைக்கு இடமில்லை




**பேரன்புமிக்க தோழர்களே!**

**தமிழ்நாடு, அரசியலில் முதிர்ச்சி பெற்ற மாநிலம்! அனல் பறக்க அரசியல் விவாதம் நடைபெற்ற காலங்களிலும் பண்புகுறையாமல், நட்பும், உறவும் தொடரும். தனித்துவம் ஓங்கிநிற்கும் உயரிய விவாதங்கள் மூலம், ஆரோக்கிய அரசியல் விவாதங்கள் மூலம் தமிழ்நாடும், மக்களும் பெரும்பயனடைந்தனர்.**

அரசியலில் கொள்கை பலம் உள்ளவர்கள் இதனைத்தான் விரும்புவார்கள்.

கொள்கை பலம் அற்றவர்கள் அரசியலில் தங்களது கையாலாகாத தனத்தை, பலவீனத்தை மறைத்துக் கொள்ள சாதியை, மதத்தை, கடவுளை நாடுவார்கள். இந்த வழிமுறை வெற்றி தராதபோது, விரக்தியின் உச்சம் சென்று வன்முறையை நாடுவார்கள்.

வன்முறை மூலம் தங்களது ஆதிக்கத்தைநிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்கிற அற்பத்தனமான அரசியலை முன்வைத்து, குறுக்கு வழிகளை பின்பற்றி வருகின்றனர்.

முதலாளித்துவம் வித, விதமான சாகசங்களை கையாள்கின்றது. பலவித யுக்திகளை கையாண்ட போதும் அது நெருக்கடியில் இருந்து மீளமுடியவில்லை. மீண்டும், மீண்டும் புதுப்புது திட்டங்களை உருவாக்குவதும் அவை குறித்து மினுக்கு விளம்பரங்களை செய்து, கவர்ச்சிக் காட்டியும் வருகிறது.

தொடர்ந்து தோல்வி மேல் தோல்விகளை அடையும் முதலாளித்துவம் தனது தோல்விகளை மூடிமறைத்து சாதியை மதத்தை, கடவுளைத் கேடயமாக பயன்படுத்தி தற்காத்துக் கொண்டிருக்கிறது.

மக்களிடத்தில் காலங்காலமாக புரையோடி கிடக்கின்ற மூடநம்பிக்கை, பழக்க வழக்கங்களை மத, சாதிய, கடவுள் நம்பிக்கைகளை தனக்கு சாதமாக்கி பயன்படுத்திக் கொள்ள படாதபாடு படுகின்றது.

மக்களுக்கு பயன்படாத, இத்தகைய கொள்கைகளை எதிர்த்து நாம் போராடிக் கொண்டு இருக்கின்றோம்.

இத்தகைய போராட்டம் இன்று நேற்று அவசர கதியில் தொடங்கிய போராட்டம் அல்ல.

காலங்காலமாக, நீண்ட நெடுங்காலமாக நடந்து கொண்டிருக்கிற போராட்டம், முடிவில்லா போராட்டம் அல்ல, முடிவிற்கு வர வேண்டிய போராட்டம் நாளுக்கு நாள் கூர்மையடைந்து வருகின்றது.

நாம் விஞ்ஞானத்தை ஏற்கிறோம். அவர்கள் அஞ்ஞானத்தை நம்புகின்றார்கள். நாம் அரசியல் அமைப்புச் சட்டத்தை மதிக்கின்றோம். பின்பற்றுகின்றோம் அவர்கள் அதனை நிராகரிக்கிறார்கள். நாம் மார்க்சீய தத்துவத்தை ஏற்றுக் கொண்டு இருக்கின்றோம். ஏனெனில் அது உண்மையானது, விஞ்ஞான பூர்வமானது

ஒட்டு மொத்த உலகம் முழுமையிலும் உள்ள மனித குலத்திற்கு விடுதலை தருவது, ஏற்றத் தாழ்வற்ற புதிய சமுதாயத்தை, சமதர்ம சமுதாயத்தை தருவது. ஆண்டாள் அடிமை நிலையை அது நிராகரிக்கிறது, உயர்ந்தபட்ச ஜனநாயகத்தை போற்றுகின்றது.

ஆனால் அவர்களோ, மனுதர்மத்தை தங்களது தத்து வமாகக் கொண்டுள்ளார்கள். அது அவர்களது விருப்பமாக இருக்கலாம் தவறு இல்லை. ஆனால் அத்தத் துவம் என்ன கூறுகின்றது. எதனை வலியுறுத்துகின்றது என்பது குறித்து பகுத்தறிவோடு பகிர்ந்து கொள்ள வாருங்கள்! விவாதிப்போம்! என்று தான் அழைக்கின்றோம்.

உலகில் வாழும் உயிரினங்களில் மேலான உயிரினம் மனித உயிரினம் என்று கூறுவதை நிராகரிக்க மாட்டார்கள்.

அரிது, அரிது மானிடராய் பிறப்பது அரிது என்று நமது மூதாட்டி மனித உயிரினத்தை போற்றி புகழ்கிறாள்.

மற்ற உயிரினங்களை விட மனித உயிரினம் போற்றப்படுவதற்குரிய காரணம் மனித உயிரினம் மற்ற உயிரினங்களைக் காட்டிலும் கூடுதலான ஓர் அறிவை பெற்றுள்ளது. அது தான் பகுத்தறிவு என்கிற மகத்தான அறிவு.

அத்தகைய அறிவு நம்மிடம் இருக்கும் போது, அதனை நாம் ஒவ்வொருவரும் பயன்படுத்திட வேண்டாமா? நம் கைகள் நிறைய வெண்ணையை வைத்துக் கொண்டு நெய் வேண்டும் என்று தெருத் தெருவாய் தேடி அலைந்தால், நம்மை பார்த்து உலகம் ஏளனம் செய்யாதா?

நம்மிடத்திலே உள்ள பகுத்தறிவைக் கொண்டு எது சரி? எது தவறு? என்று எடை போட்டு பார்க்க வேண்டாமா?

வெல்வதற்குரிய தத்துவமாக உலகெங்கும் போற்றப்படுகின்ற மார்க்சீயம், "உழைப்பாளி மக்களே ஒன்று சேருங்கள், நீங்கள் இழக்கப் போவதோ கைவிலங்கை மட்டும், ஆனால் அடையப் போவதோ பொன்னுலகம்" என்று பிரகடனம் செய்கின்றது. இது சரியா?

அல்லது நீங்கள் போற்றி பாதுகாக்கின்ற மனுதர்மம் உழைக்கும் மக்களை கீழ்சாதிக்காரன் என்று கொச்சைப் படுத்துவது சரியா?

## மனிதர்களை நான்கு வர்ணங்களாக பிரித்து நால் வருக்குமான தனித்தனி வேலைப் பிரிவினைகளை விதித்து பேதம் காட்டுவது சரியா?

மனித உயிரினத்தை பிரம்மா என்கிற மாபெரும் கடவுள் படைத்தார் என்பது உண்மையா? அது உண்மைதான் என்றால் அனைவருக்கும் பொதுவானவராகக் கருதப்படுகின்ற பிரம்மா என்கிற கடவுள் மனிதர்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என நான்கு வகையாக ஏன் பாகுபடுத்த வேண்டும்?

பிரம்மாவின் நெற்றியில் இருந்து பிறந்தவர்கள் பிராமணர்கள் அவர்களுக்கு மற்றவர்கள் கீழ்படிந்து நடக்க வேண்டும். அதிலும் குறிப்பாக பிரம்மாவின் பாதத்திலிருந்து பிறந்தவர்கள் சூத்திரர்கள் என்றும் அவர்கள் அனைவரும் அனைத்து இழி தொழில்களையும் மேற்கொள்ள வேண்டும். அவர்கள் சமூகத்தில் மிக இழிவானவர்கள் என்றெல்லாம் மனுதர்ம தத்துவம் எடுத்துரைப்பதை ஏற்க இயலுமா?

இத்தகைய படு பிற்போக்குத்தனமான தத்துவத்தை எவ்வாறு ஏற்பது? ஆகவே மனித குலத்தில் முற்றிலுமாக நிராகரிக்கப்பட வேண்டிய தத்துவத்தை தன் தலை மீது சுமந்து கொள்ள விரும்புபவர்கள் சுமக்கட்டும் அது அவர்களின் விருப்பம், உரிமை! அதனை தடுக்க விரும்பவில்லை.

ஆனால் தான் சுமக்கின்ற பயனற்ற பெரும் சுமையை நீ சுமக்கத்தான் வேண்டும் அவ்வாறு சுமந்தால் நீ மோட்சத்திற்கு செல்வாய் என்கிற உங்களின் உபதேசத்தை மக்கள் ஏற்க வேண்டுமா?

அனைவருக்கும் சம வாய்ப்பு வேண்டும் ஆண், பெண் வேறுபாடுகள் கூடாது என்று நாம் உரக்கக் கூறுகின்றோம்.

ஆனால் உங்களின் மனுதர்மம் பெண்களை படுகேவலமாக அனைத்து சாதிப் பெண்களையும் இழிவுபடுத்துகின்றது. பெண்கள் படிக்கக் கூடாது என்கிறது. பெண்கள் வீட்டு வேலைகளை மட்டும் கவனித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் தனது கணவனின் தேவைகளை பூர்த்தி செய்திட வேண்டும். தனது கணவருக்கு எப்போதும் அலங்காரத்துடன் கவர்ச்சி நாயகியாக இருந்திடல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் கணவன் வேறொரு பெண்ணை நாடுவான் என்று கொஞ்சமும் கூச்ச நாச்சமின்றி மனுதர்ம தத்துவம் கூறுவதை தன் மானம் உள்ள எந்த மனிதனாவது ஏற்றுக் கொள்ள இயலுமா?

சுருக்கமாகச் சொன்னால் மாறுதலை முற்றிலுமாக நிராகரித்து பழமை நீடித்து நிலைத்து நிற்க வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக உள்ள தத்துவம்தான் மனுதர்மம்.

இதற்கு நேர் மாறான "மாறுதல் ஒன்றே மாறாதது" என்கிற தத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் நாம்.

முதலாளித்துவமும், பிற்போக்குத்தனமும், மூடநம்பிக்கை பழக்க வழக்கங்களும் அற்ற புதியதோர் உலகம், புத்துலகம் காண வேண்டும் என்று போராடிக் கொண்டு இருக்கின்றோம்.

ஆர்எஸ்எஸ் என்கிற இயக்கம் தொடங்கப்பட்ட 1925ம் ஆண்டில் தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற மகத்தான புரட்சிகர அமைப்பும் தொடங்கப்பட்டது.

ஒரே ஆண்டில் தொடங்கப்பட்ட இரு அமைப்புகளும் சித்தாந்த அடிப்படையில் இரு துருவங்களாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இரு தத்துவங்களிடையே நடைபெறுகின்ற யுத்தம் இரு அமைப்புகளும் தொடங்கிய நாள் முதல் தொடர்கின்றது.

இவை நாளுக்கு நாள் வளர்ந்தும், கூர்மை பெற்றும் வருகின்றது.

தங்களது சித்தாந்த தோல்விகள் தொடர்கின்ற காரணத்தால் வெற்றி பெற முடியாது என்கிற நிலையில், தங்களது தோல்விகளை சகித்துக் கொள்ளாத முடியாத நிலையில், தங்களது சித்தாந்தம் வலிமையற்ற, பலவீனமானது என்ற நிலையில், தங்களுக்கு தொடர்ந்து ஏற்பட்டு வருகின்ற தோல்விகளால் ஆத்திரமடைந்து, வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வன்முறையை மேற்கொண்டால் மக்கள் பிளவுபட்டு மோதிக் கொள்வார்கள். இதில் தங்களுக்கு அரசியல் ஆதாயம் பெறுவதில் பேராசை வெறிபிடித்து வன்முறையை தூண்டுகின்றார்கள்.

குஜராத் மாநிலத்தில் மோடி முதலமைச்சராக இருந்த போது என்ன நடைபெற்றது என்பதனை நாடு நன்கறியும். கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தையொட்டி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமிய சகோதரர்களும், பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரே எரித்துக்

தொடர்ச்சி 10ம் பக்கம் >>



- த.லெனின்




# உதவாது இனி தாமதம்

## உதாய் மின் திட்டத்திலிருந்து வெளியேறுவோம்!

**தமிழ்நாட்டில் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் கட்டணம் மாற்றி அமைக்கப்படுவதாக அரசு சொன்னாலும் சாதாரண மக்களுக்கு கட்டாயம் பாதிப்பு இருக்கிறது.**

முதல் 100 யூனிட் இல்லங்களுக்கான இலவச மின்சாரம் அளிக்கப்பட்டாலும் அந்த மானியத்தை வாடிக்கையாளர்கள் விட்டுக் கொடுக்கலாம் என்று கூறியிருப்பது அரசின் எண்ணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. விசைத்தறிகளுக்கான இலவச மின்சாரம் தொடர்கிறது.

101 – 200 யூனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கு மாதத்திற்கு ரூ.27.50 கூடுதலாகவும், மாதம் 201 – 300 யூனிட் பயன்படுத்துபவர்களுக்கு மாதத்திற்கு ரூ.72.50 கூடுதலாகவும், 301–400 யூனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கு மாதத்திற்கு ரூ.147.50, 401–500 யூனிட்டுக்கு மாதம் ரூ.297.50, 501–600 யூனிட் பயன்படுத்துபவர்களுக்கு ரூ.155.00, 601 – 700 பயன்படுத்துபவர்களுக்கு ரூ.275.00, 701 – 800 பயன்படுத்துபவர்களுக்கு ரூ.395.00, 801 –900 பயன்படுத்துபவர்களுக்கு ரூ.565 உயர்த்தப்பட்டுள்ளது.

இவை இரண்டு மாதங்களுக்கு கணக்கிட்டால் இத்தொகை இரட்டிப்பாகும் என்பதையும் அறியும்போது, இது மக்களுக்கான கூடுதல் சுமை.

நகர்ப்புறங்களில் சராசரியாக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்துவோர் என்பதை கவனத்தில் கொண்டால் இக்கட்டண சுமையின் அழுத்தத்தை அறிய முடியும்.

ஒன்றிய அரசு கொண்டு வந்த உதாய் மின் திட்டம் உதாய் என்றால் சூரியப் பிரகாசம் என்று பொருள். உஜ்வல் டிஸ்காம் அசூரன்ஸ் என்பதன் சுருக்கமே உதாய் ஆகும்.

அரசமைப்பின் ஒத்திசைவு பட்டியலில் உள்ள மின்சாரத் துறையை ஒன்றிய அரசு தன்வயப்படுத்தி மின் பகிர்மானத்தில் இந்திய அளவில் சமச்சீராக அளிப்பதற்காகவும், விலையைக் குறைத்து மின் வழங்கல், வட்டிச் செலவையும் குறைக்க இந்தத் திட்டம் பயன்படும் என்று கூத்தாடியது ஒன்றிய அரசு.

2015ல் உருவான இந்தத் திட்டத்தில், தமிழகம் இணையாமலேயே இருந்தது. காலம் சென்ற முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இத்திட்டத்தை கிடப்பில் போட்டு புறக்கணித்தார்.

ஆனால், அக்டோபர் 21, 2016ல் அவர் வழிவந்ததாகக் கூறிக்கொள்ளும் அதிமுக அரசால் இத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உண்மையில் உதாய் மின் திட்டம் மின் கட்டணத்தை உயர்த்துவதற்கான ஒரு சதியே ஆகும். 2011க்குப் பிறகு மின் கட்டணம் 57% உயர்ந்தது. இதில் இணைந்தவுடன் மேலும் பல மடங்கு உயர்ந்துள்ளது.

முன்பு பழைய முறையில் மாநில அரசு மின் உற்பத்தி துறையில் இறங்கலாம்; முதலீடுகள் போடலாம். ஆனால், உதாய் மின் திட்டம் வந்த பிறகு தனியார் துறையிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்யலாம். மாநில அரசு உற்பத்தி செய்ய முடியாது என்ற நிலையை உருவாக்கி விட்டது. ஆக, பெரும் நிறுவங்களுக்கான சந்தை வாய்ப்பைத்தான் உதாய் மின் திட்டம் உருவாக்கி இருக்கிறது.

தமிழகத்தில் சுமார் 2,37,0000 பேர் தங்களது வீடு மற்றும் குடிசைகளுக்கு மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர். இவர்களில் பெரும்பாலானோரை இந்த கட்டண சுமை மேலும் அழுத்தும்.

கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் ஒரு யூனிட் மின்சாரம் ரூ.3.39 என்ற விலைக்கு சந்தையில் கிடைத்தபோது, ஒரு யூனிட்டை ரூ.9.00க்கு வாங்க ஒப்பந்தம் செய்தது எடப்பாடி அரசு. இதன் காரணமாக தமிழ்நாடு மின்சார பகிர்மான கழகத்தின் கடன் பல மடங்கு உயர்ந்தது.

2011ல் திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகிய போது மின்சார வாரியத்தின் கடன் ரூ.43,493 கோடியாகும். ஆனால், அதிமுகவின் பத்தாண்டு கால ஆட்சியில் மூன்று மடங்கு அதிகரித்து தற்போது ரூ.1,59,823 கோடியாக மலை போல் உயர்ந்திருக்கிறது. அதுபோலவே வங்கியின் வட்டித் தொகை ரூ.4588 கோடியாக இருந்தது, தற்போது ரூ.16,511 கோடியாக உயர்ந்து விட்டது. 2011ல் ரூ.18,957 கோடியாக இருந்த வாரியத்தின் நிதி இழப்பு பத்தாண்டு அதிமுக ஆட்சியில் ரூ.94,312 கோடியாக உயர்ந்தது. கடந்த 2021 மார்ச் 30ஆம் தேதி ரூ.1,13,266 கோடியாக நிதி இழப்பு அதிகரித்து விட்டது.

தமிழகத்தின் மின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் கடந்த 2006–2011 திமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட மின் திட்டங்கள் அதற்கு பிறகு வந்த அதிமுக ஆட்சி காலத்தில் உரிய முறையில் முடிக்கப்படாத காரணத்தால் அதன் மூலதன செலவுகள் கட்டுமானத்தின் மீதான வட்டி ஆகியவை அதிகரித்து ரூ.12,647 கோடியாக உயர்ந்து விட்டது.

இது இப்படி என்றால், செல்வி ஜெயலலிதா முதலமைச்சரா இருந்தபோது கொண்டு வந்த உப்பூர் மின் திட்டமும் முடக்கப்பட்டதால் தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின் கொள்முதலில் ஈடுபட்டு கொள்ளைக்கே வழிவிட்டது அதிமுக அரசு.

தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்து அதன் காரணமாகவும் மின் உற்பத்தியில் மிகப் பெரிய இழப்பை தமிழகம் கண்டது. சாதாரணமாக 6000 கலோரி வெப்ப ஆற்றல் உள்ள நிலக்கரிக்குப் பதிலாக 4000 கலோரி வெப்ப ஆற்றல் உள்ள நிலக்கரியை இறக்குமதி செய்து, மின் உற்பத்தியில் ஈடுபட்டதால் இந்த இழப்பும் சேர்ந்தே வந்தது.

**ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை: திமுக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தமிழக அரசுக்கு 28 முறை ஒன்றிய அரசின் எரிசக்தி துறை அமைச்சகம் கடிதம் எழுதியதும், மின் கட்டணத்தை உயர்த்தவில்லை எனில் ரூ.10,793 கோடி மானியத்தை நிறுத்துவோம் என்றும், திட்டங்களுக்கான கடன் உதவி ரூ.30,230 கோடி உடன் நிறுத்தப்படும் என்றும், புதிய திட்டங்கள் எதுவும் தொடங்க முடியாது என்பது போன்ற பல மிரட்டல்களை விடுத்ததுடன் தமிழக மின் வாரியத்திற்கு கடன் உதவி எதுவும் செய்யக் கூடாது என்று ரிசர்வ் வங்கிக்கு கடிதமும் எழுதியது ஒன்றிய அரசு.**

அத்துடன், மின் கட்டணங்களை உயர்த்த தமிழக அரசு மறுத்தால் ‘ஆத்ம நிர்பார்’ திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய ரூ.3,435 கோடியை நிறுத்தியும் வைத்து விட்டனர். நிலக்கரி இறக்குமதி செய்வதில் 10 சதம் வெளிநாட்டிலிருந்து கட்டாயம் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும் ஒன்றிய அரசு கட்டாயமாக்கியதால் எரிபொருள் விலை மற்றும் மின்சாரத்தின் அடக்கவிலையும் அதிகரித்தது என்பது உண்மை என்றாலும், இன்று மின்சாரம் இன்றி எந்த வளர்ச்சியும் இல்லை என்ற நிலையில் இக்கட்டண உயர்வை அரசு தவிர்த்திருக்க வேண்டும்.

தமிழகத்தில் தொழில் முனைவோர் அதிக ஆர்வம் காட்டி தொழில் தொடங்குவதாக திமுக அரசு சொல்லிக் கொள்கிறது. தகவல் தொழில் நுட்பம், இ – காமர்ஸ் ஆகியவற்றிற்கு மின்சாரம் இன்றியமையாதது. மின் கட்டணம் அதிகரித்தால் இந்த தொழில்களின் நிலை என்னவாகும்?

தமிழ்நாட்டின் பாரம்பரிய தொழில்களான சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான ஆதாரமாக மின்சாரம்தான் இருக்கிறது. மின் கட்டண உயர்வால் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அதிக விலை நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிடும். இது அவர்களின் போட்டியிடும் தன்மையை மாற்றி அமைத்து புரட்டி போட்டாலும் ஆச்சரியமில்லை. எனவே, தொழில் வளர்ச்சி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் இல்லங்களுக்கான மின் தேவை இவை அனைத்தும் ஒரே சீராக கட்டுபடியாகும் விலையில் கிடைக்க வேண்டியது மிக மிக முக்கியமாகும்.

உயர் மின் அழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதில் ரயில்வே மற்றும் அரசு கல்வி நிறுவங்களுக்கான மின் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. உயர் அழுத்த வணிகப் பிரிவுக்கான மின் கட்டணம் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மறைமுகமாக மக்கள் தலையில்தான் ஏற்றப்படும் என்பது உண்மையிலும் உண்மை.

உலக அளவில் மின் இழப்பு 12 –14 சதமாக இருக்கும்போது, நமக்கு 35 – 40 சதமாக இருக்கிறது. இதனை உடனடியாகக் குறைக்க நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் குழுமை அமைத்து இந்த இழப்பை சரிசெய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். இதன் மூலம் ஆண்டுதோறும் ரூ.2000 கோடியை மிச்சப்படுத்த முடியும். அமெரிக்காவின் கலிபோர்னியாவிற்கு அடுத்து நமது கன்னியாகுமரியில்தான் காற்றாலை மின்சார உற்பத்தி அதிக அளவில் நடக்கிறது. இந்த காற்றாலை மின்சாரத்தை கொண்டு வருவதற்கும் பகிர்வதற்குமான தனித்தடம் அமைப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும்.

இந்திய அளவில் நீண்ட கடலோரத்தை கொண்ட இரண்டாவது மாநிலம் தமிழ்நாடு. இப்பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க சூரிய மின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நீர் மின் உற்பத்திக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து மின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். இலவச மின்சாரத்திற்கு உரிய கட்டணத் தொகையை மின்சார வாரியத்திற்கு ஒவ்வொரு கணக்கீட்டின்போதும் கட்டிவிட வேண்டும். இதன் மூலம் மின் வாரியத்தின் கடனை குறைப்பதற்கு வழி ஏற்படும்.

இனி வரும் காலங்களில் மின் கள பேருந்துகள், மகிழுந்துகள், இரு சக்கர வாகனங்கள் போக்குவரத்தில் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ள நிலையில் புதிய மின் உற்பத்தி திட்டங்களுக்கும் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் உற்பத்தியை ஒவ்வொரு மாநகராட்சியிலும், நகராட்சியிலும் ஏற்படுத்த ஊக்குவிக்க வேண்டும்.

உயிர்வளி (ஆக்சிஜன்) இன்றி எப்படி உயிரினங்கள் வாழ முடியாதோ அப்படி நவீன உலகம் மின்சாரம் இன்றி இயங்காது; வாழாது. எனவே, தமிழகத்தின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் மக்களுக்கும் தடையில்லாத மின்சாரம் வழங்குவதை தமிழக அரசு தனது தலையாய கடமையாகக் கொண்டு அதற்கு உரிய திட்டங்களைத் தீட்டி உற்பதியை பெருக்குவதே அனைத்துக்குமான தீர்வு. எப்படி கல்விக்கான அரசின் செலவு சமூகத்திற்கான முதலீடோ, அதைப்போலவே மின்சாரத்திற்கான செலவையும் சமூகத்திற்கான முதலீடாகவே பார்க்க வேண்டும்.

பெரும் நிறுவனங்களுக்குத் தீனி போட நினைப்பதே ஒன்றிய அரசின் உதாய் மின் திட்டம். உதவாது இனி தாமதம் உதாய் மின் திட்டத்திலிருந்து தமிழகம் வெளிவரட்டும்.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு சற்றே மூச்சு விடுகிறது பொருளாதாரம். இதன் தொடர் வளர்ச்சிக்கும், சுய சார்புக்கும், வேலை வாய்ப்பை தரும் சுய தொழில், சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கும் மக்களை வாட்டுகிற மின்சார கட்டண உயர்வை உடன் திரும்பப் பெற்று மாற்று வழிகளை சிந்திப்பதே தமிழக அரசுக்கு நல்லது. மக்கள் நலனில் அக்கறையோடு செயல்படட்டும்!

தொடர்புக்கு: **9444481703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 24

## தற்கொலைகளைத் தடுப்பதற்கு...

பிரிட்டிஷ் பொருளாதாரத்தைப் பின் தள்ளி, இந்தியப் பொருளாதாரம் உலகத்தின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உருவெடுத்துவிட்டது! வளர்ந்த நாட்டை விட வளர்ந்த நாடாக இந்தியா மாறிவிட்டது என்பதாக சிலர் ஆனந்த நடனம் ஆடுகிறார்கள்.

இந்தியாவின் ஒரு ஆண்டு மொத்த உற்பத்தி 3.5 லட்சம் கோடி டாலர். சின்ன நாடான பிரிட்டனின் ஒரு ஆண்டு மொத்த உற்பத்தி 3.2 லட்சம் கோடி டாலர். ஆனால் இந்தியா இந்த 3.5 லட்சம் கோடி டாலரைக் கொண்டு 140 கோடி மக்களை பாதுகாக்க வேண்டும். 3.3 லட்சம் கோடி டாலரைக் கொண்டு பிரிட்டன் பராமரிக்க வேண்டியது அதன் 6.8 கோடி மக்களைத் தான். ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மாத வருமானம், சராசரி இந்திய குடிமகனின் மாத வருமானத்தை விட 20 மடங்கு அதிகம். இந்த ரகசியம் வெளியில் தெரியாமலேயே மூடி மறைக்கப்படுகிறது.

சென்ற 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1,64,033 பேர் என்ற அதிர்ச்சித் தகவலை தேசிய குற்றப் பதிவு பணியகம் (நேஷனல் கிரைம் ரெக்கார்டு பீரோ என்.சி.ஆர்.பி) வெளியிட்டுள்ளது. அதாவது வளர்ச்சி அடைந்து விட்ட பொருளாதாரத்தில் (!) நாளொன்றுக்கு 450 பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இந்தியாவில் விவசாயிகள் தற்கொலை அதிகம் பேசப்பட்டது.

2021ல் தற்கொலை செய்து கொண்டவர்களின் வகைவாரியான புள்ளி விவரம் வேறொரு செய்தியை சொல்கிறது.

தற்கொலை செய்து கொள்பவர்களில் நான்கில் ஒருவர் தினக்கூலி தொழிலாளராவார். 2021ல் 42,004 தினக்கூலித் தொழிலாளர்கள் தற்கொலை செய்துள்ளனர். 2014ல் அதாவது மோடி பதவி ஏற்ற போது 12 சதமாக இருந்த தினக் கூலித் தொழிலாளர்களின் தற்கொலை, தற்போது 25 சதவீதமாக, இரு மடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

இவர்களோடு வேலை கிடைக்காத இளைஞர்கள் (8.4%) மாத ஊதியம் பெறுபவர்கள் (9.7%) சுய வேலை செய்வோர் (12.3%) ஆகியோரையும் சேர்த்து பார்த்தால், வேலையின்மை, வேலையிழப்பு, வேலை செய்தாலும் வாழ்க்கை நடத்தப் போதாத சம்பளம் ஆகியவற்றால் தற்கொலை செய்து கொள்வோர்கள், சரி பாதிக்கும் அதிகமானோர் என்பது தெளிவாகிறது.

தாராளமாக பொருளாதாரத்தை கையாளும் அரசுகளால், நிரந்தர வேலையும் நிச்சயிக்கப்பட்ட சம்பளமும் பெற்று வந்த தொழிலாளர்கள் வெகுவாக குறைக்கப்பட்டு விட்டார்கள். தினமும் வேலை தேடி, கிடைத்த சம்பாத்தை பெறும் தினக்கூலி தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வேலை கிடைப்பதும் குதிரைக் கொம்பாக உள்ளது.

அதிகம் பேருக்கு வேலை தரும் கட்டுமான பணிகள் கூட பெருமளவுக்கு சுருங்கி விட்டன. சிறு, குறுந் தொழில்கள் பாதிக்கு மேலாக அழிந்துவிட்டன.

வேலையும் குறைவு, சம்பளமும் குறைவு; ஆனால் விலை மட்டும் உயர்ந்து கொண்டே போகிறது. தற்போதைய மின் கட்டண உயர்வு, சொத்து வரி, வீட்டு வரி, குடிநீர் வரி உயர்வுகளால் வீட்டு வாடகை எகிறி, குடியிருப்பவர் தலையில் விழுகின்றன. நகரங்களில் தினக்கூலி, தற்காலிக தொழிலாளர்கள் ஈட்டும் சம்பளத்தில் சரி பாதிக்கும் மேல் வீட்டு வாடகைக்குப் போகும் அவலம் உள்ளது.

இந்தியாவின் நகரங்களில் டெல்லி 2760 தற்கொலைகளோடு முதல் இடத்தில் உள்ளது. நம் சென்னை 2699 தற்கொலைகளோடு இரண்டாம் இடத்தில் உள்ளது! மாநிலம் என்று எடுத்துக் கொண்டாலும் கூட 22,760 தற்கொலைகள் நடக்கும் மகாராஷ்டிராவுக்கு அடுத்து, 18,925 தற்கொலைகளோடு தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.

தமிழகத்தில் செயல்பாட்டில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு, பாட புத்தகம், இலவச பேருந்து, பொது விநியோகத் திட்டம் ஆகியவை பட்டினி மரணங்களைக் குறைத்ததோடு, சமூகம் உயர்வதற்கும் பங்களிப்பு செய்துள்ளன. ஆனாலும் தற்கொலைகளும் அதிகரிக்கின்றன.

திருமணம், ஆண்பெண் உறவு தொடர்பான தற்கொலைகளுக்கு பஞ்சமில்லை. கொலைகள் இதில் சேர்த்தி இல்லை.

தற்கொலை என்பது தனிநபர் பிரச்சினை அல்ல. அது ஒரு சமூகப் பிரச்சனை. சமூகத்தின் அணுகுமுறை, சாதி ஆணவம், மருத்துவ சிகிச்சை, தனிமைப்படும் சூழல், பிழைக்க இயலா வருமானம், நலத் திட்டத்தை பெறுவதில் கடின நடைமுறைகள் என ஏராளமான அம்சங்களைப் பரிசீலிக்க வேண்டும்.

தேசிய அளவில் மாநில அளவிலும் தற்கொலை தடுப்பு கொள்கையை உருவாக்குவது அவசியம்

## செப்டம்பர் 11:

# சால்வடோர் அலண்டேவுக்கு வீரவணக்கம்!



**செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவில் நிகழ்ந்த கொடூரமான தாக்குதலில் பலியான சுமார் 3 ஆயிரம் நபர்களுக்கு உலக மாந்தர் தம் அஞ்சலியைச் செலுத்துகிறார்கள். இந்தத் தருணத்தில், 1973ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று சிலி நாட்டில் அமெரிக்க உதவியுடன் நடைபெற்ற இராணுவ கலகத்தில் மரணமடைந்த பல்லாயிரக்கணக்கான மக்களையும் நாம் நினைவு கூர வேண்டியுள்ளது.**

இந்தக் கலகத்தின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான சிலி நாட்டு அதிபர் சால்வடோர் அலண்டே படுகொலை செய்யப்பட்டார்.

இந்த இராணுவ கலகம் நிகழ்வதற்கு முன்பு வரை, பல தசாப்தங்களாக, ஸ்திரத்தன்மையும், காலக் கிரமப்படியான தேர்தல்களும் நடைபெறும் ஒரு வலுவான ஜனநாயகப் பாரம்பரியமிக்க நாடாக சிலி திகழ்ந்தது. பல்வேறு இராணுவ கலகங்கள் இலத்தீன் அமெரிக்காவில் நிகழ்ந்து வந்தபோதும், சிலியில் ஜனநாயகம் உயிர்ப்புடன் விளங்கியது. 1970 செப்டம்பரில் மக்கள் நலன் சார்ந்த செயல்திட்டத்துடன் ஒரு சோஷலிஸ்டான சால்வடோர் அலண்டே சிலி நாட்டில் அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட போது, இந்தச் சூழல் மேலும் வலுவடைந்தது.

பொது சுகாதார மருத்துவரான அலண்டே, சோஷலிஸ்ட் கட்சியின் தலைவராக உருவெடுத்தார். இதர இடதுசாரி சக்திகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சி அமைத்தார். ஏழை எளிய மக்களின் நலனுக்காகவே நாட்டின் இயற்கை வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானித்தார். சால்வடோர் அலண்டே தலைமையிலான அரசாங்கம் தாமிர சுரங்கங்களை அரசுடைமை ஆக்கியது; நிலச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தது.

சால்வடோர் அலண்டேவின் மக்கள்நலன் சார்ந்த செயல்திட்டத்தை ஆக்கிரமிப்பு கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்காவின் நிக்சன் கிசிஞ்ஜெரின் அரசாங்கம் மிகக் கடுமையாக வெறுத்து ஒதுக்கியது. முன்னதாக, சால்வடோர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவது சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமான முறைகளிலும் தடுத்து நிறுத்திட அமெரிக்காவும் அதன் உள்நாட்டு நேச சக்திகளும் கடுமையாக முயன்றன.

சிலி நாட்டு மக்கள் அளித்த ஜனநாயக ரீதியிலான தீர்ப்பை ஏற்க மறுத்த அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள், அலண்டே அரசாங்கத்தைக் கவிழ்த்திட தொடர் நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். அந்நாட்டின் மீது வெளிப்படையாக அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடைகளை விதித்தனர்.

“அலண்டே அரசாங்கம் தூக்கியெறியப்பட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியுடன் இருக்கும் அதே வேளையில், இதில் அமெரிக்காவின் ஈடுபாடு மறைக்கப்பட வேண்டும்.” என்று பின்னாளில் வெளியான அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ வின் செய்தி ஆவணம் ஒன்று குறிப்பிடுகிறது.

இராணுவ பயிற்சிக்காக அமெரிக்காவிற்கு வழக்கமாகத் தொடர்ந்து பயணம் மேற்கொண்டு வந்த இராணுவ அதிகாரிகள் தான் கலகத்தின் முக்கியஸ்தர்களாக இருந்தனர் என்பதும் நிரூபணமானது. கலகத்தில் இராணுவ அணியினர் திட்டமிட்டபடி சேர்ந்து கொள்வதற்கு ஏதுவாக ஏவுகணை உள்ளிட்ட உயர் ரக ஆயுதங்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டன. தேசப் பொருளாதாரத்தைச் சீரழித்திட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; மேலும், அதன் காரணமாக எழும் அதிருப்தியை அலண்டே அரசாங்கத்திற்கு எதிராக மடைமாற்றம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; பல்வேறு தடைகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன.

**1971 ஆம் ஆண்டு, பிடல் காஸ்ட்ரோ 4 வார கால பயணமாக சிலி சென்றிருந்தார். அந்தப் பயணத்தின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அலண் டேவுக்கு பிடல் காஸ்ட்ரோ அறிவுறுத்தியதாக தெரிகிறது. அடுத்த ஆண்டில், அலண்டே கியூபாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு காஸ்ட்ரோவைச் சந்தித்தார். கியூபாவுடனான நெருக்கம், அமெரிக்க கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு அடிபணிய மறுத்தது ஆகியவை அவருக்கும், அவரது அரசாங்கத்துக்குமான எதிர்ப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது.**

1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ கலகம் முறியடிக்கப்பட்டது. பின்னர், செப்டம்பர் 11 அன்று இரண்டாவது முறையாக இராணுவ கலகம் மேற்கொள்ளப்பட்டது. இதில், அதிபர் சால்வடோர் அலண்டே அதிபர் மாளிகையில் சுற்றி வளைக்கப்பட்டார். நாட்டை விட்டு வெளியேற மறுத்த அவர், இறுதிவரையில், போராடுவேன் என்று உறுதிபட முழங்கினார்.

அதிபர் மாளிகையை வெடிகுண்டு வீசித் தகர்த்திட விமானப்படை பயன்படுத்தப்பட்ட வெகுசில இராணுவ கலகங்களில் இது ஒன்றாகும். அமெரிக்க உதவியுடன் உள்நாட்டுக் கலகக்காரர்கள் இராணுவ பலத்தைப் பெருமளவு அதிகரித்துக் கொள்ள முடிந்தது.

அதிபர் மாளிகையும், வானொலி நிலையமும் வெடிகுண்டு தாக்குதலுக்கு உள்ளான நிலையில், நாட்டு மக்களிடையே அதிபர் அலண்டே தனது இறுதி உரையை நிகழ்த்தினார். “நான் பதவி விலகப் போவதில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றத்திற்கான பயணத்தில், மக்கள் மீது கொண்டுள்ள பற்றுறுதி மற்றும் விசுவாசத்திற்காக நான் எனது உயிரை விலையாகத் தருகிறேன். பல்லாயிரக்கணக்கான நல்ல மனங்களில் நாங்கள் விதைத்துள்ள மாற்றத்திற்கான விதைகள் நிச்சயம் ஒருநாளும் வீணாகிப் போய்விடாது என்று நான் அவர்களிடம் கூறுகிறேன்.”

மேலும் தொடர்ந்த அலண்டே, “அவர்களிடம் படைபலம் உள்ளது. நம் மீது அவர்களால் ஆதிக்கம் செலுத்த இயலும். ஆனால், வரலாறு நம்முடையது ஆகும். மக்கள் வரலாற்றை உருவாக்குபவர்கள் ஆவர்.” என்று வலியுறுத்தினார்.

நெருக்கடியான சூழலிலும் கூட, தனது நாட்டு மக்களை எச்சரிப்பதில் கவனம் செலுத்திய அலண்டே, அந்நிய மூலதனம், ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்குத்தனம் ஆகியவை இணைந்து, இராணுவம், பாரம்பரியத்தை வீழ்த்துவதற்கான சூழலை உருவாக்கிவிட்டது என்று கூறினார்.

வெடிகுண்டுகளும், துப்பாக்கித் தோட்டாக்களும் தன்னைச் சூழ்ந்திருந்த நேரத்திலும், “சிலி நீடூழி வாழ்க! மக்கள் நீடூழி வாழ்க! தொழிலாளர்கள் நீடூழி வாழ்க! இதுவே எனது இறுதி முழக்கம்! எனது உயிர் தியாகம் வீணாகாது என்று உறுதியாக நம்புகிறேன்.” என்று அலண்டே முழங்கினார்.

(பரத் தோக்ரா வலைதளம்)



# தரமற்ற சாலை, தலைவிரித்தாடும் பாஜக அரசு ஊழல்,

# வெள்ளத்தில் தவிக்கும் பெங்களூரு

-ஹரிஷ் பாலா

**பெங்களூருவின் சமீபத்திய மழை பாஜக தலைமையிலான மாநில அரசின் குறைபாடுகளை வெளிச்சமிட்டு அம்பலப்படுத்தியது. நான்கு நாட்கள் மழையில் தகவல் தொழில்நுட்பத்தின் தலைநகரான பெங்களூருவின் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடும் மழை வெள்ளம், அந்நகரை இந்தியத் துணைக் கண்டத்தின் (தண்ணீரில் மிதக்கும் இத்தாலியின்) வெனிஸ் நகராக மாற்றிவிட்டது.**

பல ஐடி நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை வீட்டிலிருந்தே பணியாற்றக் கூறின, கல்விச் சாலைகள் மூடப்பட்டன. மின்சாரம், குடிநீர் வழங்கல் சேவைகள் பாதிக்கப்பட்டன. இந்த மழையின்போது போக்குவரத்து நெருக்கடியும், வண்டிகள் பழுதுபட்டு நின்றதும், வெள்ளத்தில் அடித்துச் சென்றதும் அடிக்கடி நடந்தன. பெங்களூரு மக்கள் மொத்தமாகப் பாதிக்கப்பட்டார்கள்.

வெள்ளத்திற்குக் காரணம் மழை அல்ல என்பதை நம்மால் அவதானிக்க முடியும். ஆனால், காரணங்கள் இரண்டு. ஒன்று ஏரிகள் ஆக்கிரமிப்பு மற்றொன்று அமைச்சர்களின் அடாவடியான 40 சதவீதக் கமிஷன்.

**அதிகாரபூர்வ புள்ளிவிபரம் :** புருஹத் பெங்களூரு மகாநகர் பாலிகா, மகாநகர் நிர்வாக அமைப்பு 2021 டிசம்பரில் ஒரு புள்ளிவிபரத்தை வெளியிட்டது. அந்த அறிக்கை, நகரத்தின் ஒட்டுமொத்த 204 ஏரிகளில் 20 ஏரிகள் மட்டுமே ஆக்கிரமிப்பு இன்றி உள்ளதாகத் தெரிவிக்கிறது.

அந்த ஏரிகள் பரவியுள்ள இடங்களின் ஒட்டுமொத்த பரப்பளவு கூட்டுத்தொகை 6,456.47 ஏக்கர்கள். ஆக்கிரமிப்புக்கு உள்ளான பரப்பளவு 941.67 ஏக்கர்கள். அதில் மெட்ரோபாலிடன் நிர்வாகம் இதுவரை 38.30 ஏக்கர் பரப்பளவு மட்டுமே ஆக்கிரமிப்புக்களை அகற்ற முடிந்துள்ளது.

அருகே அமைந்த 28 ஏரிகளில் 764.32 ஏக்கர் பரப்பு நிலம் ரயில் பாதைகள், தேசிய நெடுஞ்சாலை மற்றும் சாலைகள் போன்ற திட்டங்களுக்கான அரசு கட்டடங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பது அதிர்ச்சி அளிக்கும் உண்மையாகும். அடுத்து 131 ஏரிகள் தனியார் மற்றும் அரசுத்துறை சொத்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டவை. இந்த 131 ஏரிகளில் 324.827 ஏக்கர் அரசு முகமைகளாலும், 248.98 ஏக்கர் தனியார் சொத்துக்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

ஏரிகளின் அமைப்பு மற்றும் நிலங்களின் பயன்பாட்டு போக்குகள் நகரத்தில் வெள்ளம் சூழக் காரணம் எனச் சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஏரிகள் எல்லாம் அரசியல்வாதிகள் மற்றும் கார்ப்பரேட் குழுமங்களால், முதலாளித்துவ அரசியல்வாதிகளின் ஒத்துழைப்போடு, ஆக்கிரமிக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பாளர்களில் வேறுபாடின்றி எல்லா முதலாளித்துவக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் என்றாலும் ஆக்கிரமிப்பின் விகிதம் மின்னல் வேகத்தில் உள்ளது.

2017ம் ஆண்டின்போது காங்கிரஸ் அரசால் பெங்களூரு கே.ஆர்.புரத்தில் உள்ள 55 ஏக்கர் ஹெளடனஹல்லி ஏரி புத்தாக்கம் செய்யப்பட்டது. இதே ஏரி மீண்டும் ஆக்கிரமிக்கப்பட்டதாக 2022 ஆகஸ்ட் 14ல் வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் கட்டுரை ஒன்று கூறுகிறது.



**கே.பி.கோலிவாட் குழு :** சட்டமன்றச் சபாநாயகர் கே.பி. கோலிவாட் தலைமையில் அமைந்த 11 உறுப்பினர் சட்டமன்றக் குழுவின் அறிக்கை 1,547 ஏரிகளிலும் 3,271 குளங்களிலும் நடத்தப்பட்ட ஆக்கிரமிப்புகளைத் தனித்தனி பிரச்சனை அடிப்படையில் கையாளுமாறு அரசுக்கு யோசனை கூறியது: "ஏரிகளைப் புத்தாக்கம் செய்ய ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்போது, மாநில அரசு அந்த ஆக்கிரமிப்பு அகற்றல் நடவடிக்கையின் சமூகத் தாக்கக் கண்ணோட்டதையும் ஒன்றன் பின் ஒரு பிரச்சனை அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும்" என்று கூறியது.

மேலும் அக்குழு, 70க்கும் மேற்பட்ட கட்டடம் கட்டுபவர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனங்களை முக்கிய ஆக்கிரமிப்பாளர்களாக அடையாளப்படுத்தியது. கேபி கோலிவாட் குழு 2014ல் மதசார்பற்ற ஜனதா தள் (JD (S)) தலைமையின் கீழ் அமைந்த அரசு அமைத்தது; அக்குழுவின் அறிக்கை நவம்பர் 2017ல் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அக்குழுவின் சிபார்சுகளை அமல்படுத்த 2019 லிருந்து ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பாஜக அரசு எதுவும் செய்யவில்லை. அந்தக் கட்டட மேம்பாட்டு கட்டுமானர்களிடமிருந்து பல பாஜக தலைவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதாயமடைவதாக நம்பப்படுகிறது.

**இரண்டாவது காரணம் 40 சதவீதக் கமிஷன் : ஒரு லட் சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களை உடைய அரசு ஒப்பந்ததாரர்களின் உயர்நிலை அமைப்பான 'கர்னாடகா கான்டிராக்டர்கள் அஸோசியேஷன்', மாநிலத்தின் பாஜக அரசு, ஒப்பந்ததாரர்களின் பில்களைப் பட்டுவாடா செய்து அனுமதி வழங்க கமிஷன் அல்லது கையூட்டு 40 சதவீதம் கோருவதாகக் குற்றம்சாட்டி ஒரு குண்டைப் போட்டது.**

போகிற போக்கில் சொல்வதாக இல்லாமல் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அலுவலகம் மற்றும் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கும் கடிதங்கள் எழுதி, சில பாஜக அமைச்சர்கள் மற்றும் மாநில அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவும் கோரினார்கள்.

பெலகவியைச் சேர்ந்த ஓர் ஒப்பந்ததாரர், சந்தோஷ் படேல், பல முறை முதலமைச்சர், பிரதமர் மற்றும் மற்றவர்களிடம் மாநிலப் பஞ்சாயத் ராஜ் அமைச்சர் ஈஸ்வரப்பா மீது புகார் செய்தது மட்டுமின்றி, மனம் நொந்து 2022 ஏப்ரலில் தற்கொலை செய்து கொண்டார். எதிர்க் கட்சிகளின் கடுமையான எதிர்ப்புகளுக்குப் பிறகு அவர் அமைச்சரவையிலிருந்து பதவி விலகினார்.

இந்த 40 சதவீதக் கமிஷன் ஊழல் காரணமாகப் பெருநகரத்தின் சாலைகள் மற்றும் சுகாதார வசதிகள் வழங்குவது தரமற்றதாகிறது.

**மோசமான சாலைகளும் அதிகரிக்கும் விபத்துக்களும் :** தேசிய குற்ற ஆவணங்கள் பீரோ அமைப்பின் தரவுகள்படி 2020ம் ஆண்டு பெங்களூரு நகரத்தில் அத்தகைய அதிகபட்ச வழக்குகள் (18) பதியப்பட்டன. சமீப காலத்தில் தொடர்ச்சியான அத்தகைய நிகழ்வுகளுக்குக் குடிமை முகமை அமைப்பு, குறிப்பாக பெங்களூரு மகாநகர் நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும் என பெங்களூர்வாசிகள் மேலும் மேலும் கோரிவருகிறார்கள்.

பொதுமக்களிடமிருந்து அதிகரிக்கும் அழுத்தத்தின் காரணமாக, சமீப காலங்களில் பெங்களூரு போக்குவரத்துக் காவல்துறை, சாலை பள்ளங்கள், குழிகள் காரணமாக ஏற்படும் சாவுகளுக்கு பொறியாளர்களுக்கு எதிராக அதிகமாக வழக்குகளைப் பதிகிறார்கள். உதாரணத்திற்கு, ஒரு விபத்தில் 21 வயதான உணவு வழங்கும் பணியின் அதிகாரி இறப்புக்காகக் கடந்த டிசம்பரில் மகாநகர் பாலிகா பொறியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு, பின்னர் காவல் நிலையப் பிணையில் விடுவிக்கப்பட்டதைக் கூறலாம்.

சாலைகளில் பள்ளம் மேடு ஏற்படுவதற்குத் தரக்குறைவான பொருட்கள் மற்றும், பொருட்கள் போதுமான அளவில் பயன்படுத்தாதது முதலியன காரணமாகும்.

கையூட்டுகள் சலுகைகளுக்குப் பிறகு திட்டத்தின் மதிப்பு எனக் குறைக்கப்படுகிறது. தரக் குறைவாக கட்டப்பட்ட சாலைகள் விரைவிலேயே பள்ளம் மேடாகப் பரிதாபமாக மாறுகிறது. மேலும் திட்டப்பணிகளை மேற்கொள்ளும் பல்வேறு முகமைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததால் சாலைகள் அடிக்கடி தோண்டப்படுவது மட்டுமின்றி, அவற்றை மீண்டும் சரி செய்யாது விட்டுவிடப்படுகின்றன.

40 சதவீத ஊழல் காரணமாகத் தரமற்ற சாலைகள், சுகாதார வசதிகள் மற்றும் ஏரிகள் ஆக்கிரமிப்புகள் பெங்களூரு நகரத்தை மழை நீரால் மூழ்கடித்து விட்டன.

**காத்திருக்கும் மக்கள் :** தேர்தல்களில் படுதோல்விக்குப் பயந்து பாஜக அரசு, 2020ம் ஆண்டே நடைபெற்றிருக்க வேண்டிய, பெங்களூரு நகர பாலிகா தேர்தல்களை ஒத்தி வைக்கிறது. தேர்தல் தாமதத்திற்குக் கோவிட் பெருந்தொற்று, வார்டுகள் மறு சீரமைப்பு, வார்டுகள் இடஒதுக்கீடு பணிகளை அரசு காரணமாகச் சொல்கிறது.

ஆனால், 2023ல் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டதும், பசவராஜ் பொம்மை தலைமையிலான நிர்வாகத் திறமையற்ற, ஊழல் பாஜக அரசைத் தூக்கி எறிய கர்னாடகா மக்கள் காத்திருக்கிறார்கள்!

நன்றி : நியூஏஜ்: தமிழில்: **நீலகண்டன்**

---

# ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் பணி நிரந்தரம்


## சுப்பராயன் எம்.பி வலியுறுத்தல்

ஈரோடு: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும், திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினருமான கே.சுப்பராயன் ஈரோட்டில் செப். 10 அன்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற லோக்சபாவில் நடைபெறும் விவாதங்கள், கேள்வி நேரங்கள் போன்ற நிகழ்வுகளின்போது பேசுவது மற்றும் கேட்பது ஆகிய இரு வழிகளிலும் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் இருந்து, இந்திய அரசியல் சட்டத்தின் 8வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள 22 மொழிகளிலும் மொழிபெயர்க்கும் நவீன கட்டமைப்பு வசதியை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்து, அது சம்பந்தமாக பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

ஈரோடு மாவட்டம் குண்டேரிப் பள்ளம் அணையின் மொத்த உயரம் 42 அடி. இதில் தற்போது வெறும் 20 அடி உயரத்திற்கு தான் தண்ணீர் இருக்கின்றது. எஞ்சிய சுமார் 22 அடிக்கு வண்டல் மண் மற்றும் சரளை மண் தேங்கி கிடக்கின்றன. இந்த மண்ணை தூர் வார விவசாயிகள் தயாராக உள்ளனர். எனவே இம்மண்ணை எடுக்க விவசாயிகளுக்கு அனுமதி வழங்கச் வேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளேன்.

தேசிய நெடுஞ்சாலையில் பெருந்துறை பகுதி அருகே நான்கைந்து இடங்கள் சாலை விபத்துகள் அதிகம் நிறைய




நிகழ்பவைகளாக உள்ளதை சுட்டிக் காட்டி, விபத்துகள் நடக்காமல் தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளேன்.

ஈரோடு மாவட்டத்தில் கடம்பூர் மற்றும் பர்கூர் ஊராட்சிகளுக்கு உட்பட்ட மலை கிராமங்களில் 'மலையாளி' இனமக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இவர்கள் தமிழ்நாடு பழங்குடியினர் (எஸ்.டி) பட்டியலில் சேர்க்கப்படாமல் உள்ளனர். ஆனால் தமிழகத்தில், மற்ற மாவட்டங்களில் இந்த ' மலையாளி' இன மக்கள், பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே ஈரோடு மாவட்டத்தில் உள்ள 'மலையாளி' இன மக்களையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்திலும் நான் கோரிக்கை எழுப்பியுள்ளேன்.


தமிழகத்தில் ஒப்பந்த தொழிலாளர் முறை உள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர் அனைவரும் பணி நிரந்தரப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஒப்பந்த மற்றும் சுய உதவிக் குழு தூய்மைப் பணியாளர்களை நேரடி பணியாளர்களாக்கி அவர்களை பணி நிரந்திரப்படுத்தி காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுத்துள்ளேன்.

பெருந்துறையில் உள்ள அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பல துறை சிறப்பு மருத்துவமனையாக (மல்டி ஸ்பெஷாலிட்டி ஹாஸ்பிட்டல்) தரம் உயர்த்த வேண்டுமென்றும் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளேன்.

எந்த ஒரு திட்டமானாலும் அது மக்கள் நலனுக்கு எதிரானத் தன்மைக் கொண்டதாக இருந்தால் அத்திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் ஏற்காது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு சென்று மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை, கோரிக்கைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன்.

வரவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மதசார்பற்ற, ஜனநாயக மற்றும் இடதுசாரி சக்திகள் ஒருங்கிணைந்து மத்தியில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு கே.சுப்பராயன் எம்.பி. பேட்டியில் தெரிவித்தார்.

பேட்டியின்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், துணைச் செயலாளர் எஸ்.சின்னசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



ஆர்.கிருஷ்ணமூர்த்தி
(ஆர்.கே.)

# நெருங்குகிறது 2024 என்ன செய்யப் போகிறோம்?

**பாராளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆட்சி மாற்றம் கண்டிப்பாக நடந்தேற வேண்டும். மோடி அரசின் மக்கள் விரோத கொள்கைகள் எதிர்த்து மக்கள் பாடம் புகட்டுவார்கள் . இதெல்லாம் நமது விருப்பம், நம்பிக்கை. இதெல்லாம் சரிதான்.**

ஆட்சி மாற்றம் அவ்வளவு எளிதானதா? என்றால் நிச்சயம் இல்லை. மாற்றவே முடியாதா? என்றால் அதுவும் இல்லை. மாற்றம் கொண்டு வந்தே ஆக வேண்டும் என்ற நம்பிக்கையோடு மாற்றத்தை ஏற்படுத்த கடுமையாகத் திட்டமிட்டு உழைக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

மோடி அரசு 2016 நவம்பர் 8 இரவு 8 மணி வாக்கில் பண மதிப்பிழப்பு திட்டத்தை அதிர்ச்சியாக அறிவித்தது. மறு நாள் 9ம் தேதி காலை மோடி கார்ப்பரேட் நண்பர்கள் தவிர, கையில் காசு இருந்தோர் இல்லாதோர் என அனைவரும் பிச்சைக்காரர்களாக வீதியிலே அலைந்து அல்லல் பட்ட நிகழ்வுகள் மறக்க முடியாதவை. வங்கி முன்னால் மக்கள் தங்கள் இருப்பிலிருந்து ரூபாய் இரண்டாயிரம் பெற மணிக்கணக்கில் வெயிலில் வரிசையில் காத்திருந்த கொடூரம் சொல்லி மாளாது. சிலர் இதில் மாண்டே போயினர். தெருவோர வியாபாரம் முதல் சிறு குறு நடுத்தர தொழில்கள் அனைத்தும் அழிந்தன. ஏராளமானோர் வேலை இழந்தனர்.

பல ஆண்டுகள் அதன் துயர் நீடித்தது. இன்னமும் நீடிக்கிறது. கறுப்புப் பணம் வெளிக்கொண்டுவரவே இத்திட்டம் என்றார் மோடி. கறுப்புப் பணம் வெள்ளையாக மாறி அவர்கள் கஜானாவை நிரப்பியது என்பதுதான் உண்மை. இதுதான் மோடி திட்டமும் கூட.

இந்த அவல நிலைமைகளை, கொடூரங்களை அனுபவித்த மக்கள் மோடி அரசுக்குத் தகுந்த பாடம் புகட்ட தவறவே மாட்டார்கள் என்றுதான் நினைத்தோம். நினைப்பு 2019 பாராளுமன்றத் தேர்தலில் பொய்த்துப் போயிற்று. 2019 ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த மோடிக்கு எந்த அக்கிரமங்களையும், அநீதிகளையும் தொடர்ந்து செய்யலாம் என்ற நம்பிக்கை தலைக்கேறிவிட்டது.

**எங்கே பலவீனம்? :** மக்களிடையே சரியான புரிதல் இல்லை என்பதும், புரிதலை ஏற்படுத்த வேண்டிய சக்திகள் சரியாகத் தங்கள் வேலையைச் செய்யத் தவறி விட்டனவோ என்பதும்தான் கிடைத்திருக்கிற பாடம்.

இன்றைய அவலம் பாசிசத்தை எதிர்க்கும் பல எதிர்க் கட்சிகளால் முழுமையாக ஓராண்டில் திரண்டு அரசியல் பணிகளைச் செய்ய முடியவில்லை. தங்கள் கட்சி சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களை விலை போகாது தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவே அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கிறது. எதிர்க் கட்சிகளிடமிருந்து பிள்ளை பிடிக்கும் அரசியல் கேவலத்தை பிஜேபி கூச்சம் நாச்சமின்றி செய்து வருகிறது.

**மக்களிடம்......:** இந்த நிலையில் பாசிச மோடி ஆட்சியை எதிர்க்கும் அத்தனை எதிர்க் கட்சிகளும் செல்ல வேண்டிய இடம் மக்கள் சன்னதிதான்.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு என்ற மோடியின் வெத்து விளம்பரங்கள் புஸ்வாணம் ஆயிற்று; மாறாக ஆண்டுக்கு 2 கோடி பேரின் வேலை பறிக்கப்பட்டது.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே வரி, ஒரே தலைமை என்ற சர்வாதிகாரப் போக்கு தலை தூக்கி ஆடுகிறது.

**விவசாயிகள் போராட்டம்:** விவசாய சட்டங்கள் சீரமைப்பு என்ற பெயரில் விவசாயிகளின் உரிமை பறிக்கப் பட்டது.

ஓராண்டுக்கும் மேலாக அனைத்து விவசாய சங்கங்களும் தலைநகர் டெல்லியில் மழை, வெயில், குளிர், பனி என எதுவும் பாராது குடும்பம் குடும்பமாக நடத்திய அமைதி வழிப் போராட்டம் மோடி அரசின் ஆட்சி அதிகார போதையில் நசுக்கப் பட்டது. தீவிர வாதிகள் என வாய்க்கூசாது கூறி கேவலப்படுத்தியது மோடி அரசு.

700 க்கும் மேற்பட்டோர் போராட்ட களத்தில் உயிர் நீத்தனர். இரங்கல் தெரிவிக்கும் நாகரீகம் கூட அற்ற மோடி அரசு, அவர்களின் இறப்பைக் கொச்சைப்படுத்தியது.

வங்கி, இரயில்வே, பாதுகாப்பு, இன்ஷ்யூரன்ஸ், தொலைத் தொடர்பு, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, விமான நிறுவனங்கள், கப்பல் துறைமுகங்கள் என அனைத்தும் தேசிய பணமாக்கல் திட்டம் என்ற பெயரில் தனியாரிடம் விற்கப்படுகிறது.

**2017 ஜூன் 30 நள்ளிரவில் மோடி அறிவித்த ஜி.எஸ்.டி.:** வரிக் கொள்கை இன்று எந்த பொருளையும் விட்டு வைக்கவில்லை. எந்த பொருளையும் விட்டு வைக்காமல் வரி போட்டு வதைக்கிறது. பிறப்பு இறப்பையும் ஜி.எஸ்.டி. விட்டு வைக்கவில்லை. ஆண்டு தோறும் தேடிப் பிடித்து பொருட்களுக்கு வரி போடுகிறது. ஏற்கனவே உள்ளவற்றிற்கு வரி தொடர்ந்து கூட்டப்படுகிறது.

ஏழை மக்கள் எப்படி வாழ்வார்கள் என்கிற கவலை சிறிதுமின்றி வரி 18 சதம் முதல் 30 சதம் வரை கூட்டப்படுகிறது. கொடுமை என்னவெனில் மோடியின் குஜராத் வைர வியாபார நண்பர்கள் வசதிக்காக வைரத்தின் வரி 5 சதமாகக் குறைக்கப்படுகிறது.

இவ்வளவு மக்கள் விரோத, தேசவிரோத செயல்களுக்குப் பின்பும் பா.ஜ.க. தாக்குப் பிடிக்கிறது.

ஆன்மீகக் களியாட்டத்தில் மக்கள் அமுங்கிப் போவது; தனது இந்த நிலைமைக்கு காரணம் என்ன எனக் கண்டு கொதித்தெழாது விதி என முடங்கிப் போவது; கடைசி நேர தேர்தல் பொய் வாக்குறிதியில் வீழ்ந்து மூழ்குவது என்பது போன்றவையே.

**தொழிலாளர் நலச் சட்டங்கள்:** தொழிலாளர் நலச் சட்டங்கள் 44 ம் கெஞ்சிக் கேட்டுப் பெற்றதோ, ஆளும் வர்க்கம் அள்ளித் தந்ததோ அல்ல. பல ஆண்டுகள் கடுமையாகிப்போராடி, சிறைச்சாலை குண்டாந்தடி, தூக்கு மேடை, உயிர்த்தியாகம் என பல இழப்புகளைச் சந்தித்து பெற்ற சட்டங்கள். அதை தொழிலாளர் விரோத மோடி அரசு சட்டத்திருத்தத்தின் மூலம் நான்காக சுருக்கி பல உரிமைகளையும் பறித்து விட்டது.

தொழிலாளர்கள் மத்தியிலே கோபம் வந்ததா? என்றால் இல்லை என்பது உண்மையான பதில்.

தினக்கூலி தொழிலாளர்கள் பல தொழில்கள் அழிவினால் வேலை கிடைக்காது வீதியில் அலைந்தனர். அது தங்கள் விதி என்று முடங்கிப் போய்

இன்னல்களை ஏற்கும் மனநிலைக்குச் சென்றனரே தவிர மோடி அரசின் திட்டம் என்பதை புரிந்து கொள்ளும் அளவிற்கு வரவில்லை.



**விலைவாசி உயர்வு:** அத்யாவசியப் பொருட்களை வாங்கி வாழ முடியாத அளவிற்கு கடும் விலை ஏற்றம் காரணம் பொருட்களின் விலை மீது 20, 30 சதம் கூட்டி வைக்கப்பட்ட ஜி.எஸ்.டி. வரி. இன்னொன்று லாரி போக்குவரத்து கட்டண உயர்வு. அதற்குக் காரணம் நாளும் ஏறும் டீசல் பெட்ரோல் விலை உயர்வு. சுங்க வரி உயர்வு.

வாழமுடியாது தவிக்கும் ஏழைகள் பட்ட கோபதாபப் புலம்பல்களோடு அடங்கியது என்பது தானே கண்ட நிதர்சனம்.

நடுத்தர வர்க்கம் தனக்குக் கொஞ்சம் வாங்கும் சக்தி இருப்பதனாலே அசட்டுப் பெருமையுடன் விலைவாசி என்றால் அது ஏறத்தானே செய்யும்! என்று வறட்டு வேதாந்தம் பேசி தானும் கெட்டு மற்றவர்களையும் கெடுக்கிறது. இது மிகப் பெரிய அவலம்.

இந்த நடைமுறைச் சூழ்நிலையை நாம் புரிந்து கொண்டு மக்களை அணி திரட்டிப் போராடுவதற்கான வழிவகைகளைக் கண்டாக வேண்டும். பாசிசம் தொடருவதற்கு வழிவகை செய்யும் படரும் இந்தப் பாசிகள் அகற்றப் பட வேண்டும். அதற்கான பொதுத் திட்டங்கள் வகுக்கப் படவேண்டும்.

**என்ன செய்ய வேண்டும்?:** இப்போது தேச எதிரியாக இருக்கிற ஆர்.எஸ்.எஸ். பாசிசம் இன்று எல்லா நிலை மக்களிடமும் குறிப்பாக இளைஞர்களிடமும் பெண்களிடமும் செல்கிறது. இளைஞர்களின் மனதில் தூவப்படுகிற கருத்து ஆழமாகப் பதியும் என்பதை சரியாகப் புரிந்து கொண்டு பல்வேறு வரலாற்றுத் திரிபு கருத்துக்களை, இந்துத்வா கொள்கைகளை , மதவெறி கருத்துக்களை விடாது பரப்புரை செய்யும் வேலையைச் செய்து வருகிறது. விடுதலைப் போராட்ட வரலாறு திரித்துக் கூறப்படுகிறது.

இளைஞர்களையும், பெண்களையும், மக்களையும் நெருங்கி அவர்களிடம் பாசிச இந்துத்துவா ஆர்.எஸ்.எஸ். அபாயங்களை எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டியது மிக மிக அவசியமாகிறது. பாசிச ஆட்சி செய்து வரும் அடுக்கடுக்கான மக்கள் விரோத, தேசத் துரோக செயல்களை எடுத்துச் சொல்லி பாசிசத்தை வேரறுக்க வேண்டியதின் அவசியத்தையும் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

**இடது சாரி கருத்துக்களை இளைஞர்கள் விரும்புவார்கள். அதற்கு அவை அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப் படவேண்டும். பரவலாக அனைவரும் விரும்பும் கலை இலக்கியங்களின் மூலம், இதிகாசங்கள் மூலம் எடுத்துக் கூறும் வேலையை பேராசான் ஜீவா வழியில் நின்று நாம் செயல் படுத்த வேண்டும். பாசிச மோடி ஆட்சி அவலங்களை ஸூம், கூகுள் , வாட்ஸ் ஆப் நேரலை மூலமாக கொண்டு சென்றால் மட்டுமே போதும் என்கிற முடிவுகளை கொஞ்சம் விரிவுபடுத்தி நேரிடை மக்கள் சந்திப்புகளில் கவனம் செலுத்த வேண்டும். வீதிகள் தோறும், கிராமங்கள் தோறும் கலை இலக்கியப் பெருமன்றம் விரிவு படுத்தப்பட வேண்டும்.**

தொழிற்சங்க கூட்டங்களில் அத்துறை சார்ந்த, ஊழியர்கள் சார்ந்த கோரிக்கைகள் மட்டுமே பேசப்பட வேண்டும் என்பது சரி. ஆனால் அதோடு நிறுத்திக் கொள்ளாது அத்துறை சீரழிக்கும், தேசம் சீரழிக்கும் மக்களை சீரழிக்கும் கார்ப்பரேட் மோடி ஆட்சி அபாயம் பற்றியும், தேச அரசியல் பற்றியும் கொஞ்சமாவது பேச வேண்டும். தொழிலாளர்களை அரசியல் வசப்படுத்த வேண்டும்.

மதப்பற்றுக்கும் மதவெறிக்கும் உள்ள வேறுபாடுகளை ஆன்மீக அன்பர்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும். பெண்ண டிமைப் பேசும் சனாதன பேய் தின்னும் சாத்திரங்களைத் தோலுரித்துக் காட்ட வேண்டும். சிறுபான்மை மக்கள் மீதான மதவெறிக் கொள்கை தேசத்தின் ஒற்றுமைக்கும், மதச்சார்பற்ற மத நல்லிணக்கத்திற்கும் எவ்வளவு ஆபத்து என்பதையெல்லாம் மிக விரிவாக எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

பாசிசம் எதிர்க்கும் அத்தனை தேச பக்த ஜனநாயக சக்திகளின் ஒற்றை வரி கோரிக்கை பாசிசம் ஒழிப்பது என்ற ஒன்றாக மட்டுமே இருக்க வேண்டும். இந்த ஒற்றை வரி கோரிக்கையை நிறைவேற்ற இந்த சக்திகள் ஒன்றிணைய வேண்டும்.

இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கே அபாயம் பாசிச ஆட்சியில். பெற்றுத்தந்த சுதந்திரம் காத்திட போராட வேண்டிய கட்டாயத்தில் நாம். நமது சந்ததிகளுக்கு நல்லதொரு நாட்டை விட்டுச் செல்ல வேண்டும் எனில் நாம் வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்! எனும் மடமை நிலை மக்களாக வாழாது சுதந்திரத்தைப் பறிக்கும் பாசிசத்தை போராடி வீழ்த்த வேண்டும்.

**நெருங்குகிறது 2024:** மக்களிடம் ஒன்றிய பாசிச இந்துத்துவா ஆர்.எஸ்.எஸ். ஆட்சியின் கொடுமைகளை எடுத்துச் சொல்லி , பாசிசம் ஒழித்து நாட்டைக் கைப்பற்ற வேண்டிய அவசரத்தை எடுத்துக் கூறி மக்களை எழுப்பி அணிதிரட்ட வேண்டும்.

மோடி அரசு கார்ப்பரேட்டுகளின் அரசு அது மக்களுக்கான அரசு அல்ல என்னும் கருத்து மக்களை அடையச் செய்ய வேண்டும்.

மக்களை மத, சாதி மயக்கத்தில் தள்ளி மூளைச் சலவை செய்து வாக்கு வாங்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் மாரீச மான் ஆசையிலிருந்து மக்களைப் பிரித்தெடுக்க வேண்டும்.

இந்தியா இந்துத்வா மண் எனும் மாயை உடைக்க வேண்டும். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தலைமை என எல்லாவற்றையும் ஒன்றாக்கி ஜனநாயகம் வீழ்த்தும் வேலைத் தடுக்கப் படவேண்டும். தேச ஒற்றுமையைச் சீரழிக்கும் இஸ்லாமிய, கிருத்துவ மத எதிர்ப்பு மடியச் செய்ய வேண்டும்.

மதச்சார்பின்மை காப்பாற்றப் படவேண்டும்.மாநில உரிமைகள் காப்பாற்றப் படவேண்டும்.

மாற்றம் சாத்தியப்படாத ஒன்று அல்ல. பல மாற்றங்களை உருவாக்கிய ஏற்படுத்திய அனுபவம் நமக்கு உண்டு. கடினமான பணிதான். ஆனால் சாத்தியப்படாத ஒன்றல்ல. மக்களைக் கூட்டிக் களமிறங்கினால் மாற்றம் நிச்சயம் வசப்படும்.

சிறு சிறு வேற்றுமைகளைப் புறந்தள்ளி பாசிசம் ஒழித்து பாரதம் காத்திட அனைத்து சக்திகளும் இணைவோம். பாசிசம் அகற்றும் ஒற்றைப் புள்ளியில் சங்கமிப்போம்! பாசிசம் வீழ்த்தாது ஓய்வதில்லை என சபதமேற்போம்! ஜனநாயக மதச் சார்பற்ற சக்திகள் ஓரணியாக, பாசிசம் எதிர்த்து மோதுவோம்! பாராளுமன்றத்தில் பெரும் எண்ணிக்கையில் நுழைந்தால் மட்டுமே தேசம் தொட்டு எல்லாமும் காப்பாற்ற முடியும் என்ற வெறியோடு தேர்தலை எதிர்கொள்ள திட்டமிடுவோம்!

2024 பாராளுமன்றத் தேர்தலில் பாசிச பிஜேபி வீழ்த்தாது ஓய மாட்டோம்! தலை சாய மாட்டோம்! என்ற முழக்கத்துடன் இட்ட பணி இது தவிர்த்து இனி வேறு பணி எமக்கில்லை என தேர்தல் களம் நோக்கி புதுப் பாதை அமைப்போம்! பத்தாண்டு கால பாசிச ஆட்சியைத் தூக்கி எறிந்து விட்டோம் என பதாகை உயர்த்திப் பறை சாற்றுவோம்! நெருங்கி விட்டோம்! நாளை நமதே! நிச்சயம் நமதே!

தொடர்புக்கு: **94449 56694**

# கொள்ளிடம்: சில தகவல்கள்

**- எம்.பிரபாகரன்**

கடந்த ஜூலை 20 தொடங்கி,நமது கொள்ளிடம் ஆற்றுப் படுகைப் பகுதியில் (மயிலாடுதுறை மாவட்டம்) நான்காவது முறையாக வெள்ளம் புகுந்து,வேளாண்மையையும், குடியிருப்புகளையும்பெரும் சேதத்தை ஏற்படுத்தி,வங்கக் கடலில் கலந்து வருகிறது. இதற்கு முன்பு குறுகிய காலத்தில் இப்படி ஒரு வெள்ளம் வந்தது இல்லை. மேட்டூர் அணை கட்டி முடித்த பின்னர், அதிகபட்சமாக 1961ல் 329 டிஎம்சி நீர் வந்துள்ளது. அதற்குப் பிறகு, 61 ஆண்டு களுக்குப் பின்னர், இப்போது தான் நீர்வரத்து 366 டிஎம்சியை எட்டியுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து,இதுவரை 350 டிஎம்சிக்கும் மேலாக, இவ்வாண்டில் காவிரியில் திறக்கப் பட்டுள்ளது. இது அணை வரலாற்றில் புதிய சாதனையாக பதிவாகியுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு வரலாறு காணாத வெள்ளத் தினைத் தொடர்ந்து அவ்வப்போது கொள்ளிடம் ஆற்றின் வெள்ளத்தின் போதெல்லாம் தண்ணீர் வீணாகிறதே... முடிந்த அளவு சேமிக்கலாமே ?என்கிற மக்களின் எண் ணங்கள், உணர்வுகள், சிந்தனைகள்...கட்டுரைகளாக, கோரிக்கைகளாக ,ஆலோசனையாக பல பகுதிகளில் இருந்தும்,நமது பகுதியில் இருந்தும் அவ்வப்போது உள்ள அரசுகளுக்கு, சென்று கொண்டுதான் உள்ளது.

இவையெல்லாம் பெரிய அளவில் மத்திய, மாநில அரசுகளால் முடிவெடுத்து செயல்படுத்தக் கூடியது. 25 ஆண்டுகள் தொடர் கோரிக்கைக்கு பிறகு தற்போதைக்கு ...

கொள்ளிடம் ஆற்றில்,கீழணைக்கு பிறகு, ஆதனூர் குமாரமங்கலம் கதவணை கட்டப்பட்டு வருகிறது. பெரும்பகுதி பணி முடிந்து விட்டது. அடுத்து நமது பகுதியின் முக்கிய கோரிக்கை ... 1)மாதிர வேளூர்நளன் புத்தூர் கதவணை. 2)கொள்ளிடம் ஆற்றில் கிழக்கே வெள்ள மணல் பகுதியில் கடல் நீர் உட்புகாத வண்ணம் கதவணை கோரிக்கை.

இவை இரண்டும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அதனை வலியுறுத்தி, விரைவு படுத்தி, நடைமுறைக்கு கொண்டு வந்து விட்டால்...அரசுக்கும், மக்களுக்கும் மிகப்பெரிய சாதனைப் பணியாக அமையும்.

இது கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணைக்கும், கொள்ளிடம் ஆற்றின் கடைசி பகுதியான காட்டூருக்கும் இடையேயான 60 கிலோ மீட்டர் தூரத்தில் மூன்று அணைகள் அமைவது மிகப்பெரிய மக்கள் நலன் சார்ந்த பணியாக அமையும்.

இதுகுறித்து சமீபத்தில் பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகளிடம் பேசிக்கொண்டிருந்தபோது, நான்கைந்து ஆண்டுகளில் அமைந்துவிடும் என்று நம்பிக்கை தெரி வித்தார்கள். கீழ் அணைக்கும் மேற்கே கல்லணை வரைக்கும் ஏழு கதவணைகள் அமைக்க வேண்டும் என விவசாய சங்கங்களும்,ஓய்வுபெற்ற பொறியாளர்கள் சங்கமும் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றன . பொதுவாக இன்னொரு விஷயமும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடல் நீர் மழை மேகங்களால் உறிஞ்சப்பட்டு, நிலப்பகுதியில் மழையாகப் பொழிந்து, மீண்டும் கடலில் சென்று சேருவது,ஒரு இயற்கை சுழற்சி. கடலுக்குச் செல்லும் எல்லா நீரையும் நம்மால் தடுத்து விட முடியாது. நமக்கு தேவையான நீரை தேக்கி, பகிர்ந்து,பயன்படுத்திக் கொள்ள முடியும். அதற்கு தேவை யான அறிவும், அறிவியலும், தொழில்நுட்பமும், இப் போது அதிகம். முடிவு எடுக்க வேண்டியது , மத்திய மாநில அரசுகள் தான். 1800 ஆண்டுகளுக்கு முன்பு, கரிகால் பெருவளத்தான்,என அழைக்கப்படுகிற, கரிகாற் சோழன் காவிரியில் அணைகளே இல்லாதகாலத்தில், சமவெளிப் பகுதியில் கல்லணையை கட்டி, சமவெளிப் பகுதியில் அணை கட்டும் தொழில்நுட்பத்தை உலகத்திற்கு வழங்கி,தமிழனுக்கு நிலைத்த பெருமையும், புகழையும் தேடி தந்த மாபெரும் தமிழன். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தமிழகம் வந்த சர் ஆர்தர் காட்டன் என்கிற பொறியாளர் கல்லணையை பார்வையிட்டு வியந்து, பாராட்டி கிராண்ட் அணைக்கட் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். அந்தப் பெயர் இன்றுவரை நிலைக்கிறது. என்றும் நிலைக்கும் !

அத்தோடு நின்று விடாமல், கரிகாற் சோழனின் அணை தொழில்நுட்பத்தை உள்வாங்கி, 1836 இல், அப்போது, இரண்டு லட்சம் ரூபாயில் முக்கொம்பு மேல் அணையைக் கட்டினார். இன்று வரையிலும், டெல்டா பாதுகாப்பிற்கு அந்த அணைதான் காரணம். அதற்குப் பிறகும், கொள்ளிடம் ஆற்று நீர் வீணாக கடலில் கலக்கிறதே...என்று கருதி 1840 இல், கல்லணையை முன்னோடியாகக் கொண்டு கீழணையயைக் கட்டி, தெற்கு ராஜன்,வடக்கு ராஜன்பாசன வாய்க்கால்களை,கொள்ளிடம் ஆற்றின் தெற்கு புறமும் ,வடக்கு புறமும், உருவாக்குகிறார்.

அத்தோடு, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் பராந்தக சோழனால் வெட்டப்பட்ட ,வீராணம் ஏரிக்கும் தண்ணீர் கொண்டு செல்வதற்கு, கீழணையில் வடக்கு ராஜனுக்கு, வடப்புறம், வடவாறு என்கிற பாசன ஆற்றை உருவாக்கி, பாசனத்திற்கும், வீராணம் ஏரிக்கும், கடலுக்கு வீணாக செல்லும் நீரை தடுத்து, கொண்டு சென்றார். அந்த வீராணம் ஏரியில் இருந்து தான்,இன்றைய தலைநகர் சென்னை தண்ணீர் குடிக்கிறது. கல்லனையை முன்னோடியாக வைத்து ஆந்திராவிலும் பெரிய நீர்ப்பாசன திட்டங்களை செயல்படுத்தினார் சர் ஆர்தர் காட்டன்.

இவர், இந்திய நீர் பாசனத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். கரிகால் பெருவளத்தானையும், சர்.ஆர்தர் காட்டனையும் என்றும் நாம் நினைவில் வைத்து நன்றி கூறுவோம். கீழணைக்கு கிழக்கே, சுமார் 180 ஆண்டுகளுக்கு பிறகு,கொள்ளிடம் ஆற்றில் ஆதனூர் குமாரமங்கலம் கதவணை அமைந்துவருகிறது . சென்னை உட்பட 8க்கும் மேற்பட்ட மாவட்டங்களுக்கு இன்று குடிநீர் ஆதாரம், கொள்ளிடம் ஆறு தான்.

ஆகவே, கொள்ளிடம் ஆற்றில் அணைகள் கட்டுவோம், ஆற்றுப்படுகையை காப்பாற்றுவோம் ,கொள்ளிடக்கரையை பலப்படுத்துவோம்.

தொடர்புக்கு: **6380677313**

# ஏழை மாணவர்களுக்கு தரமான பயிற்சிகளை வழங்கிடுக!



**டாக்டர் ஜி. ஆர். இரவீந்திரநாத்**

**அரசுப் பள்ளி மாணாக்கர்கள் நீட் தேர்வில் 80 விழுக்காட்டினருக்கும் மேல் தோல்வியுற்று இருப்பதாக வரும் புள்ளிவிவரம் வருத்தத்தை தருகிறது.**

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ இடங்க ளுக்கு, நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற நடவடிக்கைகளை மேலும் தீவிரப் படுத்த வேண்டும். அதே சமயத்தில் ஏழை மாணவர்களுக்கு “நீட்” உள்ளிட்ட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான தரமான இலவச பயிற்சியை வழங்கிட கூடுதல் கவனம் செலுத்திட வேண்டும்.

தமிழக அரசின் ஒதுக்கீட்டிற்குரிய மருத்துவ இடங்களுக்கு நீட்டிலிருந்து விலக்கு பெற்றாலும் கூட, நீட் பயிற்சி மையங் களை தொடர்ந்து சிறப்பாக தமிழ்நாடு அரசு நடத்திட வேண்டும்.

தமிழக அரசின் ஒதுக்கீட்டு இடங்களுக்கு , நீட் தேர்வி லிருந்து விலக்கு பெற்றாலும் கூட...

**AIIMS,JIPMER**, ராணுவ மருத்துவக் கல்லூரி, தனியார் நிகர்நிலை மருத்துவப் பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட மருத்துவ நிறுவனங்களில் உள்ள மருத்துவ இடங்களுக்கும்,

அகில இந்தியத் தொகுப்பு இடங்கள் உட்பட ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவம், ஆயுஷ் மருத் துவம்,பல்மருத்துவம், செவிலியர் படிப்பு உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கும், வெளிநாடுகளில் மருத்துவம் படிப்பதற்கும், நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவது அவசியமாகியுள்ளது.

தமிழக மாணவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து தனியார் மருத்துவக் கல்லூரிகள், தனியார் நிகர்நிலை மருத் துவப் பல்கலைக் கழகங்கள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களிலும் சேர உரிமை உண்டு. அகில இந்திய அளவில் இருக்கின்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ இடங்களிலும், ஆயுஷ் மருத்துவப் படிப்பு இடங்களிலும், தமிழக மாணவர்கள் சேர உரிமை உண்டு. அதற்குத் தகுதி படைத்தவர்களாக நமது மாணவர்களை உருவாக்க வேண்டும். தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டு இடங்களில் சேர்வதற்கும் கூட, மாணவர்கள் நீட் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண் டும்,தேர்வு எழுத வேண்டும், வெற்றி பெற வேண்டும். அப்பொழுதுதான் அந்த இடங்களை அவர்கள் பெற முடியும்.

நேரடி பயிற்சி வகுப்புகளை அரசு போதுமான அளவு நடத்தாதது இப்பின்னடைவிற்கு மிக முக்கியமான காரணம் எனத் தெரிகிறது. உயர்கல்வி முழுமையாக மாநிலப் பட்டியலுக்கு வரும்வரை.., மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் ஏராளமான உயர்கல்வி படிப்புகள் இருக்கும் வரை..,

தி.மு.க வின் தேர்தல் அறிக்கையிலும்,இதர தமிழக அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளது போல், ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு, தரமான இலவச பயிற்சியை தமிழ்நாடு அரசு வழங்கிட வேண்டும். இம்மையங்களுக்கு தனியாக பயிற்சியாளர்களை நிய மனம் செய்திட வேண்டும்.

அரசுப் பள்ளிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்திட வேண் டும்.ஆசிரியர் காலிப்பணி இடங்களை உடனடியாக, நிரத்தர அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.

தேசியத் தேர்வு முகமை கூட, மாவட்ட அளவில் நீட் போட்டி தேர்வுக்கு பயிற்சி வழங்கப்படும் என அளித்த வாக்குறுதியை நிறை வேற்றவில்லை.

மருத்துவக் கல்வி உட்பட அனைத்து படிப்புகளிலும் மாநில உரிமைகளை காத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கியூட் தேர்வை, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள உயர்கல்வி இடங்களுக்கு ஒன்றிய அரசு திணிக்கக் கூடாது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து அரசு மருத்துவ கல்லூரிகளில் பயிற்சி மருத்துவர்களும், பட்ட மேற்படிப்பு மாணவர்களும் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருவது கவ லையை அளிக்கிறது.

தொடர்ந்து கடுமையான உழைப்பு சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்படுவதும், 24 மணி நேரத்தில் இருந்து 36 முதல் 48 மணி நேரம்,வரை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்படுவதும், தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

அதனால் வேறு வழியின்றி, பலர் மிகுந்த மன வேதனை யுடன், பணிபுரிகின்றனர். அதில் சிலர் தற்கொலை போன்ற மிக மோசமான முடிவை எடுத்து விடுகின்றனர்.

எனவே, 8 மணி நேரம் மட்டுமே வேலை வழங்க வேண்டும். 8 மணி நேரத்திற்கு மேல் வேலை வழங்கக் கூடாது. பயிற்சி மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் பயிற்சிக்கான பணி நேரத்தை வரையறுக்க வேண்டும் என, சென்னை உயர்நீதிமன்றத்தில் 2015 ஆம் ஆண்டு டாக்டர். ஜி. ஆர். இரவீந்திரநாத் அவர்களால் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதன் மீது தீர்ப்பளித்த சென்னை உயர்நீதிமன்றம், 8 மணி நேரத்திற்கு மேல் தொடர்ச்சியாக வேலை வழங்கக் கூடாது என அதிரடி உத்தரவை பிறப்பித்தது. கல்லூரி நிர்வாகங்கள் அந்த உத்தரவை நடை முறைப் படுத்தவில்லை. அதன் காரணமாக, பயிற்சி மருத்துவர்களும், பட்ட மேற்படிப்பு மாணவர்களும் தொடர்ந்து கடும் உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாகி வருகிறார்கள். 24 மணி நேரப் பணி என தொடங்கி, 36 முதல் 48 மணி நேரம் வரை தொடர்ந்து வேலை செய்ய வேண்டிய மனிதநேயமற்ற சூழல் உருவாக்கப்படுகிறது.

இது போன்ற நிலைமைகள் ஏற்படாமல் தடுத்திட, ‘‘மாணவர்கள் நல வாரியம்‘‘ போன்ற அமைப்புகளை மாநில அளவிலும் , மருத்துவக் கல்லூரிகள் மட்டத்திலும் உருவாக்க வேண்டுமென, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் நீண்ட காலமாக கோரி வருகிறது. ஆனால், இதுவரை அக்கோரிக்கை ஏற்கப்படவில்லை .


**பயிற்சி மருத்துவர்கள் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் பணி நேரம் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நடைமுறை படுத்தப்படுகிறதா என்பதை தமிழ்நாடு அரசு உடனடியாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

தேசிய மருத்துவ ஆணையமும் 10.08.2022 அன்று மருத்துவ மாணவர்களின் பணிச் சுமை குறித்தும், மோசமான பணிச் சூழல் குறித்தும்,விடுப்புகள் குறித்தும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதை மீறும் கல்லூரி நிர்வாகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மருத்துவக் காப்பீடுத் திட்டப் பணிகளை முதுநிலை மருத்துவ மாணவர்களிடமும்,பயற்சி மருத்துவர்களிடமும் கொடுப்பதை உடனடியாக கைவிட வேண்டும்.இது அவர்களின் துறை ரீதியான பயிற்சியை பாதிப்பதோடு, கூடுதல் பணிச்சுமையை வழங்குகிறது.

அனைத்து தமிழக அரசு மருத்துவர்களுக்கும், பகல் நேரப் பணி அதிக பட்சமாக 8 மணி நேரம், இரவு நேரப் பணி அதிக பட்சமாக 12 மணி நேரம் என நிர்ணயித்து, உடனடியாக “பணி நேரம் குறித்த உத்தரவை” வழங்க வேண்டும்.



வீடுகளில் பிரசவம் பார்ப்பதை விட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவம் பார்ப்பது சிறந்தது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவம் பார்ப்பதை விட அனைத்து அடிப்படை கட்டமைப்புகளும் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் பிரசவம் பார்ப்பது தான் தாய்க்கும் சேய்க்கும் பாதுகாப்பானது .

மகப்பேறு சிகிச்சை வழங்கும் மருத்துவமனைகளில் ,மகப்பேறு மருத்துவர் ,மயக்க மருத்துவர், குழந்தைகள் மருத்துவர் 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும்.

24 மணி நேரமும் செயல்படக்கூடிய அறுவை அரங்கு, இரத்த வங்கி, சுகாதாரத்துறை துணை பணியாளர்கள் இருக்கின்ற மருத்துவமனைகளில் தான் பிரசவம் பார்க்கப்பட வேண்டும் . இந்த முறை தான் பாதுகாப்பானது.

எனவே, அதற்கு ஏற்றாற் போல் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் கர்ப்பிணி பெண்களுக்கு வழிகாட்டி தக்க ஆலோசனைகளைக் கூற வேண்டும்.

தமிழக அரசு மருத்துவமனைகளில் தற்போது உள்ள சிறப்பு மருத்துவர்கள் உள்ளிட்ட மனித வளத்தையும்,ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் சரியாக திறம்பட பயன்படுத்தப் படாத போக்கு உள்ளது.

அதன் காரணமாக பாதுகாப்பற்ற சூழலில் பிரசவங்கள் நடக்க நேரிடுகின்றது. இதனால், தொடர்ந்து தடுக்கப்படக் கூடிய பல தாய் சேய் மரணங்கள் நடக்கின்றன.

அது போன்ற நிகழ்வுகள் நிகழும் போது, உண்மையான காரணங்களை ஆராய்ந்து சரி செய்யாமல், அப்போதைக்கு அங்கு பணி செய்யும் சிலர் மீது நடவடிக்கை எடுப்பது சரியல்ல. இது பிரச்சனைக்குத் தீர்வாகாது.அடிப்படைக் காரணங்களை கண்டறிந்து தீர்வுகாண வேண்டும் என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

தொடர்புக்கு: **9940664343**



# கிராமப்புற மாணவர்களுக்கு எ

- கே.கதிரவன்

**பல்கலைக்கழக மானியக் குழு கடந்த ஜூன் மாதம் மூன்றாம் தேதி பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் SWAYAM தளத்தில் உள்ள இளங்கலை பட்டப் படிப்பிற்கான பாடங்களில், மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய பாடங்களை தேர்ந்தெடுத்து படைத்துக் கொள்ளலாம் அதற்கு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் வழிவகைகளை உருவாக்கித் தர வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.**

தற்பொழுது பல்கலைக்கழகங்கள் தங்களை சார்ந்த கல்லூரிகளுக்கு மூன்று வருட இளங்கலை பட்டப்படிப்புகளை நேரடி வகுப்பு மூலம் தந்து வருகின்றன,அதாவது ஒவ்வொரு செமஸ்டர் பருவ தேர்விலும் 6 பாடங்கள் வீதம் ஆறு பருவ தேர்விற்கு சேர்த்து முப்பத்தி ஆறு பாடங்கள் படித்து முடிக்க வேண்டும். இதில் 40 சதவிகித பாடத்தினை இந்த தளத்தில் மூலமாக தரவிரக்கம் செய்து மாணவர்கள் படித்துக்கொள்ளலாம் என யூ.ஜி.சி. கூறியுள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழு குழுவின் நோக்கமானது கல்வி அனைவருக்கும் எளிதாகவும், சமமாகவும் தரமான கல்வியை அனைவருக்கும் சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்தளம் உருவாக்கப்பட்டதாக கூறியுள்ளது. சுவயம் தளத்தின் மூலமாக அனைத்து கிராமப்புற ஒடுக்கப்பட்ட மற்றும் அடித்தள மக்களுக்கு இக்கல்வி சென்றடையுமா என்று ஒரு கேள்வி நம் முன்னே எழுகின்றது.

இளங்கலைப் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்கள் தாங்கள் விருப்பப்பட்ட பாடத்தினை சுவயம் தளத்திலுள்ள 348 பாடப்பிரிவுகளில் எந்தப் பாடத்தை வேண்டுமானாலும் தேர்வு செய்து இணைய வழியில் படிக்கவும் பின்பு இணையத்தின் மூலமாக தேர்வு எழுதி பெற்ற மதிப்பெண்ணிற்கு சமமான மதிப்பீடுகளை( சிஸிணிஞ்ிமிஜி) அந்தந்த பல்கலைக் கழகத்திடம் அளித்து ஒட்டுமொத்த மதிப்பெண் சான்றிதழை நாம் பெறலாம். இது பயனுள்ளதாக இருப்பதுபோல் நம் முன்னே தோன்றுகிறது. ஆனால் இது முழுக்க முழுக்க கிராமப்புற ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சாதகமானதாக இல்லை.

மூன்று வருட பட்டப் படிப்பிற்கு இளங்கலை படிக்கும் மாணவர்கள் குறைந்தது 36பாடங்களை படிக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் 142 கிரெடிட் மதிப்பீடுகளை பெறுவார்கள்.பல்கலைக்கழக மானியக்குழு அறிவுறுத்துவது என்னவென்றால் கிட்டத்தட்ட 40 சதவிகித பாடங்களை இந்த இணையதளத்தின் மூலமாக கற்க வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளது, அதாவது இளங்கலை வகுப்பு மாணவர்கள் கிட்டத்தட்ட 14 பாடங்களை இணைய வழி மூலமாக தேர்வு செய்து பட்டங்களைப் பெற வேண்டும், ஆனால் இந்த இளங்கலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பாடம் அனைத்தும் இந்த இணையதளத்தில் இருக்கின்றதா என்றால் இல்லை என்றே கூறலாம்.

சுவயம்தளத்தில்உள்ளபாடங்கள்பெரும்பாலும்தொழில்நுட்ப கல்வி மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது, அதாவது தொழிற் கல்வியை கற்கும் இளங்கலை மாணவர்களுக்கும் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காகவும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் இத்தளத்தில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்காக குறைந்தது 10% பாடத்திட்டங்கள் கூட இத்தளத்தில் உருவாக்கப்படவில்லை அதாவது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள வரலாறு பொருளாதாரம் மொழி அதுபோல் அறிவியலில் உள்ள இயற்பியல் வேதியியல் மற்றும் உயிரியல் போன்ற படிப்புகளுக்கான பாடத்திட்டங்கள் இதில் இடம்பெறவில்லை என்பது வேதனைக்குரியதாகும். குறிப்பாக உயிரியல் பாடத்தில் தாவரவியல் மற்றும் விலங்கியல் என்ற இரண்டு பட்டப்படிப்புகள் உள்ளன, இந்த பட்டப் படிப்புகளில் தாவரவியலில் பாடத்தினை எடுத்துக்கொண்டால் அதில் கிட்டத்தட்ட 30க்கும் மேற்பட்ட பாடங்கள் 3 வருடத்தில் படித்து கற்றுணர வேண்டும் அதுபோல் விலங்கியலில் 30க்கும் மேற்பட்ட பாடங்கள் கற்றுணர வேண்டும், ஆனால் தற்பொழுது இத்தளத்தில் உள்ள 348 பாடங்களில் ஆறு பாடங்கள் மட்டும் தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடப் பிரிவு மாணவர்களுக்கானது. இது போல் அடிப்படை கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு பாடங்களே தளத்தில் இல்லாதபோது பல்கலைக்கழக மானியக் குழு ஒவ்வொரு பல்கலைக்கழக துணை வேந்தர்களுக்கு, இத்திட்டத்தை செயல்படுத்தி அறிக்கை கேட்பது வேடிக்கையாக உள்ளது.

பாடத்திற்கான தரவுகள் தளத்தில் இல்லாதபோது மாணவர்கள் எங்கு சென்று இந்த பாடங்களை படிப்பார்கள் அல்லது வரலாறு அல்லது தாவரவியல் படிக்கும் மாணவர்கள் தொழில்நுட்ப கல்லூரிகளுக்காக உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தினை எப்படி படிக்க முடியும்.

பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவிப்பினால் இனிவரும் காலங்களில் ஆசிரியர் பணிக்கான வேலை வாய்ப்புகள் இல்லாமல் போகின்ற சூழ்நிலை ஏற்படும். தமிழகத்தில் கடந்த 2014க்கு பிறகு பேராசிரியர் பணியிடங்கள் கல்லூரிகளில் நிரப்பப்படவில்லை, பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பேராசிரியர் பற்றாக்குறை உள்ளது. கடந்த 10ஆம் தேதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1574 புதிய பாடப்பிரிவுகள் தமிழக அரசால் உருவாக்கப்பட்டன இவற்றிற்கு 3824 புதிய ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்குகின்றனர்,

தற்போது இன்றுவரை 7500 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன, இந்த காலிப்பணியிடங்களை நிரப்பு வதற்காக தமிழக அரசு தற்காலிக ஆசிரியர்களை நியமித்து கல்லூரிகளை நடத்தி வருகின்றது. பெரும்பாலான அரசு கலை கல்லூரிகளில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் தற்காலிக பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றனர். பல்கலைக்கழகங்களில் கடந்த 56 வருடங்களாக பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. இதனால் அறிவார்ந்த மாணவர்களை நாம் உருவாக்கிய வருகின்றோமா என்ற சந்தேகம் நாளுக்குநாள் எழுந்து வருகிறது.



பேரிடர் காலத்தை முன் னிட்டு பல்கலைக்கழக மானி யக்குழு இணைய வழி கல்வியை அறிமுகப்படுத்தி அதனை தமி ழக அரசு மேற்கொண்டு பேரி டர் காலத்தில் மாணவர்களை கல்வி யிலிருந்து விலகி செல்லாமல் பாது காத்து வந்துள்ளோம். ஆரம்பத்தில் பல்கலைக்கழக மானியக் குழு இந்த சுவயம் தளத்திலிருந்து 20 சதவிகித பாடங்களை மாணவர்கள் தேர்ந்தெடுத்து படித்துக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தியது ஆனால் பேரிடர் காலம் முடிந்த பிறகும் தற்பொழுது 40 சதவிகித பாடங்களை இத் தளத்தில் தரவிறக்கம் செய்து படித்து கொள்ளலாம் என்பது வியப்பைத் தருகின்றது.

ஏற்கனவே பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பேராசிரியர் பணியிடங்கள் தற்காலிக பேராசிரியர்கள் வைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற சூழலில் இப்பொழுது 40% பாடங்களை இணைய வழி மூலமாக படித்துக் கொள்ளலாம் என்ற அறிவுறுத்தல் மூலமாக மாணவர்கள் தங்கள் பாடங்

# குளித்தலையில் தோழர் ஆர்.கருப்பையா நினைவாக கிளை நூலகக் கூடுதல் கட்டிடம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மூத்த தலைவர் தோழர் டி.கே.ரங்கராஜன் நாடாளுமன்றத்தில் மாநிலங்களவை உறுப்பினராக 12 ஆண்டுகள் சிறப்பாக பணிபுரிந்தவர். இவரது பணிக்காலத்தில், கரூர் மாவட்டம், குளித்தலையில் இயங்கி வரும் கிளை நூலகத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், குளித்தலை சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினர், தோழர் ஆர். கருப்பையா நினைவாக கூடுதல் கட்டிடம் கட்ட ரூ.25 லட்சம் நிதி 2018 – 19 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்துள்ளார். இந்தக் கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கும் போது தோழர் டி.கே.ரங்கராஜன், மாநிலங்களவை உறுப்பினர் பணிக்காலம் நிறைவடைந்து விட்டது.**

நூலகத்துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோரிடம் தகவல் தெரிவித்து, 07.09.2022 ஆம் தேதி கூடுதல் கட்டிடத் திறப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டு, விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கிளை நூலகத்தின் வாசகர் வட்டத் தலைவர் ஆர்.கருப்பையா மீது மாறாத பாசம் காட்டி வருபவருமான அ.வா.கோபால் தேசிகர் எடுத்த முன் முயற்சியால் விழாவிற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காலை 11 மணிக்கு நூலகப் பணியாளர்களும், ஸ்ரீ கலைமகள் மெட்ரிக் பள்ளி ஆசிரியர்களும் தமிழ் தாய் வாழ்த்துப் பாட நிகழ்ச்சி தொடங்கியது.

கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், தியாகி ஆர்.கருப்பையா திருவுருவப்படத்திற்கு நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், நகர் மன்றத் தலைவர் திருமதி சகுந்தலா பல்லவி ராஜா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் நா. பெரியசாமி முன்.எம்.எல்.ஏ, கரூர் மாவட்ட நூலகர் ஆர்.சரவணகுமார், நகர் மன்றத் துணைத் தலைவர் கே.ஜி.கணேசன், நகர்மன்ற உறுப்பினர் பி.சக்திவேல் ஆகியோர் நூலகத்திற்கு கூடுதல் கட்டிடம் அமைய நிதி ஒதுக்கீடு செய்த டி.கே.ரங்கராஜனுக்கு நன்றி பாராட்டி வாழ்த்துக் கூறினர்.





## மூத்த தலைவர் தோழர் டி.கே.ரங்கராஜன் திறந்து வைத்தார்


கூடுதல் கட்டிடத்தை திறந்து வைத்து டி.கே.ரங்கராஜன் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவோடு, முத்தமிழறிஞர் கலைஞர் முன்மொழிந்த சிறப்புடன் மாநிலங்களவை உறுப்பினராக நாடாளுமன்றப் பணிக்கு சென்றதை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். பின்னர் அஇஅதிமுக ஆதரவில் தேர்வு செய்யப்பட்டதையும் நினைவு படுத்தினார்.

குளித்தலை கிளை நூலகம் பல்வேறு சிறப்புகளை பெற்றதை குறிப்பிட்ட டி.கே. ரங்கராஜன், தனது சிறு வயதில் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் ஆர்.கருப்பையா தனது தலைவராக விளங்கியவர் என பெருமைப்பட எடுத்துக் கூறினார்.

ஆர்.கருப்பையா விடுதலைப் போராட்ட வீரர், முத்தமிழ் காவலரும், திராவிட இயக்கத்தின் முன்னோடியுமான கி.ஆ.பெ. விஸ்வநாதன் அவர்களின் நெருங்கிய உறவினர். கலைஞரின் அணுக்க தொண்டராகவும், திருச்சி மாவட்ட தி.மு.க.வின் தளகர்த்தராகவும் விளங்கிய அன்பில் தர்மலிங்கத்தின் சமகால அரசியல் களத் தோழர் ஆர்.கருப்பையா. இவை எல்லாவற்றையும் விட, அவர் இந்தக் கிளை நூலக வளர்ச்சிக்கு அளப்பரிய பங்கு செலுத்தியுள்ளவர். இவ்வளவு பெருமைக்குரிய மூத்த தலைமுறை அரசியல் தலைவரை, நெறிசார்ந்த பொதுவாழ்வு வாழ்ந்த முன்னோடியை, ஆர்.கருப்பையாவை தற்போது வாழும் இளைய தலைமுறையும், எதிர்காலத் தலைமுறையும் நினைவு கூர வேண்டும். அறிந்து கொள்ள முயல வேண்டும் என்ற உணர்வோடுதான் நூலகத்தின் கூடுதல் கட்டிடம் ஆர்.கருப்பையா நினைவாக அமைய வேண்டும் என்ற விருப்பத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பரிந்துரையின் பேரில் ரூ.25 லட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டது.

இந்த குளித்தலை வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்கும் தன்னை அர்பணித்துக் கொண்ட வாசகர் வட்டத் தலைவர் அ.வா கோபால் தேசிகர், எந்தக் கட்சியையும் சேர்ந்தவர் அல்ல. ஆனால் அவர் எப்போதும் நாடாளுமன்ற, சட்டமன்ற, நகர் மன்றம் போன்ற அமைப்புகளில் செயல்படும் மக்கள் பிரதிநிதிகளையும், நல்ல மனம் கொண்ட கொடையாளர்களையும் அணுகி நற்பணி

# திரான சுவாயம் (SWAYAM)



களை இணைய வழி மூலமாக தேர்ந் தெடுத்தால் ஏற்கனவே பணியில் அமர்ந்திருக்கின்ற பேராசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகின்ற சூழ்நிலை ஏற்படும். தமிழகத்தில் உயர் கல்வியில் அரசு கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள் இயங்கி வருகின்றன, இதில் பெரும்பாலான அரசு உதவி பெறும் கல்லூரிகளில் காலை கல்லூரிகள் மற்றும் மாலை நேர கல்லூரிகள் என இரண்டு வகையான வகுப்புகளை நடத்தி வருகின்றனர். அதில் குறிப்பாக காலையில் நடைபெறும் கல்லூரிகளுக்கு அரசு உதவி பெற்று அரசு உதவி மூலமாக இயங்கி வருகின்றன அதாவது பேராசிரியர் களுக்கான ஊதி யம் மற்றும் இதர நிர்வாக தேவை களுக்கான உதவிகளை அரசு வழங்கி வருகின்றது அதுபோல் மாலைநேர கல்லூரிகள் இதற்கு அப்பாற்பட்டு நடத்தி வருகின்றனர். கல்லூ ரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களில் அல்லது மாண வர் சேர்க்கையில் அர சாங்கம் தலையிடுவதில்லை.



அதில் குறிப்பாக அங்கு வேலை செய்கின்ற ஆசிரியர் களுக்கு பல்கலைக்கழக மானியக் குழு ஐம்பதாயிரம் மாத ஊதியம் என்று கூறியிருந்தாலும் பெரும்பாலான கல் லூரிகள் 20,000 லிருந்து 25,000 ரூபாய் மட்டுமே வழங்கி வரு கின்றன, தற்பொழுது அரசு பல்கலைக்கழக மானியக்குழு இத்திட்டத்தினை பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் செயல்படுத்தினால் ஏற்கனவே இந்த அரசு உதவி பெறும் கல்லூரிகளில் குறைந்த ஊதியத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கின்ற பேராசிரியர்கள் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்படுவார்கள். தனியார் கல்லூரிகளும் இதே சூழ்நிலை ஏற்படும். அது போல் அரசு கல்லூரிகளிலும் 40 சதவிகித பேராசிரியர்களுக்கு வேலை பலு இல்லாததால் அவர்கள் வேறு கல்லூரிகளுக்கு மாறுதல் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாகும் இதனால் கடந்த பத்து வருடங்களாக ஆசிரியர் பணிக்கு காத்திருக்கின்ற முனைவர் பட்டம் பெற்றவர்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகும்.

**கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்பிற்கு தற்பொழுது மாணவர்கள் கல்விக் கட்டணமாக ஒரு பருவத்திற்கு 1200 முதல் 1500 வரை செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு பாடத்திற்கும் தேர்வு கட்டணமாக ரூபாய் 75 செலுத்தி வருகின்றனர் ஆக ஒரு பட்டப்படிப்பு முடிப்பதற்கு தேர்வுக் கட்டணமாக மூன்று வருடங்களுக்கும் சேர்ந்து 2500 முதல் 3 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படுகின்றது ஆனால் தற்பொழுது பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ள இந்த சுவாயம் தளத்தில் இருந்து நாம் படிப்பதற்கு ஒரு பாடத்திற்கு 1000 செலவு செய்ய வேண்டியுள்ளது குறிப்பாக 40% என்ற அடிப்படையில் கிட்டத்தட்ட 14 பாடத்திற்கும் சேர்த்து தேர்வுக் கட்டணமாக மட்டும் 14 ஆயிரம் ரூபாய் செலவு கட்டணம் செலுத்த வேண்டிவரும் ஆக, மாணவன் தன் இளங்கலை பட்டப்படிப்பை முடிப்பதற்கு தற்போது உள்ள நடைமுறைக்கு அப்பால் 15 ஆயிரம் செலவு செய்ய வேண்டி உள்ளது.**

ஆக கிராமப்புற ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் வரும் காலங்களில் ஒன்று அரசு நிர்ணயித்த கட்டணத்தை செலுத்த வேண்டிவரும் அல்லது கல்வியிலிருந்து விலகி செல்ல நேரிடும்.

பல்கலைக்கழக மானியக் குழு சுவயம் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு முன் இந்தியாவிலும் மற்றும் தமிழகத்திலும் மாணவர்கள் இணைய வழி கல்வியின் மூலம் தற்போது எவ்விதமான அடிப்படை பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிந்துகொண்டு இதுபோன்ற திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இணையவழி கற்றலுக்கு அடிப்படையாக மின்சாரம், கணினி மற்றும் கைபேசி அதிலும் அறிவுத்திறன் கைபேசி போன்றவை இன்றியமையாததாக இருந்து, தடையற்ற மின்சாரம் அனைத்து கிராமப்புற மக்களுக்கும் சென்று சேர்கின்றனவா? என்றால் இல்லை என்று தேசிய ஆய்வு மாதிரி ஆணையம் (ஙிஷிஷிளி) அறிக்கை தெரிவிக்கின்றது.

இதன் 2017–18 ஆண்டு ஆய்வறிக்கையின் படி கிராமப்புறங்களில் 4.4 வீடுகளிலும் மற்றும் நகர்ப்புறங்களில் 23.4 வீடுகளிலும் தான் கணினிகள் உள்ளன மற்றும் இணையவசதி அனைத்து கிராமங்களில் சென்று சேர்ந்து இருக்கின்றதா என்றால் இல்லை. நகர்ப்புறங்களில் 42 சதவிகித வீடுகளிலும் மற்றும் கிராமப்புறங்களில் 14.9 வீடுகளிலும் தான் இணையவசதி சென்றிருக்கின்றன. நமது நாட்டில் அறிவுத்திறன் பேசி அனைவரிடமும் இல்லை 24 சதவிகித குடும்பத்தினருடன் மட்டுமே உள்ளது, அதிலும் 11% மக்களிடம் மட்டுமே கணினி, மடிக்கணினி, இணைய வசதிகள் உள்ளன.மின்சாரம், இணையம், கணினி, அறிவுத்திறன் பேசி போன்ற இவற்றை கையாள்வதிலும் வாங்குவதிலும் மற்றும் கிடைப்பதிலும் உள்ள சங்கடங்களை பற்றி புரிதல் இல்லாமலேயே 40 சதவிகித பாடங்களை இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவது என்பது பொருளாதாரத்தில் வசதி படைத்த மாணவர்கள் மேன்மேலும் வளர்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குமே தவிர நலிவுற்ற மாணவர்களை மேம்படுத்துவதற்காக அல்ல என்பது இதன் மூலம் தெரிய வருகின்றது.

சுவாயம் திட்டத்தின் மூலம் 40% பாடங்களை இணையவழி மூலம் கற்கலாம் என்பதினால் அப்பாடங்களை எப்பொழுது வேண்டுமானாலும் படித்து கொள்ளலாம். அதாவது கல்லூரி யிலிருந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இல்லை ஆகையால் மாணவர்களுக்கு எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்பொழுது இதை படித்துக்கொள்ளலாம். அப்படி என்றால் கல்லூரி நேரங்கள் மாற்றப்படுமா என்ற கேள்வியும் நம்முன் எழுகின்றது. அதாவது இப்பொழுது காலை நேர கல்லூரியாக இருந்தாலும் சரி மாலைநேர கல்லூரிகளாக இருந்தாலும் சராசரியாக ஒரு நாளைக்கு 5 மணி வேலை நேரங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒரு வகுப்பு 55 நிமிடம் என்ற கணக்கில் ஒரு நாளைக்கு ஐந்து வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. தற்பொழுது அறிவித்துள்ள இத்திட்டத்தின்படி மாணவர்கள் இணைய வழி மூலமாக பாடங்களை தேர்ந்தெடுத்தால் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த ஐந்து வகுப்புகள் வருங்காலங்களில் 4 மணி நேரமாக குறைக்கப்படுமா என்ற கேள்வி எழுகின்றது, அப்படி குறைப்பது என்றால் அந்த குறைக்கப்பட்ட நேரத்தில் மாணவர்கள் என்ன செய்ய வேண்டிவரும் ஏற்கனவே காலை நேரத்தில் படிக்கின்ற மாணவர்கள் மதியம் தங்களுக்கு இயன்ற வேலைக்கு சென்று விடுகின்றனர் அதேபோல் பகல் நேரம் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் காலையில் தங்களுக்கு ஏற்றவாறு வேலைக்கு சென்று கொண்டிருக்கின்றனர்

குறிப்பாக சென்னை போன்ற நகர்ப்புறங்களில் மாணவர் கள் ஸ்விக்கி சொமேட்டோ போன்ற உணவு அளிக் கின்ற நிறுவனங்களில் பகுதிநேர வேலையாக செய்து கொண் டுள்ளனர். தற்பொழுது மேலும் கல்விக்கான நேரத்தை நாம் குறைத்தால் மாணவர்கள் தங்களின் குடும்ப வருமா னத்தை ஈட்டுவதற்கு வேலைக்கு செல்வதற்கான வாய்ப்பு களை மறைமுகமாக இத்திட்டம் உருவாக்குகின்றது. ஆக ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வரு கின்ற மாணவர்களை மேன்மேலும் ஒரு தினக்கூலியாக உருவாக்குவதற்கு வழியேற்படும், இடை நிற்றல் மீண்டும் ஏற்படும் என்ற அச்சம் நம்மிடையே எழுகின்றது. தரமான கல்விக்கு தகுந்ததை செய்யுமா அரசு?

தொடர்புக்கு: **86673 38638**

---

ஆற்றி வருபவர். அவர் தான் இந்தக் கூடுதல் கட்டிடம் அமைய விதையாக இருந்தவர் என்பதையும் சிறப்பாக குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் பல தலைவர்களின் பெயர்களில் கட்டிடங்கள், சாலைகள், திட்டங்கள் அமைந்திருப்பதை, செயல்படுவதை பார்த்து வருகிறோம். இதனை அடிப்படையாகக் கொண்டு குளித்தலை கிளை நூலகத்தில், 07.09.2022 அன்று திறந்து வைக்கப்பட்டிருக்கும் இந்த கூடுதல் கட்டிடத்திற்கு "தோழர் ஆர்.கருப்பையா நினைவுக் கூடுதல் கட்டிடம்" என்று தமிழ்நாடு அரசு பெயர் சூட்டி பதிவு செய்ய வேண்டும். நாட்டின் விடுதலைப் போராட்டத் தியாகிகளை மதித்து, போற்றி, பாராட்டி வரும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எமது கோரிக்கையை ஏற்பார் என்று நம்பிக்கை தெரி வித்து டி.கே. ரங்கராஜன் தனது உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து உரையாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. பெரியசாமி, தோழர் ஆர்.கருப்பையா, மூத்த தலைவர்கள் ஆர்.உமாநாத், எம்.கல்யாணசுந்தரம், கே.எஸ் சோமு (எ) ராமசாமி போன்றோரின் மூத்த தலைமுறையை சேர்ந்தவர். 1980 முதல் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு மேல், அவரோடு சேர்ந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. இயக்கத்தின் மூத்த தலைவர் டி.கே.ரங்கராஜன், அவரது பொதுவாழ்வின் அடிநாளில் ஆர். கருப்பையாவிடம் பெற்ற தோழமை உறவை மறவாது நினைவில் வைத்து, வருங்கால தலைமுறைகளுக்கும் நினைவூட்டும் வகையில் இந்தக் கூடுதல் கட்டிடம் தோழர் ஆர்.கருப்பையா நினைவாக அமைய நிதியொதுக்கம் செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கட்சி எல்லைகள் கடந்து, மாறாத தோழமை காட்டும் தலைமைப் பண்புக்கு எடுத்துக் காட்டாக செயலாற்றியுள்ள டி.கே.ரங்கராஜன் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், ஆர்.கருப்பையா குடும்பத்தார் சார்பிலும் நன்றி பாராட்டி, நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த நூலகப் பணியாளர், அலுவலர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்களுக்கு நன்றி தெரி வித்தார். நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி. ராஜேந்திரன், குளித்தலை ஒன்றியச் செயலாளர் எம்.பி.செல்வம், ஆர்.கருப்பையாவின் வாழ்விணையர் உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக கிளை நூலகர் ஆர்.செல்வராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். நிறைவாக முசிறி கிளை நூலகர் ம.அனந்த கணேசன் நன்றி கூறினார்.

---

# இறால் பண்ணைகள் அமைத்திடக்கோரும் மானியத்திட்டத்தை முறைப்படுத்திட வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

புதிதாக உவர் நீர் இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைத்திட தமிழ்நாடு அரசின் மீன் துறை அதற்கான விண்ணப்பங்களை கோரி உள்ளது. புதிய குளம் அமைத்து இறால் வளர்ப்பு நிலை வரை செலவாகும் தொகை ரூ.14 லட்சத்தில் ரூ.5.60 லட்சம் மானியமாகவும், பயோபிளாக் மூலம் இறால் வளர்ப்பு செய்திட செலவாகும் ரூ.16 லட்சத்தில் ரூ.7.2 லட்சம் மானியமாகவும் வழங்கப்படும் என்றும் முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என அறிவித்தும் மனுக்கள் கோரப்பட்டுள்ளது.

இது வேடிக்கையான ஒரு அறிவிப்பாகும். 1996 டிசம்பரில் உச்சநீதிமன்றம் கடற்பகுதியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இறால் பண்ணைகளை முறைப்படுத்திட கடலோர ஒழுங்குமுறை சட்டம் 2005 (சிஷீணீனீதீ ஸிமீரீ ஹுறீணீமீ வீஷீஸ் கிநீமீ) (24வது சட்டதிருத்தப்படி) இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைப்பதற்கான பகுதிகளை வரையறை செய்துள்ளது. எவர் ஒருவரும் தன் விருப்பத்திற்கு எந்த இடத்திலும் உவர் இறால் பண்ணை அமைக்க முடியாது என சட்டம் சொல்லுகிறது. கடல் அலை ஏறும் இடத்திலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் இரால் பண்ணைகள் அமைக்கக்கூடாது. அதிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் வரை தான் இறால் பண்ணைகள் அமைக்க வேண்டும். மேற்கண்ட சட்டப்படி நிறுவப் பெற்றுள்ள இந்திய மீன் வளர்ப்பு ஆணையம் (கிஹீஹுணீறீஹு ஹுறீமீ ஹு கூமீ கிஹுமீ லீஷீகூ வீமீஹ் ஷீமீ மிஸீவீணீ) என்ற அமைப்பு மூன்று அடுக்காக உள்ளது. மாவட்டம், மாநில அகில இந்திய தலைமை இந்த மூன்று அமைப்புகளிடம் அனுமதி பெற்ற இடத்தில் மட்டுமே தான் இறால் பண்ணையே அமைக்க முடியும்.

அகில இந்திய தலைமை அலுவலகமே சென்னையில் தான் உள்ளது. இதன் தலைமை இயக்குனராக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி உள்ளார். இந்த மூன்று அடுக்கில் அனுமதி பெறவே ஓராண்டு காலம் நீடிக்கும் என்ற நிலையில் அனுமதி இல்லாமலேயே மனுக்களை பெறுவதும் மானியம் ஒதுக்கீடு செய்வதும் எப்படி சாத்தியம்? முதல் கட்ட அனுமதிக்கான மாவட்ட அளவிலான கமிட்டியின் தலைவரே மாவட்ட ஆட்சியராகும். இவர்களே இப்படி செய்தி கொடுப்பதை புரிந்து கொள்ள இயலவில்லை. எந்த இடத்திலும் இறால் பண்ணை அமைக்கலாம் என்றால், கடல்நீரை மேலே ஏற்றி வளர்ப்பு செய்திடும் நிலை வரும். நிலத்தடி நீரை எடுத்து உப்பை கரைத்து இறால் வளர்ப்பதற்கு தான் வாய்ப்பு ஆகும். அப்படி இயங்கினால் அங்குள்ள மண் வளம் கெட்டுப்போகும். நிலத்தடி நீர் உப்பாக மாறுவதற்கும் குடிநீர் அற்றுப்போகும் ஆபத்தும் உள்ளது.

மேலும், பயோ பிளாக் முறையில் இறால் வளர்ப்பது என்பது எந்த பகுதிகளிலும் இதைபொறுத்தி வளர்த்திட வாய்ப்புள்ளது. நன்னீரை எடுத்து தேவையான அளவுக்கு உவர்நீராக மாற்றிடும். உப்பை கரைத்து இதில் இறால் வளர்த்திட முடியும். இம்முறையும் சுற்றுச் சூழலுக்கும், நீர் மாசுக்கும் நன்னீர் உவர்நீராகமாறி குடிநீருக்கே ஆபத்து ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது. எனவே, உவர் நீர் இறால் வளர்ப்பில் பயோபிளாக் முறையை அனுமதிப்பது நல்லதல்ல. கடல் நீரில் பெருமழை காலங்களில் குறைந்த பட்சம் 10 சதம் பிற காலங்களில் 35 சதம் வரை உவர் தன்மை இருக்கும். இதில் வளர்க்கப்படும் வனாமி இன இறால் வளர்ப்பிற்கு குறைந்தபட்சம் 10 சதமாக இருந்தால் மட்டும் அது உயிர் பிழைக்கும்.

ஆகவே, தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக தலையிட்டு இறால் பண்ணைகள் அமைத்திடக்கோரும் இந்த மானியத்திட்டத்தை தடுத்து முறைப்படுத்திட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.

# தேவை மொழிப் பல்கலைக்கழகங்களுக்கான சமநீதி

## கோ.பாலசுப்ரமணியன்



**தமிழ்நாட்டு உயர் கல்வி நிறுவனங்களுள் பல, தேசியத் தரவரிசைப் பட்டியலில் உயர்நிலை இடம்பிடித்திருப்பது தமிழ்நாட்டின் உயர் கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகளுக்குக் கிடைத்த நற்சான்றாகும். 29.08.2022 இல் வெளியான 'இந்து தமிழ் திசை' நாளிதழின் நடுப் பக்கக் கட்டுரையில் க.திருவாசகம், தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகப் பல்கலைக்கழக மானியக் குழுவின் முனைப்பும் தமிழக அரசின் எதிர் நிலைப்பாடும் அடுத்தடுத்த ஆண்டுகளில் தமிழ்நாட்டு உயர் கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலில் இடம்பெறுவதில் சிக்கல்களை உருவாக்கும் என எச்சரித்துள்ளார்.**

இச்சிக்கல்கள் ஒருபுறம் இருக்க, தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற மொழிப் பல்கலைக்கழகங்கள் தர மதிப்பீட்டில் உயர்நிலைத் தரச் சான்றிதழ் பெறவே இயலாத நிலை உள்ளது என்பதையும் சேர்த்தே கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது.

**மத்திய மொழி நிறுவனங்கள்:** இந்திக்கு மஹாராஷ்டிரத்தின் வார்தாவில் 'மகாத்மா காந்தி அந்தராஷ்டிரீய இந்தி விஸ்வ வித்யாலயா' எனும் மத்தியப் பல்கலைக்கழகமும் (1997), மத்திய இந்தி இயக்ககமும் உள்ளன. உருது மொழிக்கு 'மௌலானா ஆசாத் தேசிய உருதுப் பல்கலைக்கழகம்' (1998) ஹைதராபாத்தில் செயல்பட்டுவருகிறது. இந்திய மொழிகளுக்காக இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம் (1969) மைசூரில் நிறுவப்பட்டுள்ளது. செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ள மொழிகளுள் தமிழுக்கு மட்டும் சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இயங்கிவருகிறது.

சம்ஸ்கிருதம் தவிர்த்து கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளுக்கு, செம்மொழிச் சிறப்பாய்வு மையங்கள் இந்திய மொழிகளின் மத்திய நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலம், அயலக மொழிகள் பல்கலைக்கழகம் (2007) ஹைதராபாத்தில் இயங்கிவருகிறது.

சம்ஸ்கிருதத்துக்கு மத்திய மாநில அரசுகளால் உருவாக் கப்பட்டுள்ள 18 பல்கலைக்கழகங்களுள், 2020இல் நாடாளு மன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் வழியாக மத்திய சம்ஸ் கிருதப் பல்கலைக்கழகம் (டெல்லி), ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி சம்ஸ்கிருத வித்யாபீடம் (டெல்லி), ராஷ்ட்ரீய சம்ஸ்கிருத வித்யாபீடம் (திருப்பதி) ஆகிய மூன்று சம்ஸ்கிருத நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், மத்தியப் பல்கலைக்கழகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.

இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளும் சமச்சீரான வளர்ச்சிபெறுவதை உறுதிப்படுத்த வேண்டியது மத்திய அரசின் கடமை. இந்திய மொழிகள் அனைத்துக்கும் மைசூரில் ஒரு மத்திய நிறுவனம் மட்டுமே உள்ள நிலையில், சம்ஸ்கிருதத்துக்கு மூன்று மத்தியப் பல்கலைக்கழகங்கள் உள்ளன.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளுக்கு உள்ள சிறப்பாய்வு மையங்களும் அந்தந்த மொழிகளின் செம்மொழிக் காலகட்ட மொழி, இலக்கியங்கள் போன்றவற்றை மட்டுமே ஆய்வுசெய்வதற்காக அமைக்கப்பட்ட நிறுவனங்கள்.

இந்நிறுவனங்களில் செம்மொழிகளின் தற்காலப் பயன்பாடு பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவோ திட்டமிட்டு மொழி வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதற்கோ பெரிய அளவில் வழிவகை இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டி உள்ளது.

எதிர்கொள்ளப்படும் சிக்கல்கள்: 1981இல் நிறுவப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அடியொற்றி தெலுங்கு (1985), கன்னடம் (1991), மலையாளம் (2012) ஆகிய மொழிகளுக்கும் அந்தந்த மாநில அரசுகளால் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன. திராவிட மொழிகளுக்காக ஆந்திர அரசால், பிற தென்னிந்திய அரசுகளின் ஒத்துழைப்புடன், குப்பம் எனும் ஊரில் 1997இல் திராவிடப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

**இப்பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மாநில அரசுகளின் நிதியிலேயே இயங்கிவருகின்றன. மாநிலப் பல்கலைக்கழகங்களின் உள்கட்டமைப்பு, ஆய்வுத் திட்டங்கள் உள்ளிட்ட இனங்களுக்கு நிதியுதவி அளித்துவந்த பல்கலைக்கழக மானியக் குழு, 12ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குப் (2012-2017) பிறகு, முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதைத் தவிர, வேறு நிதி ஏதும் வழங்குவதில்லை.**

மொழிப் பல்கலைக்கழகங்கள் உட்பட மாநிலப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் தன்னளவிலேயே நிதி ஆதாரத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என மாநில அரசுகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தமையால், மொழிப் பல்கலைக்கழகங்களுக்கும் தொலைநிலைக் கல்வியைத் தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கு ரூசா (RUSA) என்று அழைக்கப்படும் ஒருங்கிணைந்த உயர் கல்வி வளர்ச்சித் திட்ட அமைப்பு, மாநில அரசின் (40%) உதவியுடன் உள்கட்டமைப்பு, ஆய்வு முதலானவற்றிற்கு நிதி வழங்கிவருகிறது.

பல கூறுகளாகப் பிரித்து வழங்கப்படும் இந்த நிதியில், ஆய்வு உட்பட அனைத்துக் கூறுகளுக்கும் நிதியைப் பெறுவதற்குத் தேசிய தரமதிப்பீட்டுக் குழுவால் (NAAC) பல்கலைக்கழகங்கள் சீர்தூக்கப்பட்டு, குறைந்த அளவாக 'ஏ' எனும் தரநிலையில் 3.01 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். தொலைநிலைக் கல்விப் படிப்புகளை வழங்க பல்கலைக்கழக மானியக் குழுவின் ஏற்பைப் பெறுவதற்கும் 'ஏ' தரம் கட்டாயமாகும்.

இச்சீர்தூக்கலுக்கான மதிப்பீட்டு முறைகள் பல்வகைக் கல்வித் துறைகளைக் கொண்ட பொதுப் பல்கலைக்கழகங்களுக்கானவை. தற்போதையநிலவரப்படி தமிழ்ப் பல்கலைக்கழகம் B ; கன்னடப் பல்கலைக்கழகம் B ; தெலுங்கு B; திராவிடப் பல்கலைக்கழகம் B என்ற அளவிலேயே தரச்சான்றுகளைப் பெற்றுள்ளன.

இப்பல்கலைக்கழகங்கள் ரூசா வழங்கும் நிதிக் கூறுகள் அனைத்தையும் பெறவியலாது; தொலைநிலைக் கல்வியை வழங்கவோ இணையவழியாக மொழிக் கல்வியைப் பரவலாக்கவோ பல்கலைக்கழக மானியக் குழுவின் ஏற்பளிப்பையும் பெறவியலாது.

தமிழ் உள்ளிட்ட மொழிப் பல்கலைக்கழகங்கள் சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகங்களைவிட ஆய்விலும் பிற அளவீடுகளிலும் தாழ்நிலையில் உள்ளதால்தான், அவற்றுக்கு 'ஏ' தரச்சான்று கிடைக்கவில்லை என்று கருதிவிட இயலாது. 'நாக்' அமைப்பு, சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகங்களுக்கென்று தனித்துவமதிப்பீட்டு முறைகளை வகுத்துள்ளது.

'சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகங்கள் மரபார்ந்த அறிவுச் செல்வத்தை வளர்த்தெடுப்பதிலும், பண்பாட்டு உணர்வை உருவாக்குவதிலும் சிறந்த பங்களிப்பைச் செய்வதன்வழி நாட்டு ஒற்றுமையை வலுப்படுத்தும்' என்று கூறி 18 சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகங்களுள் 6க்கு ஏ தரச்சான்று கிடைத்துள்ளது.

**சிறப்புத் தகுதி:** மொழி தொடர்பான மத்திய அரசின் முன்னெ டுப்பு களில் மாநில மொழிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட வில்லை; உயர் கல்வி நிறுவனங்களை விருப்பு வெறுப் பின்றிச் சீர்தூக்கி, சான்றிதழ் வழங்கும் 'நாக்' அமைப்பின் மதிப் பீட்டு முறை களும் மாநில மொழிப் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக் குத் துணைபுரியக் கூடியவையாக இல்லை என்பது வெளிப்படை.

எனவே, 1.சம்ஸ்கிருதப் பல்கலைக்கழகங்களுக்கு உருவாக்கப் பட்டுள்ளதுபோல தமிழ்ப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட மொழிப் பல்கலைக்கழகங்களுக்கும் 'நாக்' அமைப்பின் தனி மதிப்பீட்டு முறைகள் வகுக்கப்பட வேண்டும்; 2. தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழைப் பரப்புவதில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் மொழி ஆய்வுகளைத் தொய்வின்றி மேற்கொள்வதற்கும் மத்திய அரசின்நிதி போதிய அளவில்கிடைக்க ஏதுவாக சம்ஸ்கிருதத்துக்கு மூன்று மத்தியப் பல்கலைக்கழகங்களை உருவாக்கியிருப்பதற்கு இணையாக மாநில அரசின் ஒருங்கிணைப்புடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் சிறப்புத் தகுதி அளிக்கப்பட வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட மொழிப் பல்கலைக் கழகங்களின் தரத்தை உயர்த்தி, கட்டமைப்புப் பணிகளுக்கும் ஆய்வுத் திட்டங்களுக்கும் மத்திய அரசு நிதி அளிப்பதன் மூலம், அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளின் வளர்ச்சியில் மத்திய அரசு நேரடியாகப் பங்காற்ற வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

*நன்றி: இந்து தமிழ் திசை*

---

>> 02ம் பக்கத் தொடர்ச்சி

கொல்லப்பட்டனர்.

பில்கிஸ்பானு என்கிற இளம் வயது கர்ப்பிணி பெண்ணும், அவரது தாயாரும், குழந்தையும் மற்றவர்களும் கலவரத்தைக் கண்டு அஞ்சி, நடுங்கி தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு வேனில் ஏறி தப்பித்து சென்றபோது வன்முறைக் கும்பல் வழிமறித்து தாக்குதல் நடத்தியது.

கர்ப்பிணி பெண்ணான பில்கிஸ்பானு வன்முறைக் கூட்டதால் சீரழிக்கப்பட்டாள். அவளது தாயாரும் இக்கதிக்கு ஆளானார். பில்கிஸ்பானுவின் கதறித் துடித்த குழந்தைகள் பாறையில் அடித்து கொடூரமாக கொல்லப்பட்டனர்.

வேனில் சென்ற பலரும் கொல்லப்பட்ட நிலையில் பில்கிஸ்பானு படுகாயத்துடன் உயிர்பிழைத்தார்!

அவருக்கு உரிய சிகிச்சை கூட அளித்திட மறுத்தனர். நீதிமன்றம் சென்று போராடியதன் காரணமாக மருத்துவர்கள் காவல்துறையினர் என 11 பேருக்கு உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனை என தீர்ப்பு வழங்கியது.

கொடிய குற்றவாளிகள் 11 பேரையும் குஜராத் அரசு தண்டனைக்காலம் முடிவதற்கு முன்பே சுதந்திர தினத்தில் விடுதலை செய்தது மட்டுமல்ல,சிறைச்சாலை வாயிலில் குற்றவாளிகளுக்கு வரவேற்பு அளித்து, வாழ்த்து முழக்கம் எழுப்பி இனிப்பு வழங்கிய கொடூரம் நடைபெற்றது.

இக்கொடுமையை கண்டித்தும், குற்றவாளிகளை மீண்டும் சிறையில் அடைத்திட வேண்டும் என வலியுறுத்தியும் நாடு முழுவதும் கண்டனக் குரல்கள் எதிரொலிக்கின்றன. இந்திய மாதர் தேசிய சம்மேளனம் நாடு முழுவதும் கடந்த ஆகஸ்ட் 6ல் கண்டனக் குரல் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது.

இத்தகைய கண்டனங்களை எல்லாம் ஒன்றியத்தில் ஆட்சி புரிவோர் காது கொடுத்து கேட்கப் போவது இல்லை ஏனெனில் அவர்கள் வன்முறை மூலம் தங்களை தற்காத்துக் கொள்ள முடியும் என்று நம்புகின்றார்கள்.

வன்முறை நிகழ்வுகள் ஆங்காங்கே என்றில்லாமல் நாடு முழுவதும் நடைபெற வேண்டும் என்று விரும்பி அதற்கான செயலிலும் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள்.

அதன் ஒரு பகுதிதான் தேசியக்கொடி பறந்து கொண்டிருந்த, தமிழக அரசின் நிதித்துறை அமைச்சரின் கார் மீது செருப்பு வீசப்பட்ட சம்பவம்.

செருப்பு வீசிய சம்பவத்தை கட்சிக்கு மோடியால் நியமனம் செய்யப்பட்ட தலைவர் அண்ணாமலை நியாயப்படுத்தி பேசுகின்றார்; ஆதரிக்கின்றார். நிதியமைச்சரை தனது கால் தூசிக்கு சமம் என சாடுகின்றார்.

சமூக விரோதிகள், வன்முறையாளர்களைக் கொண்ட கட்சியாக அண்ணாமலையின் கட்சி உருவெடுத்துள்ளது.

சமூக விரோதிகள் வன்முறையாளர்களை தேடிப்பிடித்து அடைக்கலம் தருவது மட்டுமல்ல, அப்படிப்பட்ட நபர்களுக்கு அக்கட்சியில் மாநில மாவட்ட பொறுப்புகளும் மிகத் தாராளமாக வழங்கப்பட்டு வருகின்றது.

ஒன்றியத்தில் ஆளும் கட்சியாக உள்ள இக்கட்சி சமூக விரோதிகளை வன்முறையாளர்களை ஊக்குவிப்பதால், அவர்களுக்கு தலைவர்கள் பட்டம் சூட்டப்படுவதால், அச்சம் நீங்கி மிக துணிச்சலோடு வன்முறையில் ஈடுபடத் துவங்கியுள்ளனர். குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து போதைப் பொருட்கள் மிக தாராளமாக இங்கே இறக்குமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்திடும் சதி வேலைகளை மேற்கொண்டுள்ளனர். இத்தகைய சதித்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்கிற நோக்கத்துடன் சமூக விரோதிகளுக்கு 'கமலாலயம்' அடைக்கலம் அளித்து, ஆதரவளித்து, ஊக்கமூட்டி வருகின்றது.

ஊக்கம் ஊட்டப்பட்ட வன்முறையாளர்கள், சமூக விரோதிகள் தாங்கள் யாரை தாக்குகிறோம் எதற்காக தாக்குகிறோம் தாக்கப்படும் நபர் எத்தகையவர் பின்புலம் உள்ளவர் என்பது குறித்து கவலைப்பட மாட்டார்கள். வருவோர் போவோர் ஆண், பெண் குழந்தைகள் வேறுபாடு, வித்தியாசமின்றி தாக்குவார்கள்.

அப்படிப்பட்ட சமூக விரோதிகள்தான் கடந்த ஆகஸ்ட் 4ம் நாள் வன்முறையில் ஈடுபட்டு பொதுமக்கள் பலரையும் தாக்கிய நிலையில், நமது கட்சியின் மதிப்புமிகு தோழர், தேசியக்குழு உறுப்பினர் தோழர்.மு.வீரபாண்டியன் மீது கத்தி, இரும்பு கம்பி போன்ற பயங்கர ஆயுதங்களுடன், கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர். பொது மக்களின் உதவியால் பெரும் சேதம் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டார்.

செய்தியறிந்தவுடன் மாநிலம் முழுவதும் நமது தோழர்கள் கண்டனக் குரல் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

காவல்துறையும் உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டு, சம்மந்தபட்ட நபர்கள் ஐந்து பேரை கைது செய்துள்ளது. கட்சி அமைப்புகளும் விழிப்புணர்வோடு எதிர்வினையாற்றி இருப்பதும், காவல்துறை உடனடி நடவடிக்கை மேற்கொண்டதும் வரவேற்கதக்க நல்ல நடவடிக்கையாகும். தமிழகத்தில் தங்களை பலப்படுத்திக் கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும், வெற்றி பெற இயலாத நிலையில், தங்களின் தொடர் தோல்விகளை, சகித்து கொள்ள இயலாத, செருப்பு வீசும் கட்சியினர் இன்று வன்முறையை நாடியுள்ளனர். அரசியல் முதிர்ச்சி பெற்ற தமிழ்நாட்டில் வன்முறைக்கு ஒருபோதும் இடமில்லை. வன்முறைகளை அனுமதிக்க முடியாது. தத்துவ தோல்விகளை தழுவியக் கூட்டம் வன்முறையை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்து விட்டார்கள்.

அதுதான் அவர்களின் முடிவு என்றால் அதனை எதிர் கொள்ளவும், நாம் ஆயத்தமாக வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றுதான்! அதனையும் எதிர்கொள்ள ஆயத்தமாவோம்!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்

தோழமைமிக்க,

**(இரா.முத்தரசன்)** மாநிலச் செயலாளர்

**பிற மாநில முக்கிய நடப்புச் செய்திகள்**

செய்தித்தொகுப்பு: ந.சேகரன்

### சுப்பிரமணிய சாமி தொடுத்துள்ள வழக்கை எதிர்த்து

# இந்திய கம்யூ. எம்.பி. பினாய் விஸ்வம் உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல்

**டெல்லி:** இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து, ''மதசார்பின்மை'' மற்றும் '' சோஷலிஸம்'' ஆகிய இரு வார்த்தைகளை நீக்கப்பட வேண்டுமென, பா.ஜ. கட்சி பிரமுகர் சுப்பிரமணிய சாமி , உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

வரும் செப்டம்பர் 23 தேதி இந்த மனுவை விசாரணைக்கு வருவதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் தன்னையும் எதிர்மனுதாராக இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், சுப்பிரமணிய சாமி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அரசியலமைப்பு சட்டத்தின் நோக்கங்களுக்கு விரோதமாக அமைந்துள்ளதாலும், சட்ட விதிகளை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் உள்ளதாலும் தகுந்த முகாந்திரம் இல்லாமல் இருப்பதாலும், சுப்பிரமணிய சாமியின் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி. பினாய் விஸ்வம் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்திய கம்யூ. எம்பி. பினாய் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் மேலும் கூறியிருப்பதாவது:

''அரசியலமைப்புச் சட்டத்தில் மத சார்பின்மை, சோஷலிஸம் ஆகிய வார்த்தைகளை நீக்க கோரும் சுப்பிரமணிய சாமியின் நோக்கமானது, மத அடிப்படையில் அரசியல் செய்ய சட்ட ரீதியான அனுமதி கோருவதே அன்றி வேறல்ல. ஆனால் இந்திய அரசியலமைப்பச்சட்ட 42 ஆவது திருத்தத்தின் படி, 1951 ஆண்டைய மக்கள் பிரதிநித்துவ சட்டப்பிரிவு 29(ஏ) அதன் உட்பிரிவு 5 இன்படி, அவ்வாறு மத அடிப்படையில் அரசியல் செய்ய தடை விதிக்கிறது. எனவே மத சார்பின்மை என்ற வார்த்தை நீக்கப்பட வேண்டுமென்று சுப்பிரமணிய சாமி வழக்கு தொடுத்துள்ளதிலிருந்து பகிரங்கமாக மத வாத அரசியல் செய்வதற்கு மத ரீதியில் மக்களைப் பிரிப்பதற்கான நோக்கமும் கொண்டதாக உள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தில் முறைப்படி பதிவு செய்ய அணுகும் அரசியல் கட்சிகள், மதசார்பின்மை,சோஷலிஸம், ஜனநாயகம் ஆகிய கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என சட்ட விதி உள்ளது.



இந்தப் பின்னணியில் மேற்படி வரலாற்று சிறப்பு மிக்க இந்திய மக்களை சட்ட ரீதியாக ஒன்றிணைக்க வழிவகை செய்யும் இந்திய பண்பாட்டோடு இணைந்த வார்த்தையான'' மத சார்பின்மை '' என்ற வார்த்தையும் பொருளாதார சமத்துவத்திற்கான'' சோஷலிஸம்'' என்ற வார்த்தையும் நீக்கக் கோரும் சுப்பிரமணி சாமியின் கோரிக்கை, அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படையை மீறுவதாக உள்ளது. எனவே சாமியின் வழக்கை தள்ளுபடி செய்வதோடு, தேவையற்ற வகையிலான செலவீனத்தை உண்டாக்குவதாக உள்ளதால் அதற்கான செலவின ஈட்டுத் தொகை வழங்கும் வகையில் நீதிமன்றம் ஆணை பிறக்கப்பிக்கவும் வேண்டும்''

இவ்வாறு தனது மனுவில் இந்திய கம்யூ. மாநிலங்களவை உறுப்பினர் பினாய் விஸ்வம் வலியுறுத்தியுள்ளார்.

# உண்மையில் நீங்கள் இந்தியர்கள் என்றால், 'கோட்சே ஒழிக' என முழங்க வேண்டும்... செய்வீர்களா?

**மத பிரிவினை விசுவ இந்து பரிஷத் அமைப்பிற்கு பிரபல நகைச்சுவை நாடக்கலைஞர் குணால் காம்ரே சவால்**

**அரியானா:** டெல்லி அரியானா எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பெரும்பான்மையான தொழிற் சாலைகள் நிறைந்த பிரபல நகரம் தான் குருகிராமம். முன்பு இது குர்ஹாம் என்றழைக்கப்பட்டு வந்த்து.

இந்த நகரத்தில் அறிவு சார்ந்த தனது நகைச்சுவை நாடகத்தை செப்17,18 ஆகிய தினங்களில் அரங்கேற்ற திட்டமிட்டு இருந்தார் வட இந்தியாவின் புகழ் பெற்ற நாடகக் கலைஞர் குணால் காம்ரே.

இவரது நாடகங்கள் பொதுவாக மனித நேயத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருக்கும். மனித நேயத்தையும் மத சார்பின்மையும் வலியுறுத்தும் கலைஞர் குணால் காம்ராவின் நாடகத்தை நடத்தவிடக் கூடாது என உள்ளூர் அதிகார வர்க்கத்தினர் துணையோடு, விசுவ இந்து பரிசத் என்ற மத பிரிவினை அமைப்பு கலகம் செய்தனர். நாடகம் நடத்த ஏற்பாடு செய்திருந்த தனியார் நிறுவனமும் இந்த விஷ விஷ்வ இந்து பரிசத் அச்சுறுத்தலுக்குப் பயந்து நாடகம் நடத்தும் முடிவை கை விட்டனர். கலைஞர் குணால் காம்ரேயும் '' என் பொருட்டு நல்லெண்ணத் தோடு நாடகம் நடத்த முற்பட்டோர் பாதிக்கப்படக் கூடாது என்று கூறி நாடகம் நடத்துவதைத் தவிர்த்து விட்டார். நாடகம் நடத்த விடாமல் சீர்குலைவு செய்த விசுவ இந்து பரிஷத் என்ற மத பிரிவினை அமைப்பிற்கு நாடெங்கும் எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. இந்த நிலையில் டெல்லியில் இருந்து விசுவ இந்து பரிசத் அமைப்பினரைக் கடுமையாக விமர்சனம் செய்து அறிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அந்த அமைப்பிற்கு, கலைஞர் குணால் காம்ரே தமது கருத்தை விளக்கி இந்தியில் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் நாடகக் கலைஞர் குணால் கூறி யிருப்பதாவது:

'' விசுவ இந்து பரிசத் அமைப்பைச் சேர்ந்த நீங்கள் உண்மையாகவே இந்தியர்கள் என்று சொல்லிக் கொண்டால், மகாத்மா காந்தியை கொலை செய்த *நாரதுூராம் கோட்சேயைக்* கண்டிக்க வேண்டும் . அப்படி இல்லை என்றால், நீங்கள் எல்லாம் '' இந்து விரோதி''என்றே கருத முடியும்.

நான் ( குணால்) மிகப் பெருமிதத்தோடு '' ஜெய் சீதா ராம்'' '' ஜெய் ராதா கிருஷ்ணா'' என உச்சரித்து மகிழ்கிறேன்.

விசுவ இந்து பரிசத் அமைப்பைச் சேர்ந்த நீங்கள், இந்தியா வின் மக்கட் குழந்தைகள் என்றால், கோட்சே ஒழிக என எழுதி, செய்தி பரப்ப அனுப்ப வேண்டும்.

அப்படி இல்லாத பட்சத்தில், நீங்கள் இந்து விரோதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் கருதப்படுவீர்கள் .

உங்களுக்கெல்லாம் பயந்து கொண்டு மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சி, அதற்கேற்ப நாடகம்நடத்தி வாழ வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஏற்கனவே கடினமாக உழைத்து ஈட்டிய சொற்ப வருவாயிலேயே எனது வாழ்க்கையை கழிப்பேன்.

உண்மை என்னவென்றால், உங்களை விட பன்மடங்கு உயர்வான இந்து நான் ,என்பதை நிரூபணம் செய்யப்பட்ட தருணம் இது. இதை என்னால் பெருமையாக கூறிக் கொள்ள முடியும் '' என பிரபல மக்கள் நாடக்க் கலைஞர் குணால் காம்ரே கூறியுள்ளார்.

# கல்வியை காவிமயமாக்கும் ஒன்றிய அரசை எதிர்த்து போராடுக!

**● அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின்,தெலுங்கானா மாநில மாநாடு அறை கூவல்**

**தெலுங்கானா:** அனைத்திந்திய மாணவர் பெருமன்றத் தின் தெலுங்கானா மாநில மாநாடு, பத்ராத்ரி கோத்தேகூடம் மாவட்டத்தில் கோத்தே கூடம் என்ற நகரில், ஆக. 26,27,28 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. மாநிலத்தின் அனைத்து பகுதிகளி லிருந்து, ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற மிகப் பிரம்மாண்டமான பேரணி கோத்தேகூடம் ரயில்வே நிலைய முன்பிருந்து துவங்கி, கோத்தேகூடம் பேருந்து நிலையம் முன் மாபெரும் எழுச்சிக் கூட்டத்துடன் நிறைவுற்றது.

பேரணி இறுதியில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற தேசிய தலைவர் சுபம் பானர்ஜி, பேசுகையில், ''கொரோனா தொற்று பரவல் காலத்தில் மாணவர் பகுதி மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த இந்தியாவின் அனைத்து பகுதி மக்கள் சந்தித்த எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு ஒன்றிய அரசு கவனம் செலுத்தாதது மட்டுமல்ல, தேவையான நிவாரணப் பணி ஏதும் செய்யவில்லை. இதனால் விளிம்பு நிலை மாணவர்களுக்கு கல்வி எட்டாக் கனியாகி விட்டது. மாறாக, பாமர மக்களை அதன் மாணவர்களை பாதிக்கும் வகையில் கல்வியை தனியார் துறைக்குத் தாரை வார்க்கும் மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது ஒன்றிய அரசு.

மேலும் கல்வியை காவிமயமாக்கும் விஷ வேலைகளில் இறங்கி உள்ளது ஒன்றிய அரசு. இதை எதிர்த்தும் கல்வியை தனியார்மயமாக்கும் முயற்சிகளை எதிர்த்தும் அனைத்து மாணவர்களை ஒன்று இணைத்து போராட வேண்டியது மாணவர்களுக்கு முன்னே உள்ள கடமை ஆகும்.

இந்தப் பணியை, இந்தியா சுதந்திரத்திற்காகவும் , சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடர்ந்து தியாகப் போராட்ட வரலாறு படைத்த அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மேற்கொள்ளும் என்று ஏஐஎஸ்எப் இன் தேசீயத்தலைவர் சுபம் பானர்ஜி பேசினார்.

மாநாட்டில், அனைத்திந்திய மாணவர் பெருமன்ற பொதுச் செயலாளர் தினேஷ் ஸ்ரீ ரங்கராஜன் , பேசுகையில், ஒன்றிய அரசின் பட்ஜெட் டில் கல்விக்காக 20% ஒதுக்கீடும், மாநில அரசுகள் தங்களது பட்ஜெட்டில் 30% ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தினார். ஏ.ஐ.எஸ்.எப் . மாநில நிர்வாகிகளான ஸ்டாலின், ரவி சிவராமகிருஷ்ணா, ஷபீர் பாட்சா,ஹரீஸ், உபேந்தர், பையீம் உள்பட பல தோழர்கள் எழுச்சி உரையாற்றினர்

### திருவாரூர் நுகர்வோர் ஆணையம் விவசாயிகளுக்காக வழங்கிய தீர்ப்பு

# பொறுப்பற்று செயல்படும் அரசு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்த ஆண்டு ஏற்பட்ட இயற்கை பேரிடர் பாதிப்பிற்கான வேளாண் காப்பீடு திட்ட இழப்பீடு, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், மருதூர் கிராமத்தை சேர்ந்த ஐந்து விவசாயிகளுக்கு கிடைக்காத நிலையில், இவர்கள் தொடர்ந்து வேளாண் துறை மற்றும் அரசிடம் முறையிட்டும் நியாயமாக கிடைக்க வேண்டிய இழப்பீடு தொகை கிடைக்காததால், திருவாரூர் நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்காக தாக்கல் செய்துள்ளனனர். விசாரணைக்கு பின், சட்டப்படி நியாயமாக இவர்களுக்கு வழங்க வேண்டிய தொகையை மறுத்து, அலைய விட்டது தவறு என்ற அடிப்படையில் திருவாரூர் நுகர்வோர் குறைதீர் ஆணையம் இந்த ஐந்து விவசாயிகளுக்கும் 5 லட்சத்து 89ஆயிரம் ரூபாய் இழப்பீடாக திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வழங்கிட வேண்டுமென்ற தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

தனக்கான நியாயம் பெறுவதற்கு கடைசிவரை போராடி வெற்றி பெற்றிருக்கிற மருதூர் கிராம விவசாயிகளை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பாராட்டுகிறோம். இப்படியான நிலையில் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு ஒரு முன்னுதாரணத்தை நீங்கள் ஏற்படுத்தி இருக்கிறீர்கள். பயிர் காப்பீடு திட்டத்தில் சிலர் கூடுதலாக பதிவு செய்வதால், நியாயமான விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைக்காத நிலை ஏற்படுகிறது. அப்படியான தவறுகளை நீக்கும்போது, மேற்கண்ட நியாயமான விவசாயிகள்போல் சிலரை பொறுப்பற்ற அலுவலர்கள் நீக்கி உள்ளதால் இப்படியான வேதனை ஏற்படுகிறது. இந்தச் சூழலில் விவசாயிகளின் வேதனையை புரிந்து வழங்கப்பட்ட தீர்ப்பை வரவேற்கிறோம்.

இது மாவட்ட ஆட்சியருக்கு விதிக்கப்பட்ட அபராதமாக மட்டும் நாங்கள் கருதவில்லை. விவசாயிகளிடம் நியாயம் மற்றும் கருணையில்லாமல் நடந்துகொள்ளும் வேளாண் துறை, வருவாய்துறை உள்ளிட்ட அதிகாரிகள் சிலரின் பொறுப்பற்ற செயலுக்கான தண்டனையாக விவசாயிகள் கருதுகிறார்கள். மாவட்ட நிர்வாகம் உடன் இப்பொழுதாவது இந்த விவசாயிகளுக்கு இத் தொகையை வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### அனுமதியின்றி செயல்பட்ட கல்குவாரி மீது

# புகார் அனுப்பியவர் மீது காரை ஏற்றி படுகொலை

## நிவாரணம் கேட்டு ஆர்ப்பாட்டம்

க.பரமத்தி ஒன்றியம் குப்பம் அருகே அனுமதியின்றி செயல்பட்ட குவாரி மீது புகார் அளித்த சமூக சேவகர் ஜெகநாதன் படுகொலையை கண்டித்தும், படுகொலை செய்யப்பட்ட ஜெகநாதன் குடும்பத்திற்கு அரசு வேலையும், இழப்பீடாக ரூ.50 இலட்சம் வழங்க வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் க.பரமத்தி வடக்கு ஒன்றிய குழுவின் சார்பில் செப். 13 அன்று க.பரமத்தி கடைவீதியில் ஒன்றிய செயலாளர் எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம், மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், வர்க்க, வெகுஜன மாவட்ட செயலாளர்கள் ஆர்.தங்கவேல், பி.பாலன், எம்.லட்சுமி காந்தன், மாவட்ட குழு உறுப்பினர்கள் கே.குப்புசாமி, கே.எஸ்.நேதாஜி, கே.லோகநாதன், வி.கே.வீராசாமி, நகர, ஒன்றிய செயலாளர்கள் எம்.கார்த்திகேயன், எஸ்.வி.தனபால் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். ஒன்றிய துணை செயலாளர் ஆர்.சந்திர சேகரன் நன்றி கூறினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 87. அரிய செயல்

**அரிய செயலுக் குரிய பிரியா**
**செயலல்லால் மற்றென் னதற்கு**

அரிய செயல்களைச் செய்ய வேண்டுமாயின் செயலில் மனம் இணைந்து, செயலுக்குத் தேவையான உழைப்பைத் தர வேண்டும்.

**நுண்ணுணர்வி னாலாய ஆக்கத்தின் திண்ணிய**
**ஊக்கமே ஆக்கம் தரும்.**

நுண்ணுணர்வினால் ஏற்படும் பயனைக் காட்டிலும், உறுதியான செயல்பாடே நன்மையினை உண்டாக்கும். (ஊக்கமே ஆக்கம் தரும் என்க).



## நகர்மன்ற மறைமுக தேர்தலில் சி.பி.ஐ. வெற்றி

மணப்பாறை நகராட்சியில் 27 பேர் கொண்ட நகர்மன்றத்தில் நிலைகுழுவுக்கு நடைபெற்ற மறைமுக தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர்மன்ற உறுப்பினர் த.தங்கமணி போட்டியின்றி வெற்றி பெற்றார். இந்த நகர் மன்றத்தில் திமுக 8, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2, காங்கிரஸ் 1, அதிமுக 11, சுயேட்சைகள் 5 உட்பட 27 நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். வெற்றி பெற்ற தோழரை நகர் மன்ற தலைவர், துணைத்தலைவர், திமுக நகர செயலாளர், சி.பி.ஐ. நகர, ஒன்றிய செயலாளர்கள் வாழ்த்தினர்.

## நெசவுத் தொழிலாளர்களுக்கு அபராதம்: கைவிடக் கோரி மனு

ஆண்டிபட்டி வட்டார பகுதிகளில் உள்ள சக்கம்பட்டி, டி.சுப்பு லாபுரம், முத்துகிருஷ்ணாபுரம் போன்ற பகுதிகளில் பாவப்பட்ட நெசவு தொழிலாளர்கள் 10 அடிக்கு 10 அடி அளவுள்ள சிறிய வீட்டில் வசித்தும், விசைத் தறியில் நெசவு தொழில் செய்தும், அதிலேயே குடியிருந்தும் வருகின்றனர்.

இதனை சீரழிக்கும் நோக்கில் தனி ஒரு சமூக விரோதியின் பொய் புகாரின் அடிப்படையில் வெளிமாவட்ட விஜிலன்ஸ் மூலம் பல ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததால் நெசவு தொழிலாளர்கள் மிகவும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

இதனை கண்டித்தும் மேலும் அபராத நடவடிக்கைகளை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றியகுழு சார்பில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, ஒன்றியக்குழு உறுப்பினர் ஜனசக்தி பிரபாகரன் மற்றும் ஊர் பொதுமக்கள், பாதிக்கப்பட்டவர்கள் தேனியில் உள்ள மின்சார வாரியத்தின் மேற்பார்வை பொறியாளரிடம் நேரில் சென்று மனு கொடுத்தனர். மேற்பார்வை பொறியாளர் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

### கேரளாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
## உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பு

கேரளாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2017 ம் ஆண்டு கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1,33,410. 2022 ம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை 1,77,122. நான்கு ஆண்டு கால இடைவெளியில் 43, 712 உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது. 2017 ம் ஆண்டு கட்சி கிளைகள் எண்ணிக்கை 9,165. 2022ம் ஆண்டு கட்சி கிளைகள் எண்ணிக்கை 14,588 ஆக அதிகரித்து உள்ளது. கேரளாவில் கட்சி நல்ல வளர்ச்சி அடைந்ததை காட்டியுள்ளது. கட்சி கிளை எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளில் 5,423 கிளைகள் அதிகரித்து உள்ளது.

## குடியிருக்கும் வீடுகளை அகற்றாதே

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் சிங்கபெருமாள் கோவில் ஊராட்சிக்குட்பட்ட பகத்சிங் நகரில் சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாக 360 குடும்பங்களுக்கு மேல் பலதரப்பட்ட மக்களும் குடியிருந்து வருகின்றனர். இந்த மக்கள் குடியிருக்க கூடிய அனைத்துத் தகுதியும் இருந்தும் அரசு அதிகாரிகள் தற்போது அந்த வீடுகளை அகற்றுவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். இதனை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில் முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன், சிங்கபெருமாள் கோயில் ஊராட்சி மன்ற தலைவர் துரை பாபு மாவட்ட குழு உறுப்பினர் கேவி.சேகுவேராதாஸ் முன்னிலையிலும் அந்த கிராம மக்கள் (09. 09.2022) மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்தனர். அரசு அதிகாரிகள் வீடுகளை அகற்ற கூடாது அப்படி அகற்றும் பட்சத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தனர்.



## டி.ஆறுமுகம் படத்திறப்பு நிகழ்வு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பூர் 37 வது வட்ட பி கிளை செயலாளர் டி.வேதாச்சலத்தின் தம்பி டி.ஆறுமுகம் படத்திறப்பு நிகழ்வு செப். 06 அன்று நடைபெற்றது. மாவட்டக்குழு உறுப்பினர் அ.பாஸ்கர் தலைமை தாங்கினார். மாவட்டக்குழு உறுப்பினர் அ.சுப்பிரமணி பேசினார். படத்தை திறந்து வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி பேசினார்.



## விபத்தில் காயமடைந்தவர்களிடம் நேரில் நலம் விசாரித்தார் கே.சுப்பராயன் எம்.பி.

ஈரோடு: அந்தியூர்பர்கூர் மலைப்பகுதியில் மணியாச்சி பள்ளம் அருகில் கடந்த 07.09.2022 அன்று, அந்தியூரில் இருந்து கொங்காடை சென்ற அரசுப் பேருந்து விபத்துக்குள்ளாகியதில் பலர் காயமடைந்து அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் அந்தியூர், அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 18 பேரை கடந்த 08.09.2022 அன்று திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயன் நேரில் சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் தெரிவித்தார். அவரிடம், நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவமனை அதிகாரிகள் விளக்கினர். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு மருத்துவ அதிகாரிகளிடம் கே.சுப்பராயன் எம்.பி., தெரிவித்தார்.

அவருடன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.மோகன்குமார், மாநிலக் குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன் மற்றும் வி.பி.குணசேகரன், சி.எம்.துளசிமணி, எஸ்.சின்னசாமி, எம்.பாலமுருகன், எஸ்.எஸ்.தேவராஜன், பி.அப்புசாமி, பி.ஜே.கணேசன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## குறுவை நெல்சாகுபடி இழப்பிற்கு நிவாரணம் வழங்குக

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நடப்பாண்டு குறுவை சாகுபடிக்கு மே 24 அன்றே மேட்டூர் அணை திறந் ததால், நம்பிக்கையுடன் விவ சாயிகள் வழக்கமான பரப்பளவைவிட கூடுதலான நிலையில் குறுவை சாகுபடி செய்துள்ளனர். தற்பொழுது கதிர் வரும் நிலையிலும்; அறுவடையாகும் முதிர் நிலையிலும் இது உள்ளது. இந்த நிலையில் தென்மேற்கு பருவ மழையும், வளிமண்டல சுழற்சியினாலும் தொடர்ந்து விட்டு விட்டு பெருமழையாக பொழிந்து கொண்டிருக்கிறது. தென்மேற்கு பருவ மழை சராசரி அளவைவிட 90 சதம் கூடுதலாக பொழிந்துள்ளது. சில பகுதிகளில் 150 சதம் பதிவாகியுள்ளது. மேலும் மழை தொடரும் என வானிலை ஆராய்ச்சி கூறுகிறது.

மேட்டூர் அணை நிரம்பிய சூழலில் தொடர்ந்து திறந்துவிடுவதாலும் பல இடங்களில் குறுவை நெல்கதிர்கள் சாய்ந்தும், அழுகியும், முளைத்திடும் நிலை ஏற்பட்டு உள்ளது. சில பகுதி களில் சம்பாதெளி.. விதை விடுதலும் பாதித்துள்ளது. இந்நிலையில் குறுவை சாகுபடிக்கான காப்பீடு திட்டத்தை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்த இயலாத நிலையில் பாதிப்பு ஏற்படின் தமிழக அரசின் மாநில இடர்பாடு நிதியிலிருந்து ஈடுசெய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளதை நம்பி விவசாயிகள் உள்ளனர்.

சில இடங்களில் வாழை, பூக்கள், காய்கறி, தானியப் பயிர்களும் பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு அரசு வருவாய்துறை; வேளாண்துறைக்கு உரிய வழிகாட்டல் செய்து குறுவை நெல் அறுவடை முழு பாதிப்பிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.42,000 மும் பகுதி பாதிப்பிற்கு உரிய அளவு நிவாரணமும் வழங்கி, உடன் உதவிட வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## கட்டட சங்க மாநில மாநாட்டிற்கு வரவேற்பு குழு அமைப்பு

திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க பொதுக்குழு கூட்டத்தின் முடிவின் அடிப்படையில் ராணிப்பேட்டையில் மாநில மாநாடு 2022 நவம்பர் 16,17 தேதிகளில் நடத்துவதற்காக வரவேற்பு குழு அமைப்பு கூட்டம் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட சங்கத் தலைவர் எஸ்.ஆர்.தேவதாஸ் தலைமையில் ராணிப்பேட்டை அம்மூர் திரௌபதி அம்மன் கோவிலில் செப். 05 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி. எம்.மூர்த்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஜி.லதா, சங்கத்தின் பொதுச்செயலாளர் கே.இரவி, துணை பொதுச்செயலாளர் என் செல்வராஜ், பொருளாளர் இரா.முருகன், செயலாளர்கள் எம்.முனுசாமி, ஆர்.துரைசாமி உள்ளிட்ட 80 க்கும் மேற்பட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கட்டட கட்டுமான தொழிலாளர்களின் எட்டாவது தமிழ் மாநில மாநாட்டின் வரவேற்பு குழுவின் தலைவராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா, பொதுச் செயலாளராக ஏ.எஸ்.சங்கர் மேஸ்திரி, பொருளாளராக எஸ்.கிருபாகரன் உள்பட 30க்கும் மேற்பட்ட வரவேற்பு குழு உறுப்பினர்கள் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

## விவசாயிகள் சங்க திருச்சுழி, நரிக்குடி பேரவைக் கூட்டம்

விருதுநகர் மாவட்டம் வடக்குநத் தம் கிராமத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருச்சுழி, நரிக்குடி பேரவைக் கூட்டம் நடைபெற்றது. சங்கரபாண்டி தலைமை வகித்தார். அழகர்சாமி, கண்டசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பாலமுருகன், தவிச மாவட்ட செயலாளர் சவுந்திர பாண்டியன், ஒன்றிய செயலாளர் செல்வம் ஆகியோர் பேசினார்கள் தலைவராக பெரியண்ணன், துணை தலைவராக செல்வம், செயலாளராக சங்கரபாண்டி, துணை செயலாளராக அடைக்கலம் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். 1000 உறுப்பினர்கள் சேர்ப்பது என முடிவு செய்யப்பட்டது.

## எல்.ஐ.சி. முகவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

இன்ஷுரன்ஸ் ரெகுலேட்டரி டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்ற நிறுவனம் எல்ஐசி முகவர்கள் ஏற்கனவே பெற்றுக் கொண்டிருந்த கமிஷனை பாதியாக குறைக்க வலியுறுத்துவதை கண்டித்து இந்திய நாடு முழுவதும் லிக்காய் சங்கம் சார்பில் எல்ஐசி முகவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை அம்பத்தூர் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளைத் தலைவர் சி.ஆனந்தன் தலைமை தாங்கினார். செயலாளர் வி.அழகர்ராஜ் வரவேற்று பேசினார். ஐ.ஆர்.டி.ஏ. முகவர் கமிஷனை குறைப்பது என்பது எல்.ஐ.சி. பாலிசிகள் விற்பதற்கு தடை ஏற்படுத்தி காப்பரேட் நிறுவனங்களுக்கு எல்.ஐ.சி. நிறுவனத்தை தாரை வார்க்கும் நடவடிக்கை என்பதை கண்டித்து சங்கத்தின் மாவட்ட நிர்வாகி டி.சி.லோகநாதன், சங்கத்தின் ஆலோசகர் ஆர்.துரைசாமி, எம்.ஜெயராமன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் கார்மேகம், அழகேசன், சுசீந்திரன், கிருஷ்ணமூர்த்தி, கே.ஜே.சீனிவாசன், நாடியம்மாள், கல்பனா, அமுதா உள்ளிட்ட முகவர்கள் பங்கேற்று கண்டனம் முழக்கம் முழங்கினர்.

# தியாக சீலர் தோழர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டிட நிதி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திண்டுக்கல் மாவட்டக்குழு சார்பில் தோழர் சி.எஸ். கட்டிட நிதி ரூபாய் எட்டு லட்சம் (ரூ.800000) வழங்கினார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய சென்னை மாவட்டக்குழு சார்பில் ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் (ரூ.210000) தோழர்.சி.எஸ். கட்டிட நிதி வழங்கினார்கள்.

சென்னை வடசென்னை மாவட்டம் தோழர் எம்.வசந்தகுமார் நிர்மலா அவர்களின் அன்பு மகள் வி.ஷாலினி பி.எஸ்.சி., எம்.ஏ., அவர்களுக்கும் திரு.எம்.ரவி ஆர்.காமாட்சி அவர்களின் அன்பு மகன் ஆர்.வினோத் பி.காம் அவர்களுக்கும் 10.09.2022ல் நடைபெற்ற திருமணத்தில் தோழர்.சி.எஸ். கட்டிட நிதியாக ரூபாய் ஐந்தாயிரம் (ரூ.5000) வழங்கினார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தஞ்சாவூர் தெற்கு மாவட்டக்குழு உறுப்பினர் தோழர் தி.திருநாவுக்கரசு ராஜலெட்சுமி இவர்களின் அன்பு மகள் தி.சிந்துபாரதி எம்.சி.ஏ. அவர்களுக்கும், திரு.கே.முருகேசன் பானுமதி (எ) விமலா இவர்களின் அன்பு மகன் மு.தமிழ்இனியன் பி.இ. அவர்களுக்கும் 11.09.2022ல் நடைபெற்ற திருமணத்தில் தோழர் சி.எஸ். கட்டிட நிதியாக ரூபாய் ஐந்தாயிரம் (ரூ.5000) வழங்கினார்கள்.


நிதி வழங்கிய தோழர்களுக்கு நன்றி!

## மூத்த தோழர் வேலு மறைவு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆர்.கே.நகர் தொகுதியில் மூத்த தோழர்களில் ஒருவரான தோழர் வேலு (வயது 81) செப். 10 அன்று மறைந்தார். அவருடைய இறுதி நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ். மூர்த்தி மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, ஆர். கே.நகர் தொகுதி செயலாளர் எம். ஜெய்சங்கர், தொகுதி பொருளாளர் ராமலிங்கம், காவிரி செல்வம், சிவா, தீனா மற்றும் தோழர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

## தோழர் தி.திருநாவுக்கரசு இல்ல மண விழா



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை தெற்கு மாவட்டக்குழு உறுப்பினரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவருமான தோழர் தி.திருநாவுக்கரசு – ராஜலெட்சுமி ஆகியோரின் மகள் தி.சிந்துபாரதி எம்.சி.ஏ. – மு.தமிழ்இனியன் பி.இ. ஆகியோரின் திருமணம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசன் தலைமையில் ஒரத்தநாடு வட்டம், தெலுங்கன் குடிக்காடு அம்மா திருமண மண்டபத்தில் செப். 11ல் நடைபெற்றது. திருமண நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ராமச்சந்திரன், ஒரத்தநாடு பேரூராட்சி தலைவர் மா.சேகர், சிபிஐ தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, விவசாய சங்க மாநிலச் செயலாளர் சாமி நடராஜன், ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சந்திரகுமார், மாவட்டச் செயலாளர் தில்லைவனம், தி.மு.க. ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன், த.ஒ.வா.இ. மண்டல செயலாளர் வி.கல்யாணசுந்தரம், கால்நடை பராமரிப்பு உதவியாளர் சங்க மாநிலத் தலைவர் க.ஜெயமணி, வி.ச. மாவட்டத் தலைவர் வீரமோகன், சிபிஐ ஒன்றியச் செயலாளர் வாசு. இளையராஜா மற்றும் அனைத்துக் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.



## மகாராஜபுரம் ராஜேஸ்வரி அம்மாள் படத்திற்கு இரா. முத்தரசன் மலரஞ்சலி

விருதுநகர் மாவட்டம் மகராஜபுரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி மறைந்த ஏ.வெங்கிடசாமி இணையர் ராஜேஸ்வரி அம்மையார் ஆக.11ல் காலமானார். விருதுநகர் மாவட்டம் வருகை தந்த மாநில செயலாளர் இரா.முத்தரசன் மகராஜபுரம் சென்று அவரது மகன் வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி அவரது குடும்பத்தினரிடம் இரங்கல் தெரிவித்து ராஜேஸ்வரி அம்மையார் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் காளிதாஸ், தலைவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் கோவிந்தன் ஆகியோர் உடனிருந்தனர்

## தோழர் பி.ஆர்.ராமண்ணா கல்வெட்டு திறப்பு


இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழரும், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் பாடகராகவும் செயல்பட்ட பி.ஆர்.ராமண்ணாவின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி கல்வெட்டு திறப்பு, கட்சி கொடியேற்று விழா புத்தூர் ஆட்டுமந்தை தெருவில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு கிளை செயலாளர் எஸ்.ரஹீம் கான் தலைமை வகித்தார், ராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார், நினைவு கல்வெட்டை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் திறந்து வைத்தார்.

கொடியினை முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் ஏற்றி வைத்தார். தேசியகுழு உறுப்பினர் நா.பெரியசாமி சிறப்புரையாற்றினார். ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, விவசாய சங்க மாவட்ட செயலாளர் சிவசூரியன், விவசாய தொழிலாளர் சங்கம் மாவட்டச் செயலாளர் கணேசன், பகுதி குழு செயலாளர் சுரேஷ், முத்துசாமி, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராஹிம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.செல்வகுமார், மாதர் சங்க நிர்வாகி க.ஆயிஷா, வை.புஸ்பம், பகுதி செயலாளர்கள் எஸ்.பார்வதி, ஏ.அஞ்சுகம், அபுதாஹிர், எம்.ஆர்.முருகன், எம்.ஆர்.எஸ்.ராஜலிங்கம், துணை செயலாளர்கள் கே.முருகன் உள்ளிட்டோர் உரையாற்றினர். மேலும் பொருளாளர் ரவிந்திரன், பகுதி குழு உறுப்பினர்கள் சூர்யா, சத்யா, பாட்ஷா, தர்மு, பழனி பாரதி, சுந்தர், தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இறுதியாக குணசிங் நன்றி கூறினார்.

## மறைந்த எழுத்தாளர் சுந்தர மகாலிங்கம் குடும்பத்தினரிடம் இரா.முத்தரசன் இரங்கல்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் ஜனசக்தி கட்டுரையாளரும் எழுத்தாளருமான சுந்தர மகாலிங்கம் காலமானார். விருதுநகர் மாவட்டம் வருகை தந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் வத்திராயிருப்பு சென்று அவரது மகன் தினகரன் நிருபர் திலீபன் மற்றும் அவரது குடும்பத்தினரிடம் இரங்கல் தெரிவித்து ஆறுதல் கூறினார். அவருடன் மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் காளிதாஸ், தலைவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் கோவிந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.



## மின்கட்டண உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம், சிவகிரியில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள புதிய மின்கட்டண உயர்வை கண்டித்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் செப். 13 அன்று காந்திஜி கலையரங்கம் முன்பு சிபிஐ சிவகிரி நகர செயலாளர் பி. பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இ.ராஜேந்திரன், கே.கண்ணன், க.குருவு, அருணாச்சலம், வேலுச்சாமி, மாரியப்பன், நடராஜன், சண்முகவடிவு, பால்சாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




### கிராமப்புற அரசுப் பள்ளியில் அதிக மதிப்பெண் எடுத்த

## மாணவர்களுக்கு ஊக்கத்தொகை

கடந்த பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் பட்டுக்கோட்டை கல்வி மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற பட்டுக்கோட்டை அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி மாணவி ஸ்ரீபாலசுப்ரமணியாவுக்கு இந்தியன் ஆயில் சார்பாக ஊக்கத்தொகை ரூ.10000 க்கான காசோலையையும், முருகையா ஏஜென்சி சார்பாக கிராமப் புற அரசு பள்ளிகளில் படித்து முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகள் அச்சுதா, அபர்ணா, கீர்த்தனா, காஞ்சனா, விசயஅரசன் ஆகியோருக்கு ஊக்கத்தொகையாக தலா ரூ.3000 க்கான காசோலையையும் பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அண்ணாத்துரை, நகர்மன்ற தலைவர் சண்முகபிரியா செந்தில்குமார், இந்தியன் ஆயில் விற்பனை அதிகாரி ஹரிகோவிந் ஆகியோர் வழங்கினர். விழா ஏற்பாடுகளை முருகையா ஏஜென்சி டீலர் முகேஷ் செய்திருந்தார். ஊக்கத்தொகை பெற்றுக் கொண்ட மாணவிகள் நன்றி தெரிவித்தனர்.

### ஏஐடியூசி காஞ்சிபுரம் மாவட்டக் குழுக்கூட்டத்தில்

# தமிழ்நாடு ஏஐடியூசிக்கு ரூ.50,000- நிதி

செங்கல்பட்டில் தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளன அலுவலகத்தில் ஏஐடியூசி காஞ்சிபுரம் மாவட்டக்குழு கூட்டம் செப். 8 அன்று மாவட்ட தலைவர் எம்.சங்கையா தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி கலந்துகொண்டு தர்மபுரியில் நடைபெற்ற மாநில குழு முடிவுகள் மற்றும் திருப்பூர் அமைப்பு நிலை கூட்ட முடிவுகள் அதனை ஒவ்வொரு சங்கமும் குழுவும் கறாராக நடைமுறைபடுத்த வேண்டும் என்பதை அழுத்தமாக சுட்டி காட்டி பேசினார்.

மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் கே. இரவி டெல்லி தலைமை அலுவலகமான ஏஐடியுசி பவனை பாதுகாத்திட, தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி குறித்தும் ஒவ்வொரு சங்கமும் மாநில குழு முடிவினை ஏற்று அறிவித்த படியும் அதற்கு மேலும் நிதி வழங்க வேண்டும் என்றார்.

மாவட்ட பொதுசெயலாளர் எம்.ஜஹாங்கீர் வேலை அறிக்கையுடன் மாவட்டத்தில் கொரோனா பெருந் தொற்றிற்கு பிறகு தொழிற்சங்கங்கள் சந்தித்து வரும் நெருக்கடிகள் குறித்து பேசினார். மறைமலைநகர் விர்கோ பாலிமர் தொழிற்சங்கத்தினர் நீண்ட நெடிய போராட்டத்திற்கு பின்பு 12 (3) ஒப்பந்தம் மூலம் ஊதிய உயர்வு பெற்று கொடுத்தமைக்காக மாவட்ட ஏஐடியுசிக்கு அளித்த நிதி ரூ.50,000 (ரூ. ஐம்பதாயிரம்) மாநில பொது செயலாளர் டி.எம்.மூர்த்தியிடம் மாவட்ட குழு சார்பில் கே.இரவி மற்றும் எம்.ஜஹாங்கீர் வாழங்கினர். வி.ஆதிமூலம் நன்றி கூறி நிறைவு செய்தார்.

ஆயுள் சந்தா - ரூ.7500.00
ஆண்டு சந்தா - ரூ.750.00
தனிப்பிரதி - ரூ.15.00
ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் மாடி, 142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014
✆: 9444331138

## ஜனசக்தி வளர்ச்சி நிதி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டக்குழு உறுப்பினர் பாண்டி இல்ல திருமண விழாவில் மாநிலக் குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள், நிலக்கோட்டை ஒன்றிய குழு உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். திருமண விழாவில் மணமக்கள் சார்பாக ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ. 2000 வழங்கினர்.

# ர:ஃப்நோட் ரகசியங்கள்

வகுப்பறையின் ரகசிய சுரங்கங்கள் ரப் நோட்டுக்கள், ஒவ்வொருவரும் எழுத பழகுவது ரப் நோட்டின் மூலமாகத்தான், சரியானவற்றையும், தவறான வற்றையும் சரிசமமாகவே ரப் நோட் ஏற்றுக்கொள்ளும். இன்னூல் ரப் நோட் குறித்து மட்டுமல்ல,மாணவர்களுக்கு எவ்வாறு கல்வி தர வேண்டும் என்பது குறித்தும் உள்ளது எனவேதான் ரப் நோட் ரகசியங்கள் என்கிற நூலை ஞா. சந்திரன் எழுதியுள்ளார்.

வித்தியாசமாகச் சிந்திக்கும் துணிவு, புதியனக் கண்டறியும் துணிவு, புதிய பாதைகளில் பயணிக்கும் துணிவு,, முடியாததை முடித்துக் காட்டும் துணிவு இவையெல்லாம் இளமையின் சிறப்பு அடையாளங்கள். எனும் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் எடுத்துக்காட்டுடன் நூல் தொடங்குகிறது. “வாழ்நாள் முழுவதும் உங்களால் ஜீரணிக்க முடியாமல் உள்ளிருந்து தொந்தரவு தரக்கூடிய செய்திகளை மூளைக்குள் திணிப்பது அல்ல கல்வி. வாழ்க்கையை வளப்படுத்துகின்ற,மனிதனை உருவாக்குகின்ற, குணத்தை மேம்படுத்துகின்ற, கருத்துக்களை ஜீரணம் செய்யத்தக்க கல்வியே நாம் வேண்டுவது.” எந்த கல்வியை இன்றைய மாணவர்களுக்கு தரவேண்டும் என்பதை விளக்குகிறார். கல்வி என்பது கபால கல்லறையில் புதைப்பது அல்ல, விதைப்பது தான் என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. பாட நூல்களை மட்டும் பெற்றுத்தரும் கல்விசாலை தொழிற்சாலையே, பாட நூல்களோடு உலக அறிவைத் தேட செய்யும் கல்விச்சாலையே மலர்ச்சோலை ஆகும், “கல்வி பரவாமல், அறிவு உதிக்காமல் நாட்டில் முன்னேற்றம் எப்படி ஏற்பட முடியும்? முதலில் சாதாரண மக்களிடமும் பெண்களிடமும் கல்வியை பரப்பாமல் இப்போதைய நிலைமையை முன்னேற்றவே முடியாது” என விவேகானந்தர் கூறியுள்ளார் என்பதையும் நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். “எப்போதும் யோசி, மூளை ஒரு மிருகம், தீனி போட்டுக் கொண்டே இருக்க வேண்டும் இல்லாவிட்டால் அது தீயதை தின்றுவிடும்,” ஒவ்வொரு மாணவரும் எப்போதும் நல்லவற்றை சிந்திக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகிறார். இந்த நூல் மாணவர்களுக்கும்,ஆசிரியர்களுக்கும் ஒரு கையேடாக விளங்கும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். – **இன்சுவை பாரதி**





**நூலாசிரியர் : ஞா.சந்திரன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை14**
**பக்கங்கள் : 120 விலை: ரூ.110**

## நூல் நயம்

# தமிழக பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமும் சுற்றுச்சூழலும்

தொழில்துறை வளர்ச்சியும்,சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் இன்றைக்கு உலகம் முழுவதும் இருக்கிறது. வளர்ச்சியின் பெயரால் சுற்றுச்சூழலை அழித்து விடாதீர்கள் என்ற குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. தொழில் வளர்ச்சி எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியத்துவம் உடையது சுற்றுச்சூழல். இந்நிலையில்தான் தமிழகம் சமூக பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமும் சுற்றுச்சூழலும் என்ற நூலை ப. கு.ராஜன் எழுதியுள்ளார்.

“முதலாளித்துவ உற்பத்தி முறையின் அறிமுகத்தைத் தொடர்ந்து,இதுநாள் வரை உள்ளூரைந்து கிடந்த பண்ட உற்பத்தியின் விதிகள், மிகவும் வெளிப்படையாகவும், அதிக வலிமையோடும் செயல்பட தொடங்கின. பழைய பிணைப்புகள் தளர்ந்தன. உற்பத்தியாளர்கள் மென்மேலும் சுயேச்சையான, தனித்து ஒதுங்கிய பண்டை உற்பத்தியாளர்கள் ஆக மாற்றப்பட்டனர். மொத்தத்தில் சமுதாயத்தின் உற்பத்தி முழுமையும் திட்டம் இன்மையாலும், நோக்கம் இன்மையாலும், அராஜகத்தாலும் ஆளப்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.” என்கிற எங்கெல்ஸ் வார்த்தைகள் சமூகத்தில் எவ்வாறு உண்மையாக விளங்குகிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.




போதுமான லாபம் கிட்டும் என்றால் முதலாளித்துவம் எதற்கும் அஞ்சாது, நிச்சயமாக 10% லாபம் என்றால் அது எங்கு வேண்டுமென்றாலும் தனது மூலதனத்தை செல்ல அனுமதிக்கும், 20% லாபம் என்றால் மிகுந்த உற்சாகம் கொள்ளும், 50% லாபம் என்றால் அடங்க மறுத்து அத்துமீறும்,நூறு சதவீதம் லாபம் என்றால் எந்த மானுட சட்டத்தையும் தர்மத்தையும் காலில் போட்டு மிதிக்க தயாராக இருக்கும், 300 சதவீதம் லாபம் என்றால் எந்தவித கடும் குற்றத்தையும் செய்யத் தயங்காது,எந்தவிதமான ஆபத்தான முடிவையும் எடுக்கத் தயங்காது, தன்னுடைய நிறுவனத் தலைவர் தூக்கில் தொங்க வேண்டிய அபாயம் இருந்தாலும் தயங்காது, என்பதை மார்க்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலேயே விவரித்துள்ளார்.

தமிழகம் வேளாண்மை,தொழிற்சாலை உற்பத்தி, சேவைத் துறை என பொருளாதாரத்தில் மூன்று அரங்குகளிலும் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்று.அந்த வகையில் பொருளாதார வளர்ச்சி கொண்டு வரும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளுக்கான ஆபத்துக்கள் அதிகம். இந்த முன்னேற்றத்தை பாதிக்காத வண்ணம் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வது ஒரு சிக்கலான சவால். அந்த சவாலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை மார்க்சிய நோக்கில் முன்மொழியும் பணியை செய்கிறது ப. கு. ராஜன் எழுதிய இந்நூல். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். – **சமரன்**

**நூலாசிரியர் : கு. ராஜன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41பி,சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை – 50**
**பக்கங்கள் : 64 விலை: ரூ.70**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

# கிரீஸ் நாட்டில் எழுச்சிமிகு போராட்டங்கள்




**பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், சுய தொழில் புரிவோர், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள் பேரணி:**

அனைத்து தொழிலாளர் போராட்ட முன்னணி (**All-Workers Militant Front (PAME)** 86 வது தெசலோனிகி சர்வதேச வர்த்தக கண்காட்சி திறப்பு விழா நடைபெறும் தெசலோனிகியில், பிரதம மந்திரி கிரியாகோஸ் மிட்சோடாகிஸின் பழைமைவாத நடவடிக்கைகளுக்கு எதிராக நடத்திய மாபெரும் பேரணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், சுயதொழில் செய்வோர், விவசாயிகள், ஓய்வூதியம் பெறுவோர், இளைஞர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.

“சமகால உரிமைகளுக்கான போராட்ட அமைப்பு (**“Organization and Struggle for contemporary rights”**)என்ற முழக்கத்தின் கீழ் தெசலோனிகி நகரத்திலிருந்தும், வடக்கு கிரீஸின் பிற பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள், “பழமைவாத அரசாங்கத்திற்கு புதிய ஜனநாயகம்“ (**ND**) என்ற போர்க்குணமிக்க செய்தியை அனுப்பியுள்ளனர்.

பேரணியின் முன்னணியில், “மலமதினா” ஓயின் தொழிற் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள், பச்சை நிற டிசர்ட் அணிந்து, மிகப் பெரிய பதாகையை ஏந்தியபடி, சமீபத்திய பணிநீக்கங்களைத் திரும்பப் பெறவும், கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் கோரிக்கை எழுப்பி வந்தனர். ஒய்.எம்.சி.ஏ சதுக்கத்தில் ஒன்றுகூடிய போராட்டக் காரர்கள், “தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஒரே குரல், ஒரே முஷ்டி” போன்ற பதாகைகளை ஏந்தியவாறும், முழக்கங்களை எழுப்பியவாறும் நகரின் மையப்பகுதி வழியாக ஊர்வலமாகச் சென்றனர். அதே நேரத்தில், மக்களைப் பயமுறுத்தும் முயற்சியில் மற்றும் நகரத்தில் அச்சம் ஏற்படுத்தும் சூழலை உருவாக்கும் முயற்சியில், மிட்சோடாகிஸின் அரசாங்கம் 5,000 க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகளை அனுப்பியது. எனினும், மக்கள் எழுச்சியை ஒடுக்க முடியவில்லை.

பேரணியில் கிரீஸ் கம்யூ னிஸ்ட் கட்சி யின் (**KKE**) சிசி பொதுச் செயலாளர் டிமிட்ரிஸ் கௌட் சௌம்பாஸ் தலைமையிலான கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**ஏதென்ஸ் நகரில் இலவச கல்விக்காக மாணவர் போராட்டம்:**

ஏதென்ஸ்நகரின்மையப்பகுதியில் மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் பங்கேற்ற மாபெரும் பேரணி செப்டம்பர் 8 அன்று நடைபெற்றது.

உயர்கல்வி நிறுவனங்களில் தீவிரமாகி வரும் அடக்குமுறைகளை மாணவர்கள் தங்களின் போராட்டம் மூலம் பகிரங்கமாகக் கண்டனம் செய்தனர். நிறுவனங்கள் போல் செயல்பட்டு வரும் பல்கலைக் கழகங்களைக் கண்டிப்பது மற்றும் தங்களின் கல்விக்கான உரிமைகளை நிலைநிறுத்துவது ஆகியவையே இப்போராட்டத்தின் நோக்கமாகும்.

மாணவர்களின் இந்தப் போராட்டம் குறித்து கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு கருத்து தெரிவிக்கையில், “அரசாங்கம், இரவு நேர திருடனைப் போல், பிறர் அறியா வண்ணம், போலீசாரைப் பல்கலைக்கழகத்திற்குள் நுழைத்துள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை பெரும்பாலான மாணவர்கள் கண்டித்துள்ளனர். உடனடியாகப் போலீஸாரைத் திரும்பப் பெறவேண்டும் என்று மாணவர் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

பல்கலைக்கழக போலீஸ் அமைப்பை ஸ்தாபிக்க அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ள 50 மில்லியன் யூரோவை மாணவர்களின் உண்மையான தேவைகளை நிறைவேற்றப் பயன்படுத்த வேண்டும். பேராசிரியர்கள் நியமனம், மாணவர் குடியிருப்புகள், நவீன உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாணவர் நலன் ஆகியவற்றுக்காக அந்த நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் இந்த எதேச்சதிகார, அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக வலுவான ஒரு போராட்டத்தை மாணவர்களும் இளைஞர்களும் மேற்கொள்ளவேண்டும் என்று கட்சி அறைகூவல் விடுக்கிறது. இவ்வாறு மாணவர் போராட்டம் குறித்து கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு கருத்து தெரிவித்துள்ளது.

# விலைவாசி உயர்வு மற்றும் மின்சக்தி நெருக்கடி: செக் குடியரசு நாட்டில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக செக் குடியரசு நாட்டின் தலைநகரமான பிராக் நகரில் அரசாங்கத்திற்கு எதிரான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 70,000 க்கும் மேற்பட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

செக் குடியரசு அரசாங்கம், உக்ரைன்ரஷ்ய போரில், உக்ரைன்நேட்டோஅமெரிக்கா அணிக்கு ஆதரவாக இல்லாமல், நடுநிலை வகிக்க வேண்டும்; எரிவாயு தொடர்பாக ரஷ்யா உடனான ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

எரிபொருள் விலையேற்றம், மின்சார கட்டண உயர்வு, அதிகரித்து வரும் பணவீக்கம் (செக் குடியரசில் பணவீக்கம் 18 சதவீதம் ஆகும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இது உச்சபட்சமான பணவீக்கம் ஆகும்) ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியடைந்து விட்டதாகக் குற்றம் சாட்டிய எதிர்க்கட்சிகள், அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தன. ஐந்து கட்சிகள் கொண்ட கூட்டணியின் எண்ணிக்கை பலத்தால் அரசாங்கம் நம்பிக்கை வாக்கெடுப்பில் தப்பிப் பிழைத்தது. எனினும், 70,000 க்கும் அதிகமானோர் பங்கேற்ற மாபெரும் ஆர்ப்பாட்டம் வலுவான கண்டனத்தை அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளது. வருகின்ற செப்டம்பர் 25ஆம் தேதிக்குள் பிரதமர் பீட்டர் பியல்லா தலைமையிலான அரசாங்கம் பதவி விலகவில்லை என்றால் செப்டம்பர் 28 அன்று இதைவிட மிகப்பெரிய கண்டன பேரணி மற்றும் ஆர்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்று எதிர்கட்சிகள் அறிவித்துள்ளன.

# பிரேசிலில் சுரங்க திட்டங்களுக்கு எதிராகப் பூர்வகுடி மக்கள் போராட்டம்

பூர்வகுடி மக்கள் வசித்து வரும் பிரதேசங்களில் சுரங்கத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள சட்ட முன்வடிவுகளை எதிர்த்து 6000 க்கும் அதிகமான பூர்வகுடி மக்கள் தலைநகர் பிரேசிலியாவில் உள்ள நாடாளுமன்றத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர்.

பூர்வகுடி மக்கள் இதுநாள் வரையில் நடத்திய போராட்ட இயக்கங்களில் இந்தப் பேரணி தான் மிகப்பெரிய போராட்டமாகக் கருதப்படுகிறது.

மேலும், சுரங்க திட்டங்கள் குறித்த சட்டமுன் வடிவுகள் மீதான நாடாளுமன்ற வாக்கெடுப்பு நடைபெற உள்ள அதே காலகட்டத்தில் இத்தகைய போராட்டம் நடைபெறுவது குறிப்பிடத்தக்க தாகும்.






# தோழர் ஏ.எம். கோபுவின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல்

**ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளராகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொதுச்செயலாளராகவும் மிகச் சிறப்பாக பணியாற்றியவர் தோழர் ஏ.எம்.கோபு. கடந்த 2012 ஆம் ஆண்டு செப். 13 அன்று உடல்நலக் குறைவினால் இயற்கை எய்தினார். தோழர் ஏ.எம்.கோபுவின் 10 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சி தமிழகம் முழுவதும் நடைபெற்றது.**

**திருவாரூர்:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டியில் ஏ.எம்.கோபு நினைவுதினம் நிகழ்ச்சி நடை பெற்றது. காமராஜர் சிலை அருகில் நடைபெற்ற நினைவஞ் சலி நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநி லக்குழு உறுப்பினர்கள் கே.உலகநாதன் எக்ஸ்.எம். எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஆகியோர் மறைந்த ஏ.எம்.கோபு உருவபடத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.ராஜா, எம்.முருகேசன், வி.முத்துக்குமரன், வி.ஜவஹர் ஒன்றிய செயலாளர், டி.பி.சுந்தர் நகர செயலாளர், காந்தி நகர து.செயலாளர், ஜி.சுப்பிரமணியன் ஒன்றிய நிர்வாகக்குழு, டி.சுரேஷ் ஏஐடியூசி ஒன்றிய பொறுப்பாளர் மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**கும்பகோணம்:** கும்பகோணம் கட்சி அலுவலகத்தில் சிபிஐ மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் நினைவுதின நிகழ்ச்சி நடைபெற்றது. கும்பகோணம் ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.பாலன் அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட நிர்வாகிகள் ஆர்.செந்தில்குமார், டி.ஆர்.குமரப்பா, க.சுந்தர்ராஜன், ஆர்.எஸ்.பாலு, பா.சாமிநாதன், எம்.சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். ஒன்றிய துணைச் செயலாளர் ஏ.ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**சேலம்:** சேலம் மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியூசி சார்பில் ஏ.எம்.கோபு படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்விற்கு கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் ஏ.கந்தன் தலைமை தாங்கினார். ஏஐடியூசி மாவட்ட துணைத்தலைவர் கே.வி.ராஜேந்திரன் மாலை அணிவித்தார். ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் எம்.முனுசாமி ஏஎம்ஜிக்கு புகழஞ்சலி செலுத்திப் பேசினார். மாவட்டக்குழு உறுப்பினர் ஆர்.எல்.முத்துராஜகோபால் நன்றி கூறினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் வி.முருகன். டி.வி.கருணைதாஸ், கே.செல்வம், பா.தினேஷ், எம்.ஷாநவாஸ்கான், எஸ்.சம்பத் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி புறநகர் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்டம் சார்பில் ஏ.எம்.கோபு அவர்களுக்கு புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில நிர்வாகக் குழு உறுப் பினர் த.இந்திரஜித், முன்னாள் மாநில குழு உறுப்பினர் எஸ்.செல்வராஜ், திராவிடமணி, புறநகர் மாவட்டச் செயலாளர் செ.ராஜ்குமார், மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, புறநகர் மாவட்டக்குழு உறுப்பினர் பக்கிரிசாமி, மாணவர் மன்ற செயலாளர் க.இப்ராஹிம், மண்ணச்சநல்லூர் ஒன்றிய செயலாளர் டி.முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

**மணப்பாறை:** மணப்பாறை புத்தாநத்தம் சாலையில் உள்ள நகராட்சி அலுவலகம் அருகில் ஏ.எம்.கோபு திருவுருவப்படத்திற்கு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர். சி.பி.ஐ. நகர செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில நிர்வாககுழு உறுப்பினர் த.இந்திரஜித், போக்குவரத்துகழக மாநில துணை பொது செயலாளர் சுப்ரமணியன், நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி, மாவட்ட குழு உறுப்பினர்கள் பழனிச்சாமி, சௌக்கத்அலி, நல்லுச்சாமி, ராஜேந்திரன், ரவிச்சந்திரன் உட்பட நகரகுழு உறுப்பினர்கள் ஏ.ஐ.டி.யூ.சி நிர்வாகிகள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டு மலர்துவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

**திருச்சி மாநகர் :** திருச்சி கட்சி அலுவலகத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் சிவா தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் எம். செல்வராஜ், ஏ ஐ டி யூ சி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் ஏஐடியூசி நிர்வாகிகள் நடராஜன், அன்சர்தீன், லோகநாதன், சொக்கி. சண்முகம், மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் க.இப்ராகிம், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் செல்வகுமார், மாதர் சங்கம் மாவட்ட நிர்வாகிகள் ஆயிஷா, வை.புஸ்பம், மேற்கு பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி, கிழக்கு பகுதி செயலாளர் சையது அபுதாஹிர் உள்ளிட்ட கலந்து கொண்டனர்.

# குழந்தைகள் பங்கேற்புடன் பாரதி நினைவு நூற்றாண்டு விழா



இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், அனைத்திந்திய முற்போக்குப் பேரவை, அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் ஆகிய அமைப்புகள் இணைந்து மகாகவி பாரதியார் 101வது நினைவு நாளில் 11.9.2022ல் சேலத்தில் உள்ள சிலைக்கு முன்பாக திறந்த வெளி கருத்தரங்கத்தை நடத்தினர். கே.சுவாமிநாதன் தலைமை வகித்தார். கே.வி.ராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.மோகன், அமைப்புகளின் நிர்வாகிகள் எஸ்.சம்பத், டாக்டர் ஆர்.சர்வோத்தமன், டி.வி.கருணைதாஸ், ஈ.ஆர்கே, கவிஞர் எழுத்தாளர் பூமிபாலகன், கோ.மணி வண்ணன், பி.நீலகண்டன், எஸ்.முக மதுஷபி, எஸ்.சௌந்தர்ராஜன், ஆர். எல்.முத்துராஜகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிலைக்கு மாலை அணிவித்து சாரல் இலக்கிய நான்காம் இதழை வெளியிட்டு திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனசக்தி ஆசிரியர் கே.சுப்பராயன் சிறப்புரை ஆற்றினார். த.மா.கா. மேற்கு மாவட்ட செயலாளர் கரு.வெ.சுசீந்திர குமார், இந்திய தேசிய காங்கிரஸ் 'மூத்த தலைவர் தாரை அ.குமரவேலு வாழ்த்துரை வழங்கினர். ல.லோகநாதன் நன்றி கூறினார்.

**கோவை:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மேற்குப் பகுதி கிளை சார்பாக கோவில் மேடு பிரிஸ்க் தொடக்கப் பள்ளி வளாகத்தில் பாரதி நினைவு நூற்றாண்டு விழா செப்டம்பர் 11 காலை குழந்தைகள் பங்கேற்புடன் நடைபெற்றது. கவிஞர் சங்கரி முத்தரசன் பார்வையாளர்களை வரவேற்றார். வழக் கறிஞர் கே.சுப்ரமணியன் தலைமையேற்றார். கே.புருசோத்தமன் சிறப்புரை வழங்கினார். பாரதியைப் பட்டி தொட்டியெங்கும் கொண்டு சென்ற பேராசான் ஜீவா இயற்றிய பாடல்களை இசையமைப்பாளர் ஜி. அருண் இசையமைக்க எம்.வி.ராஜன், க.ஞானகுமார், அசரப் அலி ஆகியோர் பாடி மகிழ்வித்தனர். பேராசிரியர் ராஜ் குமார் ஜீவா முகத்தை ஜீவனுள்ள நிகழோவியமாக வரைந்தார். கவிஞர் நான்சி கோமகன் ஒருங்கிணைப்பில் ஸ்ருதி, கனிஷ்கா, தபஸ்யா, அஃப்னா, ஜெனிலியா, தியா ஆகியோர், ஆடல், பாடல், கதை கவிதை சொல்லல் என அசத்தினர். சஹானா, மு.சௌந்தர்யா, தாரகேஷ், வெற்றிவேல் ஆகியோர் ஜீவா படம் வரைந்து பரிசுகளைப் பெற்றனர்.

நாடகக் கலைஞர் பேரா.த.தீலிப்குமார், ஜீவாவை காமராசர் தாம்பரம் குடிசை வீட்டில் சந்தித்த நிகழ்வை ஒருநபர் நாடகமாக நடித்து ஜீவாவின் எளிய வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டினார்.

பெருமன்றத்தின் மாவட்டச்செயலாளர் ப.பா.ரமணி, பேரா.எஸ்.பெரியசாமி, கவிஞர் ஒடியன் லட்சுமணன், இஸ்கஃப் எஸ்.ராதாகிருஷ்ணன், தோழர் எஸ். கோட்டியப்பன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளைச்செயலாளர் பழனிச்சாமி, துணைப் பேராசிரியர் ந.இராஜேந்திரன் மற்றும் பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். கவிஞர் நான்சி கோமகன் நன்றியுரை வழங்கினார்.

**சேலம்:** சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் சார்பில் பாரதியார் நினைவு நாள் கடைபிடிக்கப்பட்டது. என்.ரகேஷ் பாரதி படத்திற்கு மாலை அணிவித்தார். எஸ்.முருகன், எம்.அர்ச்சுணன், ஜெயவேல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கட்சி மாநில மாநாட்டு தீர்மான புத்தகம் பற்றி...

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில 25 வது மாநாடு திருப்பூரில், 2022 ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா துவக்கி வைக்க, மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக வாழ்த்த, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர்கள் சிறப்புரையாற்ற, கம்பீரமான கருத்தரங்கம் நடைபெற்றது.

மாநாட்டு நிறைவு நாளில் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில், சீருடை அணிந்த செம்படை மணி கணக்கில் திருப்பூரை வலம் வந்தது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் ஆண்களும் பெண்களுமாய் திரண்டு வந்து திருப்பூரைச் செங்கடல் ஆக்கினர். மாநாட்டை விளக்கும் வகையில் ஜனசக்தி கட்டுரை, மாநாட்டு நிகழ்வுகள் அனைத்தையும் விட்டுப் போகாமல் தொகுத்து தந்துள்ளது. மாநாடு தனது வழக்கமான பணிகளைச் செய்ததுடன், தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகள் குறித்து 133 தீர்மானங்களை நிறைவேற்றியது. இவை முன் வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வேண்டி, மாண்புமிகு துறை அமைச்சர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களுக்கு அனுப்பி உள்ளோம்.

தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பினால் மட்டும் போதாது.. அந்தந்தப் பகுதிகளில் நமது அணிகள் இக் கோரிக்கைகளை முன்னிறுத்தி, அவை நிறைவேற்றப்படும் வரையில் தொடர் போராட்டங்களில் ஈடுபட வேண்டும். இவற்றில் பெற்ற வெற்றிகளை அடுத்த மாநாடு பரிசீலிக்க வேண்டும்.

மாநாட்டின் நிகழ்வுகளை, கருத்தரங்க உரைகளை, தீர்மானங்களைத் தொகுத்து, மாநாட்டை மீள் காட்சிப்படுத்தும் வகையிலும், அடுத்த மாநாடு வரை களப்போராட்டங்களுக்கு செயலூக்கம் தரும் வகையிலும் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. அணிகளிடம் கொண்டு சேர்ப்பது கட்சி பொறுப்பாளர்களின் கடமை.

தோழமைமிக்க

இரா.முத்தரசன்
மாநிலச் செயலாளர்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 **Posted on 17.09.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Day of Publication: Every Thursday WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023 Registered with Registrar of Newspapers for India, Under Regd No: 1222/57

>> 1ம் பக்கத் தொடர்ச்சி






ஏஐடியூசியின் மாநிலச் செயலாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட நிர்வாகிகள் சி.தங்கவேல், கே.எம்.செல்வராஜ், சி.சிவசாமி, என்.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், வழக்கறிஞர் ஜி.பி.சக்திவேல், பி.சுப்ரமணியம், எம்.சண்முகம், டி.கந்தவேல் மற்றும் எஸ்.மீனாட்சி சுப்ரமணியம் வங்கி ஊழியர் சங்கம், தங்கவேல் – ஜி.ஐ.சி, குமார் – எல்.ஐ.சி., இராபர்ட் பி.எஸ்.என்.எல். அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.




**விருதுநகர்:** ராஜபாளையத்தில் சுந்தர்ராஜன் தலைமை வகித்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம்எக்ஸ் எம்பி , மாநில குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பாலமுருகன், நகர செயலாளர் விஜயன், ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக இராஜபாளையம் ஏஐடியுசி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் சங்க முறைகேடுகளை கண்டித்தும் தலைவர்கள் பேசினர். சத்திரப்பட்டியில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி தலைமை வகித்தார். இராமச்சந்திரன், மோகன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகரில் அரசு போக்குவரத்து சங்க மூர்த்தி தலைமை வகித்தார். எஸ்.பழனிக்குமார், சக்கணன், சுவாமிநாதன், முத்துக்குமார், தஒவாஇ முருகேசன், மாதர்சங்க மாரிஸ்வரி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சிவகாசியில் ஏஐடியுசி லோடுமேன் சங்க தலைவர் முனியசாமி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் சமுத்திரம், ஜீவா, டிமிட்ரோ உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். திருச்சுழி ஒன்றியத்தில் முத்துராமலிங்கபுரத்தில் குமரேசன் தலைமை வகித்தார், கரிசல்குளத்தில் அழகம்மாள் தலைமை வகித்தார், இவ்விடங்களில் கட்டிட தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் தங்கராஜ், ஒன்றிய செயலாளர் செல்வம், முத்துராமு ஆகியோர் பேசினர்.

**தருமபுரி:** தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்டக்குழு சார்பில் ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தலைமை வகித்தார். கட்டுமான சங்க மாவட்ட தலைவர் குழந்தைவேலு, முனுசாமி, முனியம்மாள், விஜயா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயலாளர் எம். ராதாகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

ஏஐடியூசி மாவட்ட துணை தலைவர் சுதர்சனன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன், சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் சி.மாதையன், இண்டூர் வட்டார செயலாளர் மாது, கொசுப்புழு ஒழிப்பு சங்க மாவட்ட செயலாளர் சின்னமணி, அமைப்புசாரா மாவட்ட செயலாளர் முருகன் மற்றும் நிர்வாகிகள் சண்முகம், முருகேசன், நாகராஜன், கந்தசாமி, இராமலிங்கம், முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியில் மாநிலக்குழு உறுப்பினர் ஏ.சி.மணி நன்றி கூறினார்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரில் ஏஐடியூசி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலக்குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன் தலைமை தாங்கினார். ஏஐடியூசி நிர்வாகிகள் மு.ஆறுமுகம், ரணதேவ், மகேஷ்வரன், சுகுமார் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம்:** சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் வி.முருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் எம்.முனுசாமி பேசினார். ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து மின்சார சம்மேளனம் வி.ராஜேந்திரன் விளக்கவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எஸ்.சம்பத் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் டி.வி.கருணைதாஸ், எம்.வாசுதேவன், ப.தினேஷ், எம்.லோகநாதன் உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சை:** தஞ்சாவூர் ரயிலடி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் வெ.சேவையா ஆர்ப்பாட்டத்தினை துவக்கி வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் துரை.மதிவாணன், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், மின்வாரிய சம்மேளன துணைத் தலைவர் பொன்.தங்கவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




**திருச்சி புறநகர் :** திருச்சி புறநகர் மாவட்டம், மணப்பாறை மதுரை சாலையில் உள்ள நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அமைப்புசாரா தொழிற்சங்கத்தின் செயலாளர் நல்லுசாமி தலைமை வகித்தார். போக்குவரத்து கழக கிளை செயலாளர் மாசிமலை சுந்தர்ராஜன், நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் குமார், அருணகிரி, காமாட்சி, நிஜாம், கிருஷ்ண பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட துணை செயலாளர் சுப்பிரமணியன், வி.ச. மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, உள்ளாட்சி பணியாளர் சங்க துணை செயலாளர் ஜனசக்தி உசேன், ஆட்டோ சங்க மாவட்ட துணை செயலாளர் நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி, முன்னாள் நகரமன்ற உறுப்பினர் தர கடை சங்க பொறுப்பாளர் சவுக்கத்அலி, மணிகண்டன், ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிற்சங்க மாவட்ட தலைவர் த.இந்திரஜித் கவனஈர்ப்பு உரை நிகழ்த்தினார்.

**தென்காசி** : தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியூசி மாவட்டத் தலைவர் சி.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். சிபிஐ தென்காசி மாவட்ட செயலாளர் டி. இசக்கிதுரை, ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட பொதுச் செயலாளர் டி.சுப்பையா, விசைத்தறி சங்கம் ப.வேலு, முன்னாள் மாநில குழு உறுப்பினர் வேலாயுதம், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட பொருளாளர் பொ.ரவிக்குமார் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

**அரியலூர்:** அரியலூர் அண்ணா சிலை அருகில் ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் டி.தண்டபாணி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி தலைவர் ஆர்.தனுசிங் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




**ஈரோடு:** ஈரோடு, சூரம்பட்டி நால்ரோட்டில் ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்டத் துணைத் தலைவர் டி.ஏ.செல்வம், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர்கள் பி.எல்.சிவராமன், எம்.குணசேகரன், சங்க நிர்வாகிகள் தோழர்கள் பி.வி.ஸ்ரீதரன் (வங்கி), மு.வரதராஜன் (கைத்தறி), கே.சந்திரசேகர் (சுமை), ஆர்.மணியன் (உள்ளாட்சி), எஸ்.கந்தசாமி (கட்டடம்), ஜி.கல்யாணசுந்தரம் (சிபிஐ) உள்ளிட்டோர் உரையாற்றினர்.

**திருவண்ணாமலை :** திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள அறிவொளிபூங்கா எதிரில் ஏஐடியூசி திருவண்ணாமலை மாவட்டக்குழு சார்பில் மாவட்ட செயலாளர் த.ராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்.வெங்கடேசன், வி.குப்புரங்கன், ஏ.பாஸ்கரன், பி.கனகராணி, கே.ஏ.ஹமீது ஆர்.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி மாவட்ட தலைவர் வே.முத்தையன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் இரா. தங்கராஜ், மாவட்ட துணை செயலாளர் க.சம்பத், மாவட்ட நிர்வாகக்குழு கு.ஜோதி, மாவட்ட பொதுச்செயலாளர் எம்.எஸ். மாதேஸ்வரன், டாஸ்மாக் ஏஐடியூசி மாவட்ட பொருளாளர் பி.பாண்டியன் கட்டுமானம் மாநில துணைப் பொதுச் செயலாளர் சி.பன்னீர்செல்வம் தெருவியாபார தொழிலாளர் இணையம் மாநிலக்குழு எம்.ஞானவேல், எஸ்.எல்.எஸ்.மில் ஏ.ஜெயக்குமார் ஆகியோர் பேசினர்.




**ராமநாதபுரம்:** ஏஐடியூசி மாவட்ட செயலாளர் என்.கே.ராஜன் தலைமையிலும், மாவட்ட தலைவர் எஸ்.பி.ராதா முன்னிலை யிலும் ராமநாதபுரத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பெருமாள், கட்டுமான தொழிற்சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர். தர்மராஜ், திருவாடானை தாலுகா செயலாளர் முருகேசன், மீனவ தொழிற்சங்கத்தின் சார்பில் தங்கராசு, முதுகுளத்தூர் தாலுகா செயலாளர் ஜெயசீலன், ராமநாதபுரம் நகர் வட்டாரச் செயலாளர் களஞ்சியம், குருசாமி, நாகராஜன்உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

# தாங்கமுடியாத மின்கட்டண உயர்வு: மறுபரிசீலனை செய்து, குறைக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசு மின் விநியோகக் கட்டணத்தை 32 சதவீதம் முதல் 53 சதவீதம் வரை கடுமையாக உயர்த்தியுள்ளது. இதன் மூலம் மின் வாரியத்துக்கு 59 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது மின் நுகர்வோர் தலையில் கடுமையான செலவுச் சுமை ஏற்றப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் மின்கட்டணம் குறைவு என்பதால், ஒன்றிய அரசு மின் கட்டணத்தை உயர்த்துமாறு தொடர்ந்து நிர்பந்தித்து வருகிறது என்றும், கடந்த எட்டு ஆண்டுகளாக மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பதையும் காரணம் காட்டி கட்டண உயர்வை நியாயப்படுத்த முயற்சிப்பது சரியல்ல. தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களுடன் மின்சாரம் கொள்முதல் தொடர்பான ஒப்பந்தங்கள் வாரியத்துக்கு ஏற்படுத்தும் பெருநஷ்டத்தை மூடிமறைப்பது ஏன்? என்ற வினாவுக்கும் ஏற்க தக்க விளக்கம் கிடைக்கவில்லை.

தற்போது, நடைமுறையில் உள்ள 100 யூனிட் இலவச மின்சாரமும், மானிய சலுகை கட்டண முறையும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது எனினும், இந்தக் கட்டணச் சலுகையை விரும்பாதவர்கள், வாரியத்துக்கு தெரிவிக்கலாம் என்று கூறியிருப்பது மறைமுக நிர்பந்தம் மூலம் மானியங்களை பறிக்கும் செயலாகவே அமையும் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

மின்கட்டண உயர்வு தவிர நிலைக் கட்டணம் வசூலிக்கப்படும் என்பதும், ஆண்டுக்கு 6 சதவிதம் மின்கட்டண உயர்வு செய்து கொள்ளவும் வழிவகை செய்திருப்பதை ஏற்க முடியாது.

பாஜக ஒன்றிய அரசின் நவ தாராளமயக் கொள்கைகள், மக்கள் வாழ்க்கை தரத்தில் கடுமையான தாக்குதலை நடத்தி, சரித்து வீழ்த்தி வரும் சூழலில், தமிழ்நாடு அரசு மின்கட்டணத்தை மிகக் கடுமையான அளவில் உயர்த்தியிருப்பது மக்களிடம் ஆத்திரத்தையும், அதிருப்தியினையும் ஏற்படுத்தியுள்ளது. மின்கட்டண உயர்வு தொடர்பான கருத்துக் கேட்புக் கூட்டங்களில் மின்நுகர்வோர் கூறிய கருத்துக்களுக்கு மதிப்பளித்து, உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணத்தை நிறுத்தி வைத்து, நிலைக் கட்டணம் வசூலிப்பதையும், ஆண்டுக்கு 6 சதவீதம் மின் கட்டண உயர்வு செய்யும் திட்டத்தையும் ரத்து செய்ய வேண்டும். மின்கட்டணத்தை வெகுவாக குறைத்து, புதிய அறிவிப்பை வெளியிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.